
செங்கை ஆழியான்
கொத்தியின்
காதல்
மாணிக்கப் பிரசுரம்

# கொத்தியின் காதல்

## செங்கை ஆழியான்

வெளியீடு:

மாணிக்கம் பிரசுரம்

29. கல்யாணி வீதி கொழும்பு-6

# Koththipin Kathal

by

Chenkai Aaliyan

**Price 3-40**

*First Edition*
*April 1975*
*Copy Rights*
*Reserved*
*With the Publishers.*

*Publishers and Sole Distributors:*
*'Manickam Publishers'*
*29, Kalyani Road, Colombo-6.*

# பதிப்புரை....

இதோ மீண்டும் ஒரு மலர் உங்கள் கைகளில்!

யுக மாறுதல்களின் சுழற்சியில் பூத்த புது மலர் இது!

சம்பிரதாயங்கள் என்னும் ஒரு வட்டத்தினுள்ளே அமர்ந்திருந்து படைத்த வெறும் இலக்கியக் கோஷங்களை தகர்த்தெறிந்து விட்ட போர் முனையில் பூத்த நகைச்சுவை மலர் இது.

சிரிக்க வைப்பதற்கு மட்டுமல்ல! சமுதாய வளைவு சுளிவுகளை ஆணித்தரமாகச் சாடி நிற்கும் புரட்சிகர நகைச்சுவைக்கும் வழி வகுத்து விட்ட ஒரு காதல் காவியம் இது,

இன்றைய இளம் தலை முறை எழுத்தாளர் அணியின் முன்னணியில் நிற்கும் செங்கை ஆழியான்—

இதன் சிற்பி.

ஏற்கனவே இவருடைய இந்த ஆக்கம் சிரித்திரனில தொடர் நவீனமாக வெளிவந்த போது கிடைத்த வரவேற்பு ஈழத் தமிழ் இலக்கிய உலகை பிரமிக்க வைத்தது.

இதே நவீனம் — மீண்டும் புதிய மாறுதல்களுடன் எமது மூன்ருவது வெளியீடாக நூலுருவில் வெளிவந்திருக்கிறது.

எமது பிரசுரங்களுக்கு என்றுமே பேராதரவை நல்கி வந்த வாசகர்கள் இதனையும் மனமுவந்து ஏற்பார்கள் என நம்புகிறோம்.

இந்த 'கொத்தியின் காதல்' நவீனத்தை வாசித்து மகிழவிருக்கும் உங்களுக்கு எமது நான்காவது வெளியீடாக வெளிவரவிருக்கும் 'காற்றில் மிதக்கும் சருகுகளின்' படைப்பாளரைப் பற்றி ஒரு வார்த்தை...

இவர்... ஈழத்து சமூகஇலக்கிய வரலாற்றில் புதியதொரு தாக்கத்துடன் கூடிய மறுமலர்ச்சியை உருவாக்கிய 'யுகசந்தி' நாவலின் படைப்பாளர் 'மணிவாணன்' அவர்கள்.

இந்த நவீனம் இலக்கிய வாசகர்களின் நன் மதிப்பைப் பெற்ற 'மாணிக்கப் பிரசுரத்தினரின்' நான்காவது வெளியீடாக வரவிருக்கின்றது.

பதிப்பாசிரியர்

# முன்னுரை

இன்று ஈழத்தின் மிகப்பிரபலமான எழுத்தாளன் அவன். பிரச்சினைக்குரியவன்.

அவன் எழுத்துக்களும் கதைக்களங்களும் சிலருக்குத் திகைப்பையும், சிலருக்குப் புரியாமையையும் ஏற்படுத்துகின்றன.

யார் அந்தச் சிலர்? அவன் வளர்ச்சிகண்டு பொருமுவோர்.

அவர்களுக்குப் பல மயக்கங்கள்.

அவன் பெயரால் —

சமகால வரலாறு, —வாழ்வின் பயங்கர உண்மைகள்— —எரியும் பிரச்சினைகள், —பண்டைய வரலாறுகள், —மனித நடப்புகளின் சிரிப்பூட்டும் விமர்சனங்கள், — அனைத்தும் நாவல்களாக, சிறுகதைகளாக வெளிவருகின்றன.

அவன் தானா இவன்? இவன் தானா அவன்?...

அதை எழுதியவன் தானா, இதையும் எழுதினான்?

— இருக்கும் பிரச்சினைகள் போதாவென்று, அவனது நாவல் ஒன்று சென்றவாண்டு வெளியாயிற்று.

சிலரிட் சிலர் மௌனமாயினர். வாய் திறந்தோர் வாழ்த்திப் போற்றினர். வாய் திறக்க வழியற்றோர் வசை பொழிய வீதியளக்கும் வேலையற்ற சிலரைத் திரட்டினர்.

அவனது நாவல் வசையிலேயே வேகமாக விற்பனையாகியது.

— வாடைக்காற்று.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், இத்தனைக்கும் எழுத்தாளனின் சுதந்திர உரிமையைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொள்ளும் எந்தவொரு ஈழத்து எழுத்தாளனும் தன் சக எழுத்தாளனுக்கு நேர்ந்த இந்தப் போராட்டத்தில் பங்கு கொள்ளவில்லை. அவனுக்கு ஆதரவாகத்தான் இல்லாவிட்டாலும் உண்மையான அறிவு ரீதியான விமர்சன ரீதியில், இந்த நாவலால் ஒரு சமூகத்திற்கு இழுக்கு ஏற்பட்டுள்ளது தானா என்று சமூக, வரலாற்றுப் பண்பினடியாக ஒரு வரி தானும் எழுதவில்லை. இவர்கள் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்காகப் பொறுப்புடன் பணி புரிபவர்கள் என்று கூறிக்கொள்வதில் பின் நிற்காதவர்கள். அற்பத்திற்கெல்லாம் "ஆ... ஊ..." என ஆரவாரம் செய்யும் இவர்கள் உண்மையான எழுத்தை மறைக்கிறார்கள்.

"மயான பூமி" — அவனது புரட்சிகரப் படைப்பு. சமகால வரலாற்றுப் பண்பினடியாக விரிந்த பூமி. ஈழத்து நாவல் இலக்கியத்தில் அவனை உயர்த்திற்று.

"போராடப் பிறந்தவர்கள்" — அவனது சமூகப் பிரக்ஞைமிக்க போராட்ட உணர்வின் அறை கூவல். செம்மலர் பூப்பதை எதிர்நோக்கும் இவர்களின் காதுகளில் இவனின் அறைகூவல் தோழமை மிக்க அவர்கட்குக் கேட்கவேயில்லை.

"வாடைக்காற்று" — மகத்தான நாவலென அமெரிக்க ஆராய்ச்சிச் சஞ்சிகையில் பேராசிரியர் ஒருவரால் மிகவும் வியந்து பாராட்டி விமர்சனம் செய்யப்பட்ட நாவல். சிங்கள மொழியில் விரைவில் வெளிவரவிருக்கின்றது.

ஆயினும் அவன் தளரவில்லை. தன் எழுத்தைப் புனித மாகக் கருதினான். சமூகத்தை நேசித்தான். புனித மிக்க கரங்கள் தன்னை அரவணைக்கும் என எண்ணினான்.

அவன் நம்பிக்கை வீண் போகவில்லை-

அவனின் நகைச்சுவை நாவல்கள் அவர்கட்குப் புரிய வில்லை. அவர்கட்கு நகைச்சுவை இலக்கியத்தின் பணி புரியவில்லை.

வாழ்வின் உண்மைகளை அப்பட்டமாக அப்படியே வாந்தி எடுப்பதுதான் உயர் எழுத்து என்று எண்ணுகிறார் கள். ஆனாலும் அவர்கள் எழுத்திலுள்ள நகைச்சுவை இவனுக்கு மிகவும் பிடித்திருக்கின்றது. — யதார்த்தம் என்று கூறிக்கொண்டு யாவும் கற்பனையே என அவர்கள் முடிக்கும் வாக்கியம் இவனுக்குச் சிரிப்பூட்டும்.

இன்று உலகிலேயே பல்வேறு மொழிகளில் நாடோ றும் நூறு பத்திரிகைகளுக்கு மேல் பிரசுரம் செய்யப்படும் ''ஆட் புக்வால்ட்''டின் கட்டுரைகள் யாவும் நகைச்சுவைக் கட்டுரைகளே. அவை விஞ்ஞான வளர்ச்சியை, அரசியலை, வேலையில்லாத் திண்டாட்டத்தை எல்லாம் விமர்சிக்கின் றன. ஸ்டிரைக் பற்றி அமெரிக்கரான 'புக்வால்டின்' கட் டுரையை ருசிய நாடு போன்றவையே தம் மொழிகளில் மறுபிரசுரம் செய்கின்றனவென்றால், நகைச்சுவையின் பயனை இவர்களைவிட இவர்களின் மூதாதையர்கள் நன்கு உணர்ந் திருக்கிறார்கள் என்றுதானே அர்த்தம்?

நகைச்சுவை என்பது மனிதனின் பலவீனத்தை முகம் சுண்ட, இதயம் நோகக் காட்டுவதில்லை. மனிதர்களின் பல வீனத்தைப் பொதுமையாக்கி, தம் குறைபாட்டைத்தாமே உணர்ந்து வாய்விட்டுச் சிரிக்க வைப்பதாகும். புரட்சிகர எழுத்துக்கள் சாதிக்க விரும்புவதை அவன் நகைச்சுவை மூலமும் சாதிக்க முயல்வதை ''கொத்தியின் காதலில்'' காணலாம். பலரின் யதார்த்த நாவல்களின் நோக்கம்

நல்லதாக விளங்கினும் வாசகரின் மனதைக் கவரத் தவறு வது அவற்றின் வரட்சித் தன்மையினுலேயே. அந்நிலையை நகைச்சுவை மூலம் மாற்றிவிடலாம் என எண்ணினுன்.

அவனுடன் தொடர்பு கொள்ளும் வாசகர் மூலம் அவன் நோக்கம் வெற்றிப் பாதையை நோக்கி எட்டி நடை போடுவதாக உணர்கின்ருன்.

அவனின் எண்ணத்தைப் புரிந்து கொண்டு உதவிபுரிய வந்தவர்கள் மூவர்.

ஒருவர் 'சிரித்திரன்' ஆசிரியர். கொத்தியின் காதலைத் தன் ஏட்டில் அரங்கேற்றி உலவவிட்டவர். நன்றிக்குரியவர்.

இரண்டாமவர் 'மாணிக்கம்' ஆசிரியர். கொத்தியின் காதலை நூலுருவில் வெளியிடுபவர். பாராட்டுக்கும் நன்றிக் குமுரியவர்.

மூன்ருமவர் "செள" என்ற புனைப்பெயரில் ஒளிந்திருக் கும் எஸ். கே. செளந்தரராஜா (B. Sc. Dip. in Ed.) ஈழத் தின் பெருமையை உலகெங்கும் பறைசாற்றும் திறமை கொண்ட ஓவியர். கொத்தியின்காதலுக்கு உள்உருவக ஓவி யம் வரைந்திருக்கின்ருர். அன்பிற்கும் நன்றிக்குமுரியவர்.

வெளி அட்டைப் பட ஓவியத்தை வரைந்த மாணிக்க ஸ்தாபன ஓவியக் கலைஞர் பாலன். பாராட்டுக்குரியவர்.

அதிகம் ஏன்...!

செட்டிகுளம்.
16 / 3 / 75

செங்கை ஆழியான்

# நுழைவாயில்

கவிஞர் நவாலியூர் சு. சொக்கநாதன் அவர்களுக்கே இந்த நாவல் சமர்ப்பணமாகும். ஏனெனில், 'கொத்தியின் காதல்' என்ற இந்த நவீனத்தின் பிதா அவரே. 'பேய்க் கலியாணம்' என்ற தலைப்பில், அவர் ஒரு கவிதையை அருமையாகப் பாடியுள்ளார். அக்கவிதையைப் படித்ததினால் ஏற்பட்ட மன அருட்சியினால், இந்த நகைச் சுவை நவீனத்தை எழுதினேன். இக் கவிதை 'சிட்டுக் குருவி' என்ற கவிதை நூலில் உள்ளது. சு. சொக்கநாதன், வி. கந்தவனம், ஈழவாணன் ஆகிய மூன்று கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு இது.

'வைகாசி அத்தமது வந்தவொரு நாளில்
வளர்குளிகன் படுபட்சி அட்டமியுங் கூட
மெய்யான நடுச்சாம வேளையது வராவ
விறற்பேய்கள் செய்யுமொரு கல்யாணம் பாரீர்!'

—இது ஒரு பேய்க்கதைதான். ஆனால், இதில் வரும் பேய்களைக் கண்டு வாசகர்கள் பயப்படவோ, திகிலுறவோ மாட்டார்கள். அப்பேய்களுக்காக பரிதாபப்படவே செய்வார்கள். கொத்தியின் சோகம் நிறைந்த காதல் வரலாறு இது!



# கொத்தியின் காதல்

## அத்தியாயம் 1

## சுடலைமாடனின் சோகம்

ஒரு நாள், அமாவாசை இரவு. நள்ளிரவு கடந்து ஒரு சாமம் இருக்கும். கொக்குவில் புகையிரத நிலையத்திற்கு முன் னால், பனைகளுக்கும், முட் பற்றைகளுக்கும் மத்தியில் அமைந் திருந்த சுடலையில் பிணம் ஒன்று எரிந்து அடங்கிக் கொண்டி ருந்தது.

இருள் கவிந்த அந்தப் பேயிரவில், பனைகள் இராச்சதக் கால்களாகச் சரசரத்து ஆடின. மயானத்தின் மத்தியில் சடைத்து ஓங்கி வளர்ந்திருந்த ஆல மரமும் காற்றிற்குத் தாளம் போடுவது போலக் கிளைகளை அசைத்துக் கொண்டி ருந்தது.

நீறுகிக் கொண்டிருந்த அந்தப் பிண மேடையில், பரவிக் கிடந்த தணல் கங்குகள் கடும் இருளில் வைரங்களாக மின் னின. பிணம் எரிக்கும் இச் சாம்பல் மேட்டின் மீது, ஆல மரத்தின் பாரிய கிளை ஒன்று படர்ந்திருந்தது.

அந்தக் கிளையில் சுடலைமாடனும் எருமைப்பல்லனும் அமர்ந்திருந்தார்கள். அவர்களது பாரத்தைத் தாங்க முடியா மல் அந்தப் பெரிய ஆலங்கிளை சிறிது தாழ்ந்து இருந்தது.

சுடலைமாடனின் கரிய முகத்தில் கவலை படர்ந்திருந்தது. அவன் எருமைப் பல்லனை நிமிர்ந்து பார்த்துவிட்டு நெடு மூச் சொன்றை விட்டான். அவனது துருத்தி போன்ற நாசித் துளைகளலிருந்து வெளிவந்த அனல் காற்று புகையாகப் பாய்ந்தது.

'சுடலைமாடா... உனக்கு என்ன கவலை? பேய் உலகிலேயே மிகுந்த விகாரமானவன் நீ! என்னைச் சொல்லு, நமது குலத்

திலே மிக அழகனுகப் பிறந்த என்னை எவன் ஏறெடுத்துப் பார்க்கிறுள்? உனக்கென்னப்பா... உன் மச்சாள் கொத்தி உனக்காகத் தவம் கிடக்கிறுள். அவள் இருக்க உனக்கேன் கவலை...?' என்று எருமைப்பல்லன் கேட்டான்.

(பேய்களில் மிகுந்த விகாரம்தான் சிறந்த அழகு என் பதை வாசகர்கள் உணர்ந்து கொள்க)

'கொத்தியால்தானப்பா, இன்றைக்கு எனக்குக் கவலை...'



'ஆலம் கிளையில் எருமைப்பல்லனும் சுடலைமாடனும்...'

'என்ன நடந்தது...?'

'என்ன நடக்கவில்லை...?' என்று பெருமூச்சுவிட்டான் சுடலைமாடன். அவன் நாசித் துளைகளில் இருந்து வெளிவந்த கரிய புகை போல, வெகு தூரத்திலும் 'புக்...புக்...' கென்று புகை கிளம்பியது. அத்தோடு 'கூ....' என்ற இரைச்சலும் எழுந்தது. சற்று நேரம் செல்ல கண்ணைப் பறிக்கும் ஒளிக் கதிர்களும் தோன்றின.

சுடலைமாடன் திடுக்கிட்டுப் போனான். 'சடார்' என்று பாய்ந்து மறுகிளையில் அமர்ந்தான். அவனின் பதட்டத்தைக் கண்ட எருமைப் பல்லன் 'கூய்...கூய்...' என்று சிரித்தான்.

'உதுக்குப் போய் பயப்படுகிறியே? உதுதான் றெயில்... உந்த மனிசன்கள் செய்து ஓட் விட்டிருக்கிறான்கள்... இந்தச் சுடலைக்குப் பக்கத்தாலே றெயில் பாதையைப் போட்டு, றெயிலையும் ஓட விட்டதாலே, எங்கடை சுடலையின் அமைதியே பாழாய்ப் போச்சுது... அண்டைக்குப்பார்... என்ரை தங்கச்சி சோனிப்புட்டுவின்ரை தகப்பனில்லாப் பிள்ளை... எங்கடை குடியிலேயே கொஞ்சம் விகாரமானவன் — றெயில் பாதையிலே அமர்ந்திருந்து விளையாடிக் கொண்டிருந்தான். விளையாட்டிலே றெயில் வந்ததைக் கவனிக்கவில்லை. ஒரே அடி... என்ரை மருமோனுக்கு விகாரத்தைக் கொடுத்துக் கொண்டிருந்த யானைப் பற்கள் மூன்றும் சரி...! ஆள் தப்பினது அருந்தப்பு... இப்பவும் அவன் படுக்கையிலைதான்! மனிசரைக் கண்டால் இப்ப அவனுக்குக் குலை நடுக்கம்...'

'கூ'வென்று இரைந்தபடியே 'றெயில்' சுடலையைக் கடந்து மறைந்தது. அதனையே வெறித்துப் பார்த்தபடி சுடலைமாடன் இருந்தான். அவனுக்கு கலக்கம் இன்னமும் தீரவில்லை.


'நீ சரியான பயந்தனி...' என்றான் எருமைப்பல்லன்... உப்படிப் பயப்படக் கூடாது...'

'உதைத்தான் அப்பா கொத்தியும் சொல்கிறாள்...'

'உது என்ன புதுக் கதை'

'புதுக் கதைதான், அப்பா! என்ரை வாழ்வைப் பறிக்கும்

கதை... அவள் என்னைக் கேட்கிறாள் 'நீ சரியான பயந்தனி' என்று...' கண்களைத் துடைத்துக் கொண்டான் சுடலைமாடன். எருமைப்பல்லனுக்கும் அழுகை வந்தது. சுடலைமாடன் தொடர்ந்தான்.



கொத்தியும் சுடலைமாடனும்
'நீ சரியான பயந்தனி'

'உன்னை விகாரத்தைக் கண்டு மயங்கித்தான் நானுன்னைக் காதலிச்சனான். நீ இவ்வளவு பயந்தனி என்றால் காதலிச்சிருக்க மாட்டான் என்கிறாளப்பா, கொத்தி! கொத்தியில்லாமல் என்னால் இருக்க முடியாதப்பா' என்று விம்மி விம்மி அழுதான்' சுடலைமாடன். விழிக் குழிகளிலிருந்து பொங்கி வழிந்த கண்ணீர், கீழே எரிந்து நீறு பூத்திருந்த பிணமேட்டில் விழுந்து 'புஸ்... புஸ்...' என்று சீறின.

'அழாமல் விசயத்தைச் சொல்லு'

வானத்தை அண்ணாந்து பார்த்து விட்டு, சுடலைமாடன் கூறுவான்:

'எனக்கு ஒரு ஒன்றை விட்ட தம்பி இருக்கிறான்... எறிமாடன் என்று...'

'ஓ... எனக்கு அவனைத் தெரியும். பொல்லாத பயல்...

என்ரை தங்கச்சி சோனிப்புட்டுவின்ரை புரிசனை — அதுதான் என்ரை மச்சான்ரை காலை, நண்டுக் கால் முறிப்பது போல முறிச்சு அனுப்பினவன் அவன்தான். அதுக்குப்பிறகு அந்தாள் நடக்கேலாமல் கிடந்து செத்தது!... ஒரு நாளைக்கு எறிமாடன்ரை காலை முறிக்கிறது என்றுதான் இருக்கிறன்... அவனுக்கும் உனக்கும் என்ன?'

'அந்தப் போக்சிரிப்பயல் இப்ப கொத்திக்குப் பின்னாலை சுத்துறான். எங்கை போனாலும் பல்லை இளிச்சுக் கொண்டு திரிகிறான். கொத்தியின்ரை தேப்பன் ஊத்தைக்குடியனையும் எப்படியோ வளைச்சுப்போட்டான். கொத்தியைத் தனக்குச் செய்து தரும்படியும் கேட்டுக்கொண்டு திரியிறான். கொத்தி அழுகிறாள்... எப்படியாவது எறிமாடனை உதைச்சு அனுப்பிப் போட்டுத் தன்னைக் கலியாணம் செய்யும்படி.... நான் என்ன செய்ய...? எனக்கு எறிமாடனை நினைச்சாலே கைகாலெல்லாம் பதறுகிறது...'

'அப்ப, கொத்தியைத் தாரை வார்க்கவேண்டியதுதான்'

'டேய்... டேய்... எருமைப்பல்லா, நீயா அப்படிச் சொல்கிறாய்? கொத்தியை எப்படியடா நான் தாரை வார்ப்பேன்...? அவள் என் உயிர்... அவளே தான்...... நானே அவள்...' என்று கூவியபடியே சுடலைமாடன் எழுந்தான். ஆலமரத்தின் பழைய கொப்பில் கொத்தி இருப்பது போல அவனுக்கு ஒரு பிரமை.

'ஆ... என் அன்பே கொத்தி!' என்று கத்தியபடியே' கைகளை விரித்துக் கொண்டு தாவினான் சுடலைமாடன்.

ஆலங்கிளையில் தடுக்குண்டு, கீழே எரிந்து நீறு பூத்திருந்த தணல் கும்பத்தின் மேல் அலமலக்க, மல்லாந்து வீழ்ந்தான். மறுகணம்—

'கூய்...' என்ற ஓலம் அப் பிரதேசம் எங்கும் எதிர் ஒலித்தது.

'சுடலைமாடனின் முதுகுப்புற மயிர்க்கற்றைகள் பொசிந்து மணத்தன.


'ஐயோ, என் விகாரம் போய்விட்டதே? என் முதுகுப் புற மயிரை ஆசையோடு தடவி விடும் கொத்தியின் முகத்தில் இனி எப்படி முழிப்பேன்...' என்று ஓலமிட்டான் சுடலை மாடன்.

## அத்தியாயம் 2

# டாக்குத்தர் பேயன்

சுடலைமாடனின் முதுகுப் புற மயிர்க்கற்றை பொசுங்கி அங்கொன்றும் இங்கொன்றுமாக எரி காயம் ஏற்பட்டிருந்தது. எருமைப்பல்லன் அவனை ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்தான்.

வரும் வழியில் சில்லறையாக பத்து ரூபா நோட்டொன்றை மாற்றிக் கொண்டான்.



'ஐயோ' என் விகாரம் போய்விட்டதே!
—சுடலைமாடன்.

'ஏன் சில்லறைக் காசு?... தர்மாஸ்பத்திரிக்குத் தானே போறம்...' என்றுவலியோடு சுடலைமாடன் கேட்டான்: 'என்ர சீவியத்தில இண்டைக்குத் தான் ஆஸ்பத்திரிக்கு வாறன்...'

'அது தான் உனக்குப் புரியவில்லை... பெயர் தர்மாஸ்பத்திரி தான்... ஆனால், கண்டியோ சில்லறை இல்லாமல் போகேலாது...வாவன்... எல்லாம் புரியும்...'

ஆஸ்பத்திரியில் நல்ல சனம். வெளி நோயாளர் பகுதியில் போட்டிருந்த வாங்கில் அறுபது பேய் நோயாளர் அமர்ந்திருந்தனர். அறுபத்தோராவது நோயாளராகச் சுடலைமாடன் அமர்ந்தான்.

'இருந்து கொள்... இந்தா நம்பர்த் துண்டு...அறுபத்தோன்று... கூப்பிட்டோனை போ...அதுக்கிடையில் நான் முத்திரை வாங்கிக் கொண்டு வாறன்...'

'முத்திரையோ?...'

'துண்டெழுத இப்ப இருபத்தைந்து சத முத்திரை கொடுக்க வேண்டும்...'

'தர்மாஸ்பத்திரி...' என்று முனுகினான் சுடலைமாடன். முத்திரையோடு வந்து பக்கத்தில் வந்து அமர்ந்தான் எருமைப்பல்லன்.

''இஞ்ச பார் எங்கடை நம்பர் இருபது... ஒரு ரூபா கொடுத்து வாங்கினனான்...' என்றான் எருமைப்பல்லன்: 'முதலே வந்து நம்பர் எடுத்து வைத்து வியாபாரம் செய்யிறவை இருக்கினம்... அவையிட்டை வாங்கினனான்...'

'கடவுளே...' என்றான் சுடலைமாடன்: 'இனி பிந்தி வாற வைக்கு எங்கடை அறுபத்தொன்றை விக்கலாம் வைச்சிரு...'

சுடலைமாடனின் கண்கள் வியப்பால் விரிந்தன. டாக்குத்தரின் வாசலில் நின்று நம்பர் கூப்பிட்டுக் கொண்டிருந்தவன் எல்லாரோடும் எரிந்து விழுந்து கொண்டிருந்தான். அறை வாசலில் நிலையில் 'டாக்குத்தர் பேயன்' என்று எழுதிய போர்ட் தொங்கியது.

'இதென்ன இந்த டாக்குத்தரின் பெயர் பேயனா?...'

'நான் மனிதன் என்று மனிசர் சொல்லிறதுபோல, இவர் பேயன் என்று வைச்சிருக்கிறார்...!

'உவன் ஏன் எல்லாரோடும் எரிஞ்சு விழுகிறான்?... சிலரிடம் நம்பர்த் துண்டு வாங்காமல் உள்ளே விடுகிறான்?...'

'அதுதான் சம்திங்...'

'வலிக்குதடா எருமைப்பல்லா... அவனிட்டை சொல்லிட்டு உள்ளே போவமே?...'

'விடமாட்டான்... சேட்டால் குலைப்பான்... சரி சரி... பார்ப்பம்... பார் விசயத்தை...'

எருமைப்பல்லன் சில்லறைக் காசைக் கையில் வைத்துக் குலுக்கி மெல்லிய சத்தம் எழுப்பினுன். டாக்குத்தரின் அறை வாசலில் நின்றவனின் கண்கள் இவன் பக்கம் திரும்பின.

'என்ன கடும் நோயாளியே...? நீ முதல் வா...' என்று கூப்பிட்டான். எருமைப்பல்லன் சுடலைமாடனை அழைத்துக் கொண்டு முன்னே வந்தான். காத்திருந்த நோயாளிகள் முணுமுணுத்தனர்.

நம்பர்த்துண்டை நீட்டுவது போல ஒரு ரூபாக்குத்தியை அவன் கையில் வைத்தான் எருமைப்பல்லன். அவன் வாயெல்லாம் பல்.

இருவரும் அறைக்குள் நுழைந்தனர். டாக்குத்தர் பேயன் தன் முன்னிருந்த பெண் டாக்குத்தர் ஒருத்தியுடன், மலங்கமாமுனியின் லேற்றஸ் தயாரிப்பான நீயூவேவ் நாடகமான கணவனுக்குக் கட்டிய தாலி என்பதில் கதாநாயகி நீச்சல் உடையைக் கழற்றிவிட்டுக் கதாநாயகனைக் கட்டித் தழுவிக் கொண்டதைச் சுவாரஸ்யமாக விபரித்துக் கொண்டிருந்தார்.

சுடலைமாடனும் எருமைப்பல்லனும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

'இன்னொருக்காப் பார்ப்பம் வாறிரோ?...' என்று கேட்டார் டாக்குத்தர் பேயன்.

'நான் வரேல்ல...' என்றுன் எருமைப்பல்லன். டாக்குத்தர் பேயன் அப்போது தான் இவர்களைக் கவனித்தார். முகத்தைச் சிடுசிடுவென்று வைத்துக் கொண்டு ஒரு துண்டுப் பேப்

பரை எடுத்து, 'பெயர்...வயது...விலாசம்...' என்று கேட்டார். எருமைப்பல்லன் சொன்னான்.

'முத்திரை...' என்று கையை நீட்டினார் டாக்குத்தர். எருமைப்பல்லன் முத்திரையை நீட்டினான். டாக்குத்தர் முத்திரையோடு எருமைப்பல்லனின் கையைப் பற்றி நாடி பார்த்தார்.

'எனக்கில்லை...இவனுக்கு என்றான்..., 'எருமைப்பல்லன்.

'எல்லாம் சரி..." என்றார் டாக்குத்தர். அவருடைய கவனம் எல்லாம் மலங்கமாமூனியின் நாடகத்தில் இருந்தது: 'இந்தத் துண்டில எழுதியிருக்கிற மருந்தை மூன்று வேளை சாப்பிட்டால் காய்ச்சல் நின்றிடும்...' என்றார் டாக்குத்தர்.

'இவனுக்குக் காய்ச்சலில்லை... டாக்குத்தர்...முதுகு எரிஞ்சு போச்சுது...'

'அப்பிடியே...? இஞ்சை வா...' என்று சுடலைமாடனைப் பார்த்தார். அவன் திரும்பி முதுகைக் காட்டினான்.

டாக்குத்தர் கடுகடுத்தபடி துண்டெழுதிக் கொடுத்தார்.

துண்டை வாங்கிக்கொண்டு மருந்து கட்டும் இடத்திற்குச் சென்றனர். மருந்துகட்டும் இடத்திலும் சனம். ஐம்பது சதம் உள்ளே நுழைய வைத்தது.

'உதுக்கு ஊசி போட வேணும்... அங்கை அப்போதிக்கரி இருக்கிறார்...அவரிட்டை கொடு' என்றான் மருந்து கட்டுபவன்.

அப்போதிக்கரி ஒருவர் ஊசி குத்திக் கொண்டிருந்தார்.

'மருந்தை மாற்றிக் குத்தி ஒரு நோயாளி குளோஸ்... அதுக்குப்பிறகு அப்போதிக்கரிமார்தான் ஊசி குத்திறது...' என்றான் எருமைப்பல்லன்.

அப்போதிக்கரி ஒரு நோயாளியை விசாரித்தார்.

'உது என்னெண்டு வந்தது!...'

'மரத்தால விழுந்திட்டன்...' என்ருன் நோயாளி.

'சந்தோஷம்...' என்ருர் அப்போ.

'கன ரத்தம் போனதே?...'

'ஓம்...கனக்கப் போனது...,

'சந்தோஷம்...' என்ருர் அப்போ.

'என்னடா, இவர் எல்லாத்துக்கும் சந்தோசம் சொல்லு ருர்...!' என்று கேட்டான் சுடலைமாடன்.

'உவர் மலைநாட்டுப் பக்கம் வேலை பார்த்தவர்... மருந்து வாங்கிட்டு ஏதாவது கொடுப்பினம்... அதுக்கு சந்தோசம் என்று சொல்லிச் சொல்லிப் பழக்கமாப் போச்சுது...'

'மற்ருள் வா...' என்ருர் அப்போதிக்கரி சந்தோஷம்.

இருவரும் அவர் முன் போயினர். மருந்துத் துண்டை வாங்கிப் பார்த்த அப்போதிக்கரி உதட்டைப் பிதுக்கிஞர்.

'இந்த ஊசி மருந்து இங்கை இல்லை... கெதியா வெளிக் கடையில போய் வாங்கி வா...' என்ருர்.

'தர்மாஸ்பத்திரி...' என்ருன் சுடலைமாடன். எருமைப் பல்லன் ஊசி மருந்து வாங்கிவர வெளியே போஞன். போகும்போது அப்போ சொன்ஞர். 'எல்லாக்கடையிலும் இந்த மருந்து கிடைக்காது... எறிப்பல்லன் கடையில தான் இருக்கும்...'

'எனக்கு அந்தக் கடை தெரியும்... உங்கடை மஞ் ஜோன்ர கடைதானே?...' என்றபடி எருமைப்பல்லன் வெளி யேறிஞன்.

'உது என்னெண்டு எரிஞ்சது...?' என்று கேட்டார் அப் போதிக்கரி.

'நெருப்புக்கை விழுந்திட்டன்...'—சுடலைமாடன்.

'சந்தோஷம்...' —அப்போ.

'கலியாணம் செய்திட்டியே?...'

'இல்லே...'

'சந்தோஷம்... காய்ச்சல் காயுதே—?'

'ஓம்... சரியா வலிக்குது...'

'சந்தோஷம்...'

'வீட்டில தோட்டம் செய்திருக்கிறீரே? கோழி வைச்சிருக்கிறீரே?...'

'ஓம்...'

'சந்தோஷம்...' என்ருர் அப்போதிக்கரி.

எருமைப்பல்லன் ஊசி மருந்தோடை வந்தான். ஐம்பது சதம் வாங்கிக்கொண்டு உள்ளே நுழையவிட்டவன் சொன்ஞன் 'விக்காத மருந்தெல்லாம்... விற்பனையாகுது... இருந்த இடத்துக்கே திரும்பி வருகுது...'

ஊசி போட்டு மருந்து கட்டிக் கொண்டு இருவரும் வெளியே வந்தனர்.

'ஊசி போட்டவருக்கு தோட்ட வேலேயில கவனம் போல... நாட்டின்ரை பொருளாதார விருத்திக்கு ஒத்துழைக்குது... தோட்டம் இருக்கா... கோழி வளர்க்கிறியா?... என்றெல்லாம் விசாரித்தார்...' என்ருன் சுடலைமாடன்.

'அப்ப சரி... அடுத்த முறை வரேக்கை முட்டையோடை தான் வரவேணும்...' என்ருன் எருமைப்பல்லன். 'சரியா வலிக்குதா?...'

'ஓமடா...'

'சந்தோஷம்' என்ருன் எருமைப்பல்லன்.

'என்ன ஆஸ்பத்திரி...' என்று முணுமுணுத்தான் சுடலை மாடன்.

## அத்தியாயம் 3

# சோனிப்புட்டுவின் சொக்குப்பொடி

இரண்டு நாட்கள் கழிந்து போயின. சுடலைமாடன் இன்னமும் பழைய நிலைக்கு வரவில்லை. மனவருத்தமும், உடல் வருத்தமும் சேர்ந்து அவனைப் படுக்கையில் தள்ளிவிட்டன.

எருமைப்பல்லனுடைய இருப்பிடத்தில் தான் அவன் தங்கி இருந்தான். சுடலைமாடனின் முதுகுப் புறம் எரிந்த மலை நாட்டுப் புல் வெளியாகக் காட்சி தந்தது. வலியும் வேறு

எருமைப்பல்லனும் அவனுடைய தங்கை சோனிப்புட்டுவும் அவனை அவனுடைய இருப்பிடத்துக்குப் போகவிடவில்லை.

'என்னைத் தேடி வந்ததாலேயே உனக்கு இந்த நிலை... நீ உடனே போகக் கூடாது... நோயை மாத்திக்கொண்டு தான் போகவேணும்' என்று விடாப் பிடியாக எருமைப்பல்லன் தடுத்துவிட்டான்.

சோனிப்புட்டு அவனிலும் பார்க்க ஒரு படி மேற்சென்று அவனை உபசரித்தாள். அவள் சுடலைமாட



'சோனிப்புட்டு...'

னுக்குச் செய்கின்ற சேவைகள் கூறுந் தரமல்ல. அவனுடைய மனம் அடிக்கடி கொத்தியை எண்ணிக் கொண்டது.

'அவள் எங்கே? இவள் எங்கே? கொத்தியின் விகாரம் யாருக்கு வரும்? ஆனல், கொத்தி சிறிது ஆளைவக்காரி... சோனி எவ்வளவு அடக்கமானவள்! கன்னிமை மாருத கொத்தியும் ஒரு குழந்தைக்குத் தாயான சோனியும் இணையானவர்களா?...'

'எனக்கொரு ஆசை, சுடலைமாடா! நான் இருக்கிறதுக்குள்ளை சோனிப்புட்டுவை நல்ல ஒருவனின் கையிலை ஒப்படைக்கவேணும் என்று! அவள் தனக்கு இன்னெரு கல்யாணம் வேண்டாம் என்கிருள். செத்துப்போன புரிசன்ரை நினைவோடு வாழ்ந்துவிடுவேன் என்கிருள்...'

சுடலைமாடன் மௌனமாக இருந்தான். அவனுக்குக் கொத்தியின் நினைவு. அவளைச் சந்தித்து இரு நாட்களாகின்றன.

மேலும், அடிக்கடி கூவியபடி விரைந்து செல்லும் ரயிலின் சத்தமும் அவனுக்குப் பயத்தைக் கொடுத்தது. அவ்வேளைகளில் சோனியின் பல்லிழந்த மகன் கண் முன் நின்ருன்.

அங்கிருப்பதும் அவனுக்குச் சரியாகப் படவில்லை. அளவுக்கு மீறித் தன்னேடு சோனிப்புட்டு பழகுவதாக அவனுக்குப் பட்டது. அன்று காலை கூட—

'தங்கச்சி...' என்ருன், அவன்.

'சோனிப்புட்டு என்று கூப்பிடுங்கள்' என்றபடி அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவளது கொள்ளிக் கண்கள் விகாரமாகத் தான் இருந்தன. அதில் தெரிந்த அர்த்தம்...? சுடலைமாடன் முகத்தைத் திருப்பிக்கொண்டான். அன்று முழுவதும் சோனிப்புட்டு தனது கதையைக் கூறிக்கொண்டே வந்தாள்.



சோனிப்புட்டுவும் சுடலைமாடனும்

'எறிமாடன்' என்று கூறும்போது 'நறநற' வென்று பற்களைக் கடித்துக்கொண்டாள்: என்ரை புரிசனைக் கொன்ற அவனை ஒரு நாளைக்குக் கடித்துக் குதறிவிடுவன்' என்று ஓலமிட்டாள், சோனி,

'இவள் அப்படிச் செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்' என்று எண்ணமிட்டான் சுடலைமாடன்.

'இவன் ஏன் என் வாழ்வில் குறுக்கிட்டான்! நான் காதலிக்கும் கொத்தியையா இவனும் காதலிக்க வேணும்...?

வேறு பேய் மகள் இவனுக்குக் கிடைக்கவில்லை...? நேற்று கொத்தியை நான் சந்திக்க வேண்டிய நாள். பகல் பகலாகக் காத்திருந்திருப்பாள். இன்று எப்படியும் இங்கிருந்து போயாக வேணும்... அவளைச் சந்தித்து...'

எரிந்து கருகிப் போன முதுகின் நினைவு அவனுக்கு வந்தது. கவலையால் சோம்பிப் போனான். உண்மைக் காதலுக்கு இது ஒரு தடையாகாது என்று தன்னைத் தேற்றிக் கொண்டான்.

'இன்றைக்கு நான் என்ரை வீட்டிற்குப் போகப் போறன்...' என்றான் சுடலைமாடன்.

'இப்பவேயா? நள்ளிரவு ஆகவில்லையே...?' என்றான் எருமைப்பல்லன்.

'இப்ப நள்ளிரவு எப்ப வருகுது? ரோட்டெல்லாம் இந்த மனிசன்கள் 'லைற்'றுக்களைப் போட்டு இருட்டாக்கி இருக்கிறான்கள். கண் தெரிய மாட்டேன் என்கிறது...'

'போட்டு எப்ப வருவியள்?' என்று சோனிப்புட்டு கேட்டாள். அவளுடைய குரலில் ஏக்கம் தொனித்தது.

'அடிக்கடி வருவன். அடுத்த அமாவாசைக்கு வருகிறேனே?' என்று சும்மா சொல்லி வைத்தான், அவன்.

'கட்டாயம் வாருங்கள்' என்றாள், சோனி.


நள்ளிரவு. பிறை நிலவைச் சுற்றிப் பரிவட்டம் படர்ந்திருந்தது. நண்பர்கள் இருவரும் புறப்பட்டார்கள்.

'நீ ஏன், எருமைப்பல்லா...? நான் போறனே...? கோம்பயன் மணல் தானே?'

'இல்லை, இல்லை... நானும் வாறன்... சுடலைமாடா, நீ மனிசக் காதலைப் பார்த்திருக்கிறாயா?...' என்று கேட்டான், எருமைப்பல்லன்.

'இல்லை...'

'வா... உனக்குக் காட்டுறன்...'



'மனிசர் என்றால் எனக்குப் பயமப்பா'

மனிசர் என்றால் எனக்குப் பயமப் பா...வேண்டாம்..' என்று பின்வாங்கினான், சுடலைமாடன் அவனுடைய உலக்கைக் கரத்தைப் பற்றியபடி எருமைப் பல்லன் இழுத்துச் சென்றான்.

பனை வடலிகளூடாகச் சற்றுத் தூரம்போனார்கள்.

'அதோ...' என்று சுட்டிக்காட்டினான், எருமைப்பல்லன். சுடலைமாடன் பார்த்தான் அங்கே—

இரு மனித உருவங்கள். ஒன்று ஆண்; மற்றது பெண்.

'கிட்டவா, போய்ப் பார்ப்பம்... எங்களை அதுகளுக்குத் தெரியாது...'

இருவரும் கிட்ட நெருங்கி நின்று கொண்டார்கள்.

'அன்பே...' என்றான், காதலன்.

'...ம்...' என்று மயங்கினாள், அவள்.

'மதியைப் பழிக்கும் உனது முகமும், குவளை போன்ற உனது விழிகளும், செவ்வானம் போன்ற உனது உதடுகளும்

என்னை மயக்குகின்றன. சுந்தரி! நீ எவ்வளவு அழகாக இருக்கிருய்?'

சுடலைமாடன் எருமைப்பல்லனிடம் முணுமுணுத்தான்: 'அழகாக இருப்பதாகக் கூறுகிருனே?'

'மனிசப் பாசையிலே அழகு என்ருல் பேய்ப் பாசையிலே விகாரம், மாடா' என்ருன், எருமைப்பல்லன்.

—திடீரென 'விம்மி விம்மி' அழுதாள், சுந்தரி.

'ஏன் அழுகிருய்?...'

'இப்படி நள்ளிரவிலே தன்னந் தனியளுக எத்தனை நாட்கள் சந்திக்கிறது! என்னைக் கெதியிலை கலியாணம் செய்து கொள்ளுங்கோ...!'

'கொத்தியும் இப்படித்தான்...' என்ருன், சுடலைமாடன்.

'சத்தம் போடாத... விஷயத்தைக் கவனி...' என்ருன் எருமைப்பல்லன்.

காதலன் எதுவுமே பேசாது நின்ருன்.

'மனிசக் காதல் இப்படித்தான். கலியாணம் என்றதும் காதலனுக்குப் பேச்சு வராது...' - எருமைப்பல்லன்.

'ஏன்?...'

'ஏதோ வசுக்கோப்பு எண்டு காட்டுகிருன்களாம்...அதுகளைப் பார்த்துவிட்டு இந்தப் பொடியன்கள் காதல் பண்ணுதுகள்... பதினுறு வயசிலே இந்தக் காலப் பொடியன்களுக்குப் பொம்பிளை தேவை... வசுக்கோப்புப் பாக்கிறதுக்கே தேப்பன்ரை காசு தான் தேவை! அப்படியிருக்கக் கலியாணம் செய்து குடும்பம் நடத்த வக்கேது...'

சுந்தரி அழுவதை நிறுத்திவிட்டு அவனை உலுக்கினுள்.

'ஏன் பேசாது இருக்கிறியள்... எத்தனை நாளைக்குத்தான் மறைக்கிறது? நான் கர்ப்பம்.

'என்ன?...' என்று வீரிட்டான், அவன்: 'என்ன பேய்க் கதை பேசுகிறாய்?'

'கூய்...' என்று கூவினான், சுடலைமாடன்: 'எருமைப் பல்லா, அவங்களுக்கு நாம் நிற்பது தெரிஞ்சு போச்சு... பேய்க் கதை என்கிறான்' என்று கூறியபடி திரும்பி ஓடத் தலைப்பட்டான்.



'ஆரோ கோடாலியால கொத்திப் போட்டாங்கள்'

திரும்பிய வேகத்தில் முன்னால் நீட்டிக் கொண்டிருந்த சிங்கப் பல், பனை மரம் ஒன்றில் தட்டுப்பட்டு நுனி உடைந்து வீழ்ந்தது.

'கூய்...' என்று ஓலமிட்டான், சுடலைமாடன்.

—அடுத்த நாள் பனை வடலியைப் பார்க்க வந்த சொந்தக்காரன், தனது பனையொன்றை யாரோ இரவில் கோடரியால் தறிக்க முயன்றதாக விதானையாரிடம் முறையிட்டான்.

## அத்தியாயம் 4

# பெரிய கொத்தியும் சின்னக் கொத்தியும்

நவாலி ஊடாக வட்டுக்கோட்டைக்குப் போகிற பாதையில், வயல்களுக்கு நடுவே, வழுக்கியாற்றின் அருகில் ஒரு

சுடலை இருக்கின்றது. அதுதான் கொத்தியின் இருப்பிடம்.

ஊத்தைக்குடியனுக்கும், பெரிய கொத்திக்கும் (நமது கதாநாயகி கொத்தியின் தாய்) அன்று பெரிய வாக்குவாதம் நடைபெற்றது.

எல்லாம் எறிமாடனால் வந்த வினைதான். ஊத்தைக்குடியனை எங்கோ கூட்டிச் சென்று வசமாக 'ஊத்தை' குடிக்க வைத்துவிட்டான்.

'எறிமாடன் தான் என்ரை மருமோன். எவ்வளவு உத்தமமான பிள்ளை... குணம் என்றால் அவனெல்லோ தங்கக் கம்பி...' என்றபடி வந்தான் ஊத்தைக்குடியன்.

பெரிய கொத்திக்குக் கொஞ்ச நாட்களாக ஊத்தைக் குடியனின் எண்ணம் புரிந்துதான் இருந்தது. அதே வேளை ஒரே ஆசை மகளின் மனமும் புரிந்திருந்தது. புருஷனின் வார்த்தைகள் அவளைப் புலியெனச் சீற வைத்தன.


'நீதான் எறிமாடனைப் புழுக வேணும்... உந்தக் கேடு கெட்ட மனிசரைப் போல, உவனுக்கும் சுடலையெல்லாம் நூற்றெட்டுப் பொம்பிளையள்...'

'மனிசக் கதை பேசாதை...' என்று உறுமினான், அவன்: 'எறிமாடனைக் குறையாகப் பேசினாய் என்றால் எனக்குக் கெட்ட கோபம் வரும்... அவனுக்குத்தான் கொத்தியைக் கலியாணம் செய்து கொடுக்கப்போகிறேன்.'

'உது மட்டும் நடக்காது... நான் உயிரோடு இருக்கேக்கை உது நடக்காது... எறிமாடனுக்கு என்ரை பெண்ணைக் கட்டிக் கொடுக்கிற நேரம், அவனுக்குப் 'பொலிடோல்' கொடுப் பன்... சாக...'

'அதென்னடி பொலிடோல்...?'

'அதுதான் உந்த மனிசர்கள் சாகக் குடிக்கிற ஏதோ ஒரு மருந்து...மண்டை இலை யமன்...'



ஊத்தைக்குடியன் — கொத்தி — பெரிய கொத்தி
'ஆலமரத்திலே தூக்குவன்'

'அதை நீ கொடுக்கப் போறியோ! நீ அதைக் கொடுத்தால் என்ன, இதைக் கொடுத்தால் என்ன, என்ரை எண்ணத்தை மட்டும் மாற்ற முடியாது... கனக்கக் கதைச்சி எண்டால், உன்னைக் கழுத்திலே கயிறுபோட்டு ஆலமரத்திலே தூக்கிவிட்டிடுவன்...'

'ஒ' வென்று ஓலமிட்டாள், பெரிய கொத்தி, இவற்றை யெல்லாம் மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த கொத்திக்கு அழுகை அழுகையாக வந்தது. எறிமாடனை நினைக்கும் போது அடி வயிற்றில் ஏதோ செய்தது.

'சுடலைமாடா... சுடலைமாடா... நான் என்ன செய்வேன்!' என்று அவள் தனக்குள் புலம்பினாள்.

'ஏன்ரி, கத்துகிறாய்...?' என்று ஊத்தைக்குடியன் உறுமினான்.

'உனக்கே உது நல்லா இருக்கா... ஒரே பெண்ணின்ரை விருப்பப்படி செய்யாமல்...'

'அவளின்ரை விருப்பம் என்னடி கேக்கிறது? மனிசரைப் போல கதைக்கிறாய்... பிள்ளையளின்ரை விருப்பத்துக்கு மாப்பிள்ளை தேடித்தான், குமருகளெல்லாம் கலியாணம் இல்லாமல் கிழவிகளாகுதுகள்!... எல்லாப் பொடிச்சுகளுக்கும் கால் சட்டைபோட்ட மாப்பிள்ளைதான் தேவை... டாக்குத்தர்... எஞ்சினியர்... எங்கைபோறது! அதைப் போல எங்கடை பேய்ச் சாதிக்கையும் வேண்டாம்!... தேப்பன் முடிவு செய்தால் பிள்ளை செய்ய வேண்டியதுதான்...'

'கொத்தி ஏற்கனவே ஒருவனை விரும்புகிறாளே...! 'லவ்' பண்ணுகிறாளே!...' என்றாள், பெரிய கொத்தி.

'என்னடி...? 'லவ்'வோ...'

'லவ்' என்றால் காதலாம்... அவளின்ரை விருப்பப்படி சுடலைமாடனைச் செய்து வைத்தால் என்ன...'

கோபத்தோடு எழுந்தான், ஊத்தைக்குடியன்.

'சுடலைமாடனுக்கோ... அந்த எண்ணத்தை மட்டும் வைச்சுக் கொள்ளாதை... சுடலைமாடனும்... பயந்த பயல்... மூதுகெலும்பில்லாதவன்...' என்று உறுமியபடி தொடர்ந்தான்: 'அவன் மட்டுந் திறமோ...'

'ஏன் அவனுக்கு என்ன...?'

இப்போது 'கடகட' வென்று சிரித்தான் ஊத்தைக்குடியன்.

'மனிசப் பேர்டிச்சி! கேள்... சுடலைமாடன்ரை சீத்துவக் கேடுகளை...'

பெரிய கொத்தியைப்போல, கொத்தியும் காதுகளைத் தீட்டிக்கொண்டாள். அவள் நெஞ்சு 'படபட' வென்று அடித்துக் கொண்டது.

'சுடலைமாடன்ரை பழக்க வழக்கம் துண்டாச் சரியில்லை... ஒரு கால் எலும்புக்கும் பெறுமதியில்லை. ஐந்தாறு நாளுக்கு முதல் செம்மணிச் சுடலையிலை ஆரோ ஒரு பேய்ப் பெட்டையோடு சேட்டை விட்டிருக்கிறான்... அந்தப் பெட்டையின்ரை தலையன் மார்கள், இவனைப்பிடிச்சு முதுகு மயிரையெல்லாம் பொசுக்கித் துரத்திவிட்டிட்டாங்கள்... அது மட்டுமே முன் வாய்ப் பல்லொன்றிலே துளியுமில்லை... அடி அகோரம்...'

'பொய்...' என்று 'சீறிட்டாள், கொத்தி: அவர் அப்படிப் போகமாட்டார்...'

'நீயும் கேட்டுக்கொண்டே இருந்தனி... உனக்குந் தெரியத்தான் வேணும்!... இன்னும் விசயமிருக்கு கொத்திப் பெண்ணே' என்றான் ஊத்தைக்குடியன்.


தந்தையின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள், மகள். ஊத்தைக்குடியன் தொடர்ந்தான்:

'கொக்குவில் சுடலையிலை ஆரோ ஒருத்தியோடை சுடலைமாடனுக்குத் தொடர்பாம்... புருசன் இல்லாதவள். சோனிப்புட்டு என்று பெயராம். பிள்ளையும் ஒன்று அவளுக்கு. உவர் மாடும் கன்றுமாகக் கொண்டு வர போறார்...'

'பொய்... பொய்... அவர் அப்படி இல்லை. நான் நம்ப மாட்டன். உங்களுக்கு இதை யார் சொன்னது?...' என்று கொத்தி கதறினுள்.

'நானும் எறிமாடன் சொன்னபோது நம்பவில்லைத்தான். கொத்தி. ஆனு, நான் நேரிலை கண்டன். அவளோடை இரண்டு நாளா சுடலைமாடன் இருந்ததை...'

'ஓ'வென்று கூக்குரல் இட்டாள், கொத்தி; தனது தலையை நிலத்திலை மோதிக்கொண்டு கூச்சலிட்டாள்.



'உவர் மாடும் கன்றுமாகக் கொண்டுவரப் போறுர்...'

கொத்தி பெருங்குரலில் ஓலமிட்டதைக் கேட்ட பெரிய கொத்தி புருசனோடு முறுக்கினுள்:

'எறிமாடன் என்ன திறம்?... வேலையொன்றுமில்லாமல் ஊர் சுற்றுற காவாலிக்கு என்ர ஒரே பொண்ணைக் கொடுக்க விடமாட்டன்... சுடலைமாடனாவது படிச்சவன்... இன்லை க்கோ நாளைக்கோ வேலை கிடைக்கும்...'

'போடி... போக்கத்தவளே... எறிமாடனுக்கா வேலையில்லை... என்கிறுய்... கெம். பி. சொல்லியிருக்கிறுரடி...



'அவர் அப்படிப் போகமாட்டார்'

கோப்பிறேற்றிவ் மனேச்சர் ஆக்கிறதென்று... இந்தக் காலத்தில பெரிய உத்தியோகம் அது தான்ரி... நாளைக்கே நான் கெம். பியைச் சந்திக்கப் போறன்... கெம். பி. நான் சொன்ன மறுக்கமாட்டார்... அவருக்கு நான் போன லெக்சனில வோட்டுப் போட்டனன்... வேலை செய்தனன்... செய்யாமல் விடமாட்டார்...' என்முன் ஊத்தைக்குடியன்.

'கெம். பி. செய்து போட்டுத் தான்...வேறு வேலை பூர்ப்பார்... சொல்லிப் போட்டன் வேலையில்லாதவனுக்கு நான் பொம்பிளை கொடுக்க மாட்டன்...'

கொத்தி ஓவென்று கதறினள்.

பேய்க்குலத்தில் கெ. பி. என்பது மனித குலத்தில் எம். பி. என்பதாகும். மெம்பரைப் பேய் பாசையில் 'கெம்பர்' என்றும் 'பார்லிமென்ற்'றைப் 'பேய்லிமன்ற்' என்றும் வழங்குவர்.

கெம்பர் ஓஃப் பேய்லிமன்ற்–கெம். பி.

ஊத்தைக்குடியன் கெம்பரைப் பார்த்து வரப் புறப்பட்டான்.

## அத்தியாயம் 5
# கொத்தியின் காதல்

கொத்திக்கு நினைக்க நினைக்க கவலையாயும் ஆவேசமாயும் இருந்தது. சுடலைமாடனை அவள் உயிருக்குயிராக நேசித்

தாள். அவன் அவளுக்குத் துரோகம் செய்வானா?

அவளுடைய அன்பைப் பெறுவதற்காக எத்தனை பேர் போட்டியிட்டிருக்கிறார்கள். வெளியே நீண்டு சுருண்ட அவளது கடை வாய்ப் பற்களின் அழகு அவள் குலத்தில் வேறொருத்திக்கும் கிடையாது. அத்தகையவளுடைய அன்பைப் பெற்ற சுடலைமாடனா துரோகம் செய்வான்?

அவளால் துக்கத்தைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

'ஐயா சொன்னதெல்லாம் உண்மையாக இருக்குமோ' என்று அவளுடைய உள் மனம் கேட்டது.

'இருக்காது அவர் அப்படிப்பட்டவரல்லர். எறிமாடன் செய்த சூழ்ச்சியாகத்தான் இது இருக்க முடியும். என்னை அடைவதற்காக அந்தக் காமுகன் எதுவும் செய்வான்' என்று அவளது மனம் கூறியது.


அவள் 'ஓ' 'ஓ' என்று அழுதாள். அவளது அழுகையைக் கண்டு வயற் காற்றும் 'உர் உஸ்...' என்று உறுமியது.

கொத்தியினுடைய இருப்பிடத்திற்குச் சற்றுத் தள்ளி குட்டைக்குளம் ஒன்று இருந்தது. அக்குளத்திற்குப் பக்கத்தில் முன்பு ஒரு மடம் இருந்ததற்கு அறிகுறியாகப் பாசி படர்ந்து கறுத்து இடை முறிந்த ஆறு தூண்கள் கிடந்தன. முன்பு மடத்தில் தங்கிய வழிப்போக்கர்கள் இளைப்பாறி விட்டுப் போகும் போது, நன்றிக் கடனாக, அம் மடத்திலிருந்து ஒவ்வொரு கூரை, ஓடு, தீராந்தி, வளை எனக் கழற்றிக் கொண்டு போய்விட்டார்கள். மடத்திற்குப் பக்கத்தில் இருந்த குட்டைக் குளமும் கவனிப்பாரற்றுப் பாழடைந்து கிடந்தது. பாசி படர்ந்து பச்சை ஏறிய நீர். பாம்புகள் குட்டைக் குளத்தின் கல் இடுக்குகளில் பதுங்கிக் கிடந்தன.

கொத்தி, எஞ்சி நின்ற மடத்தின் அரைத் தூணில் அமர்ந்திருந்து, குட்டைக் குளத்தைப் பார்த்தபடி இருந்தாள்.

நள்ளிரவு கடந்து ஒரு சாமம்.

சுடலைமாடனும் அவளும் இந்த இடத்தில்தான் அடிக்கடி சந்திப்பார்கள். அவை இனிய நினைவுகள்தாம். அவளுக்கு அவை இப்போது நினைவுக்கு வந்தன.



கொத்தியும் சுடலைமாடனும் 'கொத்தி, நீ எவ்வளவு விகாரமாக இருக்கிறாய்.'

'கொத்தி... நீ எவ்வளவு விகாரமாய் இருக்கிறாய்...!' என்பான் அவன். அவள் இதயம் குளிர்ந்துவிடும். அவன் தோளில் தலை சாய்த்துச் சிரிப்பாள்.

அவன் நீண்டு வளர்ந்த சாரைப் பாம்பொன்றைப் பிடித்து அவளது கழுத்தில் மாலையாகப் போடுவான்.

'கொத்தி... குற்றமற்ற விடலைப் பருவத்து இளைஞனின் மண்டையோட்டில், முற்றி விளைந்த சாரைப்பாம்பை மாட்டி உன் கழுத்தில் எப்போது நான் தாலி கட்டுவது...'

அவள் அவனை ஏக்கத்தோடு பார்ப்பாள்.

'மாடா... மாடா... நீ என் மீது எவ்வளவு ஆசை வைத்திருக்கிறாய். நீயா இப்படி எல்லாம் நடந்தாய்? ஐயா சொன்னது உண்மை போல இருக்கிறது. இல்லாவிட்டால், கடந்த ஆறு நாட்களாக உனக்காக இங்கு நான் காத்திருக்கிறேன். நீ வராது இருப்பாயா?...'

கொத்திக்கு இப்போது உண்மையாகவே சுடலை மாடன் மீது சந்தேகம் தோன்றியது. 'குறுகு மயிர் மோகனி...... மூன் பல்லை முறித்து...' எல்லாம் உண்மைதானோ? சோனிப் புட்டுவோடு இருப்பதும் உண்மைதானோ?


எப்படி உண்மையை அறிவது? இப்போதே சோனிப்புட்டுவின் இருப்பிடத்திற்குப் போய் இருவரையும் கையும் களவுமாகப் பிடித்தால்?

'மாடா...மாடா...அது மட்டும் உண்மையாக இருக்கட்டும். அந்த இடத்திலேயே உங்கள் இருவரையும் முறித்து விடுகிறேன்...'

கொத்தி முடிவு செய்து விட்டாள். எப்படிக் கொக்குவில் சுடலைக்குப் போவது? கொத்தி தன் இடத்தை விட்டுத் தனியே சென்று பழகியவளல்லள்; வழி தெரியாது.

எப்படியாவது விடிவதற்குள் சென்று உண்மையை அறிந்து திரும்பிவிட வேண்டும் என்று அவள் துடித்தாள்.

குட்டைக் குளத்திற்குச் சிறிது வடக்கே கிழக்கு மேற்காக வீதி ஒன்று செல்கிறது; இள நிலா வெளிச்சத்தில் அத் தார்



'சுகமான பிரயாணம்'

வீதி கருநாகமாக நீண்டு கிடந்தது. அவ் வீதியின் மேற்கு அந்தத்தில் இரு ஒளிச் குமிழ்கள் தோன்றி வரவரப் பெரிதாகின.

'மனிசற்றை வண்டி ஏதோ வருகுது....! என்று கொத்தி கூறிக் கொண்டாள். இந்த வழியாலை அடிக்கடி ஒரு ஸ்கூட்டரிலை பாலா மாஸ்ரர் என்று ஒருவர் வாறவர் இப்ப வந்தால் பின்னாலை தொத்தலாம்..'

மேற்கே இருந்து 'லொறி' ஒன்றுமெல்ல ஊர்ந்து வந்தது; விறகு லொறி. காட்டு விறகுகளை லொறியில் அடுக்கியிருந்தார்கள்.

லொறியைக் கண்டதும் கொத்தியின் மனதில் ஓரெண்ணம் தலை தூக்கியது: 'இந்த லொறி விறகுகள் சுடலைக்குத் தான் போகுது போல...பட்டினத்திலை காட்டு விறகு விலைக்கு வாங்கித்தான் பிணம் சுடுகிறவை. எங்கடை பக்கம் பூவரசு... இதிலை ஏறி நானும் போனால் கொக்குவில் சுடலைக்குப் போகலாம்தானே?'

கொத்தி அதன் பின் எதையும் யோசியாது விறகு லொறியில் தாவி ஏறி, அமர்ந்து கொண்டாள். சுகமான பிரயாணம்.

விறகு லொறி 'மூக்கி முனகிக்' கொண்டு விரைந்தது. நவாலியைத் தாண்டி, யாழ்ப்பாணம் நோக்கி லொறி சென்று கொண்டிருந்தது. ஏக்கத்தோடு கொத்தி அமர்ந்திருந்தாள்.

'உன்ரை காதல் விசயம் எந்த மட்டிலை இருக்குது...?'

— குரல் கேட்டுக் கொத்தி திடுக்கிட்டுப் போனாள். அவளை யார் கேட்டது?'

'அதையேன் கேக்கிறாய் அண்ணை? அவள் ஆரோடையோ ஓடிட்டாள்!'

கொத்திக்கு இப்போதுதான் புரிந்தது. டிரைவரும் கிளீனரும்தான் பேசிக் கொள்கிறார்கள்.

'இண்டைக்கு வீண் அலைச்சல்... விறகைக் கொண்டுவரச் சொல்லிவிட்டு அவன் விறகு காலையைப் பூட்டிக் கொண்டு போட்டான்...'

'கெதியாய் விடு அண்ணை... யாழ்ப்பாணத்திலை கொண்டுபோய் லொறியை விட்டிட்டு கொஞ்சம் தூங்க வேணும்...'

'அப்ப இது கொக்குவிலுக்குப் போகாதா?' என்று கொத்தி தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். பயம் அவளைப் பிடித்துக் கொண்டது.

யாழ்ப்பாணத்தை லொறி அடைந்தபோது கிழக்கு வெளுக்கத் தொடங்கிவிட்டது. கிழக்கு வெளுக்கத்



'கொக்குவிலுக்குப் போகாதா'

தொடங்கியதும் கொத்தி பயத்து நடுங்கினுள். 'இருட்டிலே' அவளுக்கு எப்படிக் கண் தெரியப்போகிறது?

லொறி நகரத்துக்குள் நுழைந்ததும், கொத்தி பெரிய வாகை மரம் ஒன்றில் தாவி ஏறிக் கொண்டாள். இனி இருட்டும் வரை இங்கே தான்.

வாகை மர உச்சிக் கொப்புக்கு ஏறிய கொத்தி திகைத்துப் போனுள். அங்கே இவளேயே வெறித்துப் பார்த்தபடி ஒருவன் இருந்தான்.

'நீ யார்?...'—கொத்தி.

'நான் சிங்களப் பேய்... பயப்படாதை...! எனக்குக் கொஞ்சம் கொஞ்சம் தமிழ் தெரியும்...! நீ தமிழ்ப்பேயோ?...'

'ஓம்...'

'இங்கை ஏன் தனிய வந்தது...?'

அவன் விகாரமில்லாமல் இருந்தான். ஆனுல், அவனது விழிகள் அவன் மீது கொத்திக்கு நம்பிக்கையை வைக்கத் தூண்டின. அவள் தன் கதையைக் கூறினுள்.


'தங்கச்சி பயப்படாதை! உனக்கு நான் உதவுவன்... எனக்குப் பெயர் முனிசுபூியா! பேசாமல் படுத்துத் தூங்கு... இரவு வரட்டும் கொக்குவிலுக்குப் போவம்...'

வாகை மரக் கொப்பில் கொத்தி சாய்ந்து கொண்டாள். அவளுக்குத் தூக்கம் வர மறுத்தது.

அவளைக் காணுமல் தேடுவார்களோ?

'ஓ... எவ்வளவு சோக்கான பேய்ப் பெட்டை...கொழும்பிலே கூட நான் இப்படி ஒருத்தியைக் காணவில்லை.' என்று எண்ணமிட்டவாறு, அவளேயே பார்த்தபடி இருந்தான், முனிசுபூியா.

கொத்திக்கு இருந்தாற் போல் பயம் பிடித்துக் கொண்டது.



சோக்கான பேய்ப் பெட்டை

உடல் மெதுவாக நடுங்கியது. முனி சுழியா அதைக் கவனித்துவிட்டான்.

'பயப்படாதை மிஸ்...'

'மிஸ். ஊத்தைக் குடியன் கொத்தி...' என்றுள் கொத்தி: 'நீங்கள் சிங்களப் பேயோ?...'

'ஓமோம்... நான்சிங் களப் பேய் தான்...'

'சிங்களம் பேய் களுக்குத் தமிழ்ப் பேய்களைப் பிடிக்கா தாம்... அது தான் பயமா இருக்குது நீங் கள்...'

முனிசுழியா கடகட வெனச் சிரித்தான். மண்டையோட்டில எலி புகுந்தது போல அவன் சிரிப்பு இருந் தது.

'அப்பிடி ஆர் சொன்னது?...'

'எங்கடை கெம். பி. சொன்னவர்... லெக்சன் கூட்டங் களில சொன்னவர்...'

'உப்பிடித்தான் எங்கடை கெம்.பி.மாரும் சொன்னவை. மிஸ். கொத்தி, வகுப்புவாதம் கனகாலம் நிலைக்காது... கெம் பராக வாறதுக்காக உப்பிடி மக்களை இனவெறியூட்டி லெக்ச னில வெல்லுறது... பிறகு முழிக்கிறது தானே? சிங்களப் பேய ளும் நல்லது... தமிழ்ப் பேயளும் நல்லதுகள்... இது எங்கடை

நாடு... எல்லாரும் சகோதரயா... யாலுவோ...' என்றான் முனிசுழியா.

இது நல்லசிங்களப் பேய் என்று கொத்தி எண்ணிக் கொண்டாள்.

'நமக்குச் சாப்பாடு மூதலில வேணும்...'

'நான் சாப்பாட்டிற்கு இப்ப எங்கை போறது?' என்றுள் கொத்தி.

'சீச்சீ... அதை நான் சொல்லல்ல... எங்கடை மக்கள் எல்லாருக்கும் சாப்பாடுதான் மூதலில தேவை... நல்லா விவசாயம் செய்யனும்... கனக்கச் செய்யனும்... எல்லா இடமும் செய்யனும்... அப்பத்தான் பசி... கஷ்ரம் எல்லாம் தீரும்...' என்றுன் முனிசுழியா.

கொத்தி கேட்டுக் கொண்டிருந்தாள். முனிசுழியா சொன்னுன்:

'பணக்காரன் ஏழையளைச் சுரண்டிஞன்... ஏழையள் வயித்தைச் சுரண்டிஞன்கள்...'

இது கம்யூனிசப் பேய் என்று கொத்தி எண்ணிக் கொண்டாள்.

'உனக்கு நித்திரை வருகுது... நல்லாத் தூங்கு...' என்றுன் மூனிசுழியா.

## அத்தியாயம் 6

# கெம். பி. பகல் முழியன்

ஊத்தைக்குடியன் கெம். பி. வீட்டிற்குப் போன வேளை சரியில்லை.

'இப்பத்தான் பிளேனில வந்தவர்... சரியான களைப்பு... நித்திரை கொள்ளுஞர்... போட்டுக் கொஞ்சநேரம் கழிச்சு

வா...' என்றாள் கெம்பரின் மனைவி. பிளேன்ல வந்த களைப்பு பாவம் தூங்கட்டும் என்று எண்ணியபடி ஊத்தைக்குடியன் வெளியேறினான்.

கெம். பி. பகல்முழியன் நல்லதொரு மனிசன் என்பது ஊத்தைக்குடியனின் அபிப்பிராயம். மூன்றோ நான்கோ தடவைகள் பேய்லிமன்ற் தேர்தலில் தோல்வி கண்டாலும் மனம் சலியாது இறுதியில் வெற்றி வாகை சூடி கெம்பரானவர்.

அவருடைய வெற்றிக்காக இரவு பகலாக் உழைத்திருக்கின்றான் இந்த ஊத்தைக்குடியன்.

இரண்டாம் முறையாக அவரின் வீட்டிற்குப் போன போது பலர் அங்கு நின்றிருந்தார்கள். கெம்பர் ஒரு கதிரையில் கால்மேல் கால் போட்டு அமர்ந்திருக்கப் பலர் அவர் முன் கைகட்டி நின்றிருந்தார்கள். ஏதோ சுவரஸ்யமாகக் கெம்பர் பேசிக்கொண்டிருந்தார்: நேற்றைக்குப் பாருங்கள் பேய்லிமன்றில காரசாரமான விவாதம்... நம்மடை தேவைக்காக நாற்பது புதிய பஸ் வண்டிகளை இறக்குமதி செய்ய வேண்டும் என்று ஒரு கெம்பர் சொன்னார். நான் விட்டனே பஸ் நாற்பது தேவையில்லை... உடனடியாக அந்தக் காசுக்கு வெளிநாட்டுச் செலாவணியைத் தரக்கூடிய ஒரு ஆகாயக் கப்பல் வாங்க வேண்டும் என்றன்...... எல்லாரும் ஒத்துக் கொண்டினம்...'

'நீங்கள் சொன்னா மறுப்பிருக்கா ஐயா... எங்கட நாட்டிற்கு இப்ப பிளேன்தான் அவசியம்...' என்றான் அங்கு நின்ற ஒருவன்.

'நாட்டின் உடனடிப் பிரச்சினைகளை உங்களைப் போலப் புரிந்து கொள்ளக்கூடியவர் யார்தான் இருக்கினம்...' என்றான் இன்னொருவன்.

இந்த வேளையில்தான் ஊத்தைக்குடியன் வந்து கெம்பர் பார்க்கக் கூடிய இடத்தில் நின்று கும்பிட்டான். புதிய ஒருவனைப் பார்ப்பது போல கெம்பர் அவனைப் பார்த்தார்.

ஊத்தைக்குடியனுக்கு ஏமாற்றமாக இருந்தது. மறந்திட்டார் போல இருக்குது என்று எண்ணிக் கொண்டான்.

கெம்பர் பக்கத்தில் நின்ற காரியதரிசியிடம் மெதுவாகக் கேட்டார்.

'இப்ப வந்த ஆள் எதிர் கட்சி ஆளோ?...'

'இல்லை ஐயா... எங்சடை ஆள்தான்... போன முறை எங்களுக்காக சொந்த மச்சானுக்கு கத்தியால குத்தப்போன வர்...'

அப்படியா... மூன்னுக்கு வாரும்... என்றார் கெம்பர்.

என்னை மறக்கவில்லை என்று ஊத்தைக் குடியன் எண்ணிக் கொண்டான்.

ஊத்தைக்குடியன் எல்லோரோடும்நின்று கொண்டான்.
'ஐயா, நம்மடை விதானையார் இராத்தூங்கி நம்மடை சப்போட்டர் ஒருவரைத் தாறுமாறாசப் பேசிப் போட்டா ராம்...'

'ஏன் பேசினவன்' — கெம்பர்.


'எங்கடை கதவடைப்பு இயக்கத்திற்கு மூதல் நாள், நம் மடை சப்போட்டர் விதானையாரை இரண்டு ரூபா தரச் சொல்லிக் கேட்டாராம்...விதானையார் மறுத்திட்டார்...அது தான்...'

'அப்ப விதானையை உடனடியாத் தண்ணியில்லாத இடமாய் பார்த்து மாத்திட வேண்டியதுதான்... ருவன்ரிபோ அவசில ருன்ஸ்பர்... செய்ய வேண்டியதுதான்...' என்றார் கெம்.பி.

'அப்படியே காணி ஓவசியர் நித்தக்குடியனையும் மாத்தி விட வேண்டும்...'

'ஏன்...?'

'நம்மடை சப்போட்டர் ஒருவன் காணி கேட்டிருக்கிறான் காணி தரமாட்டன் என்றிட்டாராம் ஏசியும் போட்டார்...'



டிஸ்மிஸ் செய்ய வேண்டியதுதான்

'அவரை அப்ப டிஸ்மிஸ் செய்ய வேண்டியதுதான்...'

'ஐயா நம்மடை சங்கக்கடை மனேச்சரையும் கவனிக்க வேண்டும்... அண்டைக்கு கெம். பிக்கெண்டு லக்ஸ்பிறே கேட்டன் மறுத்திட்டான்...'

கெம்பரின் முகம் சிவந்தது. காரியதரிசியைப் பார்த்து உறுமினார்.

'எல்லாத்தையும் குறித்துக் கொள்ளும்.. அடுத்த முறை கொழும்புக்குப் போய் மினிஸ்ரரைக் கண்டு உடனடியா இவற்றைச் செய்விக்க வேண்டும்...'

சற்று நேரத்தின் பின் கதை வேறுவிதமாக மாறியது.

'இந்த முறை எங்கடை தொகுதிக்குக் கன அபிவிருத்தி வேலைகளுக்குப் பணம் ஒதுக்கச் செய்திருக்கிறன்... மினிஸ்ரர் என்னுடை வலு பிரண்ட்... நான் சொன்னா உடனே செய்வார்... நம்மடை கச்சேரிக் கட்டிடத்தை இடிச்சுட்டுப் புதிசா ஒரு கட்டிடம் போடச் சொல்லியிருக்கிறன்...'

'அது நல்ல கட்டிடம்தானே, ஐயா... அதுக்குப் பதிலாக எங்கடை பள்ளிக்கூடத்திற்கு ஒரு, கட்டிடம்... அல்லது...'

என்றார் ஒருவர்.

'விசரா...வ் சரா உனக்கென்ன தெரியும்... கச்சேரியைத் தான் இடிச்சுக் கட்டவேண்டும்...' என்றார் கெம்பர்.

'ஐயா... சொன்னால் சரி...' என்றனர் எல்லாரும்.

'அடுத்த அபிவிருத்தி வேலை என்ன ஐயா?...'

கெம்பர் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

'கடற்கரையில் பத்தடி உயரத்திற்கு ஒரு அணை போடுவிக்கப் போறன்...'

'ஏன் ஐயா...?'

'கடற்கரைக்குப் போகிறவர்கள் இந்த அணையில் ஏறி நின்று கடல் அழகை ரசித்துக் காற்று வாங்கத் தான்...'

'அருமையான திட்டம், ஐயா...'

'இந்தக் காசைக் கொண்டு குளம் ஒன்றைக் கட்டினால் விவசாயம் பெருகும் ஐயா...'

'விசரா... விசரா... கடற்கரையில் அணைபோட்டால் வெளிநாட்டுப் பேய்கள் நம்மடை நாட்டிற்கு விரும்பி வரும்... அந்நியச் செலாவணி...ரூரிங் இண்டஸ்ரி...' என்றார் கெம்பர்.

'ஐயா சொன்னால் சரி...' என்றனர்.

'அடுத்த திட்டம் என்ன ஐயா...?'

'அந்தத் திட்டம் நமது நகரத்துக்குப் பெருமை தரக் கூடிய திட்டம்... ஒரு திறந்த வெளி அரங்கு அமைக்கப் போறம்...'

'விளையாடுற காலமா இது ஐயா... அதுக்கு ஒரு கைத் தொழிற்சாலையை...'

'விசரா... விசரா... விளையாட்டு... ஸ்போட்ஸ்... நல்லா வரணும்... அப்பதான் வருங்காலச் சந்ததியினர் தேகதிடத்துடன் கமவேலை செய்ய முடியும்...'

'ஐயா சொன்னால் சரி... ஐயான்ர இளையவர் லண்டனில படிக்கிறார்... எப்ப முடியுது படிப்பு...?'

'இன்னும் இரண்டு வரியம் இருக்குது... எஞ்சினியராக வருவான்...' என்றார் கெம்பர்.

'ஐயான்ர திட்டங்கள் அருமையான திட்டங்கள்...'

'எனக்கு இரவும் பகலும் என் தொகுதியைப் பற்றித் தான் கவலை... நம்மடை தமிழ்ப் பேய்ச் சாதி முன்னேற வேண்டும்... அடுத்த அருமையான திட்டம் ஒன்று செயல்பட இருக்குது...'

'என்ன திட்டம் ஐயா...?'

'மீனவர்களுக்கு வீடமைத்துக் கொடுக்கும் திட்டம்... நூறு வீடுகள் ஏழை மீனவருக்கு அமைத்துக் கொடுக்கப் போறம்...'

'ஆ... அருமையான திட்டம்...' என்றனர் எல்லாரும்: 'கடற்கரையில வீடமைக்க ஏற்ற காணியில்லையே ஐயா...'

'அதுக்காகத் தான் நான் என்ர கடற்கரைக் காணி யம் பது ஏக்கரையும் அரசாங்கத்திற்கு இத்திட்டத்திற்காகக் கொடுக்கப் போறன்...'

'என்ன பெருந்தன்மை...' என்றனர் சப்போட்டேஸ்.

'எந்தக் காணி ஐயா... நீங்கள் போன வரியம் விக்கப் பார்த்து விலை போகாமல் கிடக்கிற அந்தக் காணியோ?...' என்று கேட்டான்., ஒருவன். அவனைக் கெம்பர் முறைத்துப் பார்த்தார்.

'அரசாங்கத்திற்குத் தன்ர காணியை விக்கிறதுக்கு நல்ல திட்டம்...' என்று ஒரு இளவட்டம் முணுமுணுத்தான்.

எல்லாரும் ஒருவிதமாக விடை பெற்றனர். ஊத்தைக் குடியன் நின்றிருந்தான்.

'என்ன விசயம்?...' என்றார் கெம். பி.

'ஐயா...' என்று குழைந்தான் ஊத்தைக்குடியன்: 'எங்கட சங்கக்கடையில ஒரு மனேச்சர் வேலை காலியா இருக்குது... அதுக்கு...'

'உன்னைப் போடவோ?...'

'சீச்சி... என்ர மருமோன் பொடியன் ஒருவன்... எறிமாடன்... இருக்கிறான்... நல்ல பிள்ளை...'

'எறிமாடனோ?... ஐ. ஆர். சி. எல்லே அவன்...'

'அது முந்தி... இப்ப நல்லாத்திருந்திட்டான்... ஐயா தான் எடுத்துத் தர வேண்டும்...'

'கனபேர் சொல்லியிருக்கினம்... எதுக்கும் நீர் என்ர பிரைவேற் செகறற்ரரீயுடன் கதையும்...' என்றபடி கெம். பி. எழுந்து உள்ளே போனார்.

பிறைவேற் செக்றற்ரரி சொன்னார்:

'இஞ்சை பாரும்... மனேச்சர் வேலை எடுக்கிறது இலேசான வேலையில்லை... மினிஸ்ரர் மாரைப் பார்க்க வேணும்... கனபேரைப் பார்க்க வேணும்... எல்லாத்துக்கும் ஐயா செலவளிக்க முடியாது... நீர் தேவையான ஆள் ஆனபடியால் சொல்லுறன்...ஏதாவது ஒழுங்கு படுத்திக்கொண்டு வாரும்..'

'என்ன ஒழுங்கு படுத்திறது ஐயா...?'

'இரண்டை...' என்றார் செக்றற்ரரி.

இரண்டு மெண்டிஸ் ஸ்பெசலாக்கும் என்று ஊத்தைக் குடியன் எண்ணிக் கொண்டான்.

'சரி, ஐயா...நாளைக்கு வாறன்...' என்று விடை பெற்றான்.

# அத்தியாயம் 7

# எறிமாடனின் கனவு

நமது கதையின் மாபெரும் வில்லன் எறிமாடனை வாசகர்களுக்கு இந்த இடத்தில் அறிமுகம் செய்து வைத்துவிடுதல் நன்று. பெரியபல்லுப் பெத்தாச்சியின் அருந்தவப் புதல்வன் தான் எறிமாடன். ஒரே பிள்ளை என்று பெரியபல்லுப் பெத்தாச்சி செல்லம் கொடுத்து அவனைக் குட்டிச் சுவராக்கி விட்டாள். தகப்பனுக்குத் தெரியாமல் மலங்கமாமுனியின் காதல் நாடகங்களைப் பார்ப்பதற்கு மகனுக்குக் காசு கொடுத்துக் கொடுத்து அவனை அடங்காப் பிள்ளையாக வளர்த்துவிட்டாள். மகன் பள்ளிக்குப் படிக்கப் போகிறான் என்று பெத்தாச்சி எண்ணியிருக்க அவன் காக்கைவிழியனின் கள்ளுக் கொட்டிலில் காலம் தள்ளினான்.

இவனுடைய நடத்தையால் பெரியபல்லுப் பெத்தாச்சியிடம் இருந்த சொத்தும் கரைந்துவிட்டது. மகனுக்கு எப்படியாவது ஒரு கல்யாணத்தைக் கட்டி வைத்துவிட்டால் மகன் திருந்திவிடுவான் என்று பெத்தாச்சி எண்ணினாள். அதற்கு வசதியாக எறிமாடனும் ஊத்தைக்குடியனின் மகள் கொத்தியைக் காதலித்துக் கலியாணம் செய்யப் போவதாகக் கூறி விட்டான்.

பெரியபல்லுப் பெத்தாச்சி ஒரு பாட்டம் அழுது தீர்த்தாள்.

'நீ கலியாணம் செய்... ஆனால் காதலித்துக்கலியாணம் செய்யாதை...' என்றாள்.

'சரியணை, அழாதை...' என்று தாய்க்கு ஆறுதல் கூறிவிட்டு வெளியே வர வாசலில் எறிமாடனின் நண்பன் கருங்குழி நின்றிருந்தான்.

'என்னடா, எறிமாடா, நான் கேள்விப் படுகிறது உண்மையா?...'

'என்ன...?'

'நீ சொத்திப் பெண்ணைக் கலியாணம் செய்யப்போறியாமே?... அப்ப உன்னை நம்பி இருக்கிற அவளின்ர கதி என்னடா?...'

'அந்தக் கதையை விடு... அவள் கிடக்கிறாள்...சொத்தி சோக்கான பெட்டையடா... கலியாணம் கெதியில நடக்க இருக்குது...'

'சொத்தி கடலைமாடனைக் காதலிக்கிறாளாமே?...'

'அது பொய்... சொத்தி என்னைத் தான் காதலிக்கிறா...'

'கலியாணம் செய்யப் போறன் என்கிறாய்... வேலை ஒண்டும் வேணுமே?...'

'மாமா ஊத்தைச்சுடியர் சங்கக்கடை மனேச்சர் வேலை வாங்கித்தாறன் என்று சொல்லியிருக்கிறாரடா...கெம். பியும் ஓமெண்டிருக்கிறாராம்...'

'அப்ப பெரிய வேலை தான்... சங்கக்கடை மனேச்சர் வேலை எண்டால் ஒரு வரியத்தில வீடு கட்டிவிடலாம்... நீ முதலில வேலை எடு... நான் சொல்லித் தாறன் எப்படி வெட்டிறது என்று... எனக்கு ஒரு கடைக்காரர் பழக்கம்... நீ கூப்பன் சாமான்களை வெட்டி வைச்சியெண்டால் அவர் ராராவா லொறிவிட்டு ஒருவருக்கும் தெரியாமல் ஏற்றிவிடுவார்... சுளையாப் பணமும் வரும்...'

'இப்ப அதெல்லாம் கஷ்டம், கருங்குழி... முன்னைப் போல இல்லை... சனங்களும் வலு தெளிவு... ஏமாத்தேலாது...'

'சனத்துக்கென்ன என்ன என்ன சாமான் சங்கத்திற்கு வருகுது என்று தெரியவா போகுது... ஊரில பெட்டிசம் எழுதுகிறவைக்கு ஸ்பெசலா எதையாவது கொடுத்துச் சமாளிச்சிட்டால் சரி... விசயம் வெளியில வராது... ரின் பால், லக்ஸ்பிறே எல்லாத்தையும் வழியிலேயே தட்டிவிட்டிட வேண்டும்... சனத்துக்கு அரிசியையும் சீனியையும் ஓரளவு கொடுத்திட்டு மற்றெல்லாத்தையும் ஒரு மாதிரி வெளியில வித்திட்டால் சரி...'

'இப்பிடி எல்லாம் செய்தால் கணக்குப் பிழைக்கும்... பொருள் குறையும்... வேலையில்லாமல் போக வேண்டியது தான்...'

'அப்படி சோட்டேய்ச்சு வந்தால் இருக்கவே இருக்குது ஒரு வழி...'

'என்ன வழியடா...?'

'சங்கக் கடை ஓட்டைப் பிரிச்சிட்டுக் களவு போனது போல ஒரு நாடகத்தை ஆடிவிட வேண்டியதுதான்... இப்ப இந்தச் சங்கக் கடை மனேச்சர் மார் எல்லாம் அதைத்தானே செய்யினம்...' என்றான் கருங்குழி.

எறிமாடன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

'இரண்டு மூன்றைக் கொடுத்தாவது இந்த வேலையைத் தான் எடுக்க வேண்டும்...'

'வேலை கிடைச்சால் மச்சான்... என்னைச் சேல்ஸ்மனாகப் போட்டிடு...'

'சரி... பார்ப்பம்...' என்றான் எறிமாடன்.

இருவரும் நடந்தார்கள்.

'காக்கை விழியன்ர கள்ளுக் கொட்டிலுக்குப் போவமோ!...' என்று கேட்டான் கருங்குழி.

'போலவம்... இந்தக் கள்ளுக் கொட்டில்களையும் ஏதோ கோப்பறேசன் ஆக்கப் போருன்களாம்...'

'அப்பிடித்தான் நான் கேள்விப்பட்டன்... எல்லாம் கோப்பறேசன் தான்... மனிதசாதி செய்யிறதுகளை எல்லாம் பேய்ச் சாதியளும் செய்யப் பாக்கிருன்கள்...'

கள்ளுக் கொட்டிலில் புதியதொரு செய்தியை எறிமாடன் கேள்விப்பட்டான்.

'கொத்தியைக் காணவில்லையாம்...'

எறிமாடன் ஊத்தைக்குடியன் இடம் நோக்கி ஓட்டமாய் ஓடி வந்தான்.

## அத்தியாயம் 8

# கொத்தியைக் காணவில்லை

கொத்தியைக் காணவில்லை. என்ற செய்தி காட்டுத் தீ போல் எங்கும் பரவிவிட்டது. கொத்தி காணுமல் போனதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தைக் கூறினர்கள்.

'உவன் ஊத்தைக்குடியன் அவளுக்கு ஒரு கலியாணத்தைச் செய்துவைக்காமல், குமரை வீட்டிலை வைத்திருந்தால் அவள் ஓடாமல் என்ன செய்வாள்...'

'அவளின்ரை வயதிலை கண்டியோ, எனக்கு இரண்டு பொடியனும் ஒரு பொடிச்சியுமிருந்தது... குமருகளைக் காலத்தோடேயே கரை சேர்க்கவேண்டும்.'

'கரை சேர்க்கிறது இலேசான காரியமே...?'

'வசதிக்குத் தக்கதாக மாப்பிள்ளையைப் பார்த்துச் செய்கிறது தானே...?'

இன்னொரு சாரார் வேறு விதமாகப் பேசிக் கொண்டார்கள்.

'கொத்திக்கு ஆரோ ஒருவனோடை தொடர்பாம்...சுடலை மாடனாம்... அவனோடை தான் ஓடிப் போட்டாளாம் ..'

'நானும் கேள்விப்பட்டனான்... ஊத்தைக்குடியன் எறி மாடனுக்கு அவளைப் வலோத்காரமாகச் செய்து கொடுக்க முயன்றதாலை தான் அவள் சுடலைமாடனோடு ஓடிப் போயிருப்பாள்...'

சிறிது நேரம் செல்ல இன்னொரு வதந்தியும் கிளம்பியது.

'நேற்றிரா எறிமாடன் கொத்தியைக் கதறக் கதறத் தூக்கிக் கொண்டு போனதை குறளியன் கண்டவனாம்...'

'கடலுக்கை விழுந்து செத்திருப்பாளோ?... ஆருக்குத் தெரியும்... இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கு யோசிச்சு நடக்கிற புத்திகிடையாது... காதல் எண்டால் ஏதோ மோட்சம் போல நினைப்பு. மனிசப் பொடியளைப் பார்த்து உதுகளும் கெட்டுப் போச்சுதுகள்...'

'உது எனக்கு நிச்சயமாகத் தெரியும். உவளை ஆரோ மனிசர் தான் பிடிச்சிருக்க வேணும்...'


இந்த வதந்திகள் எல்லாம் ஊத்தைக்குடியனுக்கும் பெரிய கொத்திக்கும் காதுகளில் விழத்தான் செய்தன. பெரிய கொத்தி குரலெடுத்து அழுதாள்.

'உன்னை எவ்வளவு அருமையாக வளத்தனடி... சொல்லிக் கொள்ளாமல் சுடலைமாடனோடு ஓடிட்டாயே. எவ்வளவு சீரும் சிறப்புமாக உனக்குக் கலியாணம் செய்துவைக்க ஆசைப்பட்டன். நீ மனிசராய் அலையப் போறாய்."

'எல்லாம் உன்னாலை தான் வந்தது. நீ வளர்த்த வளர்ப்பு அவள் எனக்குக் 'கியா' விட்டிட்டுப் போட்டாள்...'

'இயாவோ...?'

'கியா வெண்டால் கியா தான்...'



எறிமாடன்: 'எங்கிருந்தாலும் விடப் போவதில்லை...'

செய்தி அறிந்த நமது கதையின் மாபெரும் வில்லன் எறி மாடன் ஓடி வந்தான். எருமைக்கடா போலப் பூமி அதிர அவன் வந்தான்.

'மாமா... நான் கேள்விப்பட்ட தெல்லாம் உண்மை தானே...?'

'ஊத்தைக்குடியனால் அவனை நிமிர்ந்து பார்க்க முடிய வில்லை.

'அவள் என்னை மோசம் செய்துவிட்டாள்...' என்றான், குடியன்.

'அவள் எங்கிருந்தாலும் நான் விடப் போவதில்லை, மாமா! அவளையும் சுடலைமாடனையும் கண்டுபிடிச்சு, அவனை அந்த இடத்திலேயே சமாதியாக்கிவிட்டு அவளை இழுத்து வந்து உங்கள் முன் நிறுத்துகிறன்...' என்று கூக்குரல் போட் டான் எறிமாடன்.

'நானும் வாறன்... வா, கோம்பயன்மணலுக்கு முதலில் போய்ப் பார்ப்பம்...' என்று ஊத்தைக்குடியனும் புறப்பட் டான்.

'அவளுக்கு ஒன்றும் செய்து போடாதையுங்கோ...' என்று கதறினாள், பெரிய கொத்தி.

இவை இவ்வாறிருக்க, நாம் நமது கதாநாயகன் சுடலை மாடன் என்னவானான் என்பதைக் கவனிப்போம்,

மனிசக் காதலைப் பார்க்கப்போய், பனை மரத்தில் மோதி நுனிப் பல்லை முறித்துக்கொண்ட சுடலைமாடன் பல் வேதனை தாங்காமல், எருமைப்பல்லன் இல்லத்தில் மேலும் ஒரு நாள் தங்க நேர்ந்தது.

அடுத்த நாள் முதல் சாமத்திலேயே நண்பர்கள் இரு வரும் புறப்பட்டார்கள். அவர்களுடைய துரதிர்ஷ்டம், அவர்களை யாழ்ப்பாண ரவுனுக்கு இழுத்துவந்தது.

மாம்பழச் சந்திக்கும் யாழ்ப்பாண ரவுனுக்கும் இடையில் ஒரு பஸ் சேவை இருக்கின்றது; ஒரே ஒரு பஸ் காலை 8 மணியி

விருந்து இரவு 10.30 மணி வரை நாயாய் அலையும். இந்தப் பஸ்சின் பாதை கொக்குவில் சுடலையை அடுத்துத்தான் இருந்தது.

எருமைப்பல்லனும் சுடலை மாடனும் ரோட்டில் கால்வைக்கவும், மாம்பழச் சந்தி பஸ் வரவும் சரியாக இருந்தது.

'பஸ்சிலேபோவம்' என்றான், எருமைப்பல்லன்.

'உது கோம்பயன் மணலுக்குப் போகாது...'

'எனக்கு வழி தெரியும் நீ ஏறு...'

எருமைப்பல்லன், சுடலைமாடனை இழுத்துக்கொண்டு பஸ்சின் மேல் கூரையில் தாவி ஏறிக்கொண்டான்.

'என்ன அண்ணை... பஸ்சுக்கு மேலே ஏதோ விழுந்த மாதிரிக் கிடக்குது...' என்றார் கொண்டக்டர்.

'ஏதாவது கொப்பு விழுந்திருக்கும்' என்றார் டிரைவர்.

சுடலைமாடன் பஸ்சின் கூரையில் குப்புறப் படுத்துக் கொண்டான்.

'ஏன் படுக்கிறாய்...?'

'உனக்கு என்ன தெரியும்... நிமிர்ந்து உட்கார்ந்தால், ரோட்டுக்குக் குறுக்கே நீண்டிருக்கிற மரக்கொப்புகள் என்ரை மற்றப் பல்லையும் முறிச்சிப் போடும்...' என்றான் சுடலை.

எருமைப்பல்லன் கட கட வென்று சிரித்தான்.

'பேயா...பேயா...! இப்ப ரோட்டுகளிலை மரங்களும் இருக்கே? முனிசிப்பால்டிக்காரர் கண்ட பாட்டிற்கு வெட்டித் தள்ளிப்போட்டினம்... யாழ்ப்பாணத்தைப் பற்றி உனக்கு என்ன தெரியும். மூன்று மாதத்திற்கு ஒரு மேயராம். ஒருத்தர் ரோட்டுக் கரையில் நிற்கிற மரத்தைத் தறிக்கச் சொன்னால்

பிறகு வாறவர் நடச் சொல்வார்... நீ நல்லா நிமிர்ந்து உட்காரு... மரக் கிளை ஒன்றும் குறுக்கை வராது....

சுடலைமாடன் எழுந்து உட்கார்ந்தான். அவனால் சும்மா இருக்க முடியவில்லை. தலையைக் கீழே சாய்த்து- யன்னலூடாகப் பஸ்சினுள்ளே பார்த்தான்.

அதிக பிரயாணிகள் இல்லை. ஐந்தாறு பேர் தான். அப் பிரயாணிகளில் ஒருவனைச் சுடலைமாடன் ஏற்கனவே கண்டிருக்கிறான்.

'டேய் எருமைப்பல்லா...! நேற்றிரவு பனை வடலிக்கை கண்டோமே... காதல் பண்ணின பொடியன் இங்கை இருக்கிறான்'

'உவருக்கு என்ன வேலை? செக்கன் சோ படத்திற்குப் போறார் போலை! படம் பார்க்கிறதும், பெட்டையளுக்குப் பின்னாலை சுத்துறதும் தான் இந்தக்காலப் பொடியன்களுக்கு வேலை. வீடு வாசல் படிப்பு என்று ஏதாவது எண்ணமிருக்கே.. அறுவான்கள், எப்படித்தான் உருப்படப் போகிறான்களோ?'

'உனக்கு மனிசரைப் பற்றிக் கனக்கத் தெரியுது... உந்தப் பொடியன் வெள்ளையா எதையோ வாயிலை வைச்சுப் புகை விடுகிறான்...'

'கோதாரி விழுவானுக்கு உந்தப் பழக்கமும் இருக்கே...? உதுதான் சிகரெட்!... ஒரு நுனியை வாயிலை வைச்சு மறு நுனியிலை நெருப்பை வைச்சுப் புகைக்கிறது...'

பஸ் ஓரிடத்தில் நின்றது. யாரோ ஒருவர் இறங்கினார்.

'அப்ப நான் போயாவிற்கு உன்னைப் பார்க்கிறேன்..' என்றார், பஸ்ஸிற்குள் இருந்த ஒருவரிடம்.

'பேயாவாம்...' என்றான் மாடன்.



பேயாவாம்...

'போடா விசரா ..! பேயா இல்லை. போயா...! அது ஒரு நாள். இப்ப கொஞ்சக் காலமாகத் தான் போயா பிறிப்போயா என்று நாள் கணிக்கினம். போயா ஏதோ புனிதமான நாளாம். ஆனு, அண்டைக்குத் தான் எல்லாரும் இறைச்சி அடிச்சுச் சாராயம் குடிக்கிற நாள்.'

'சாராயமோ...?'

'ஓம்... அது ஒரு வகைக் குடி. நல்ல சோக்கா இருக்கும். குடிச்சால் சும்மா காற்றிலை மிதக்கிற மாதிரி. நீ காணவில்லையே? சுடலைக்குப் பிணத்தை எரிக்கக் கொண்டு வரும்போது பலர் ஆடி ஆடி வருவினம். அது சாராயத்தின் வேலைதான்!... ரவுனுக்கு வா... உனக்கு அங்கினேக்கை எடுத்துத் தாறன்.'

பஸ் ஓடிக் கொண்டிருந்தது. சுடலைமாடன் பஸ்ஸினுள் பார்த்தான் பஸ்ஸில் இருந்த ஒருவர் கூறினுர்:

'என்ன வாழ்க்கையப்பா... எல்லாம் விலை கூடிப்போச்சுது... அரிசி, சீனி, மா எல்லாம் விலை... பிள்ளைத்தாச்சிக்கு உள்ளி வேண்டுறதெண்டாலும் ஒரு றுத்தல் நாற்பது ரூபாவாம்... ஓவல்ரின், ஹோர்லிக்ஸ் என்று சத்தான சாப்பாடுகள் இப்ப எங்கை கிடைக்குது...'

சுடலைமாடன் தலையை நிமிர்த்தி எருமைப் பல்லனைப் பார்த்தான்.

'ஒவலு டின் என்றால் என்ன?...'

'நானும் கேள்விப்பட்டனான்... முந்தி எங்கட முன்னோர்கள் பாவித்த ஒரு மாச் சாப்பாடு...'

'கொர்லிக்ச்சு என்றால்...?'

'அது... ஓ அதுவா... வயித்தாலையடிச்சவை சாப்பிடுற மருந்து... நானும் முந்திச் சாப்பிட்டனான்...'

பஸ்ஸினுள் வேறு பேச்சுக்கள் அடிபட்டன.

'இப்ப பழையபடி மரவள்ளிக் கிழங்கிற்கும் பனாட்டு ஒடியலுக்கும் வந்திருக்கிறம்...'

'என்ன இப்ப பனாட்டு ஒடியலைப் பற்றிக் கதைக்கினம்...' என்று கேட்டான் சுடலைமாடன்.

'உதுதான் காலத்தின்ர கோலம்... கூப்பன் அரிசியையும் அமேரிக்கன் மாவையும் தின்று தின்று குசாலா இருந்தவை... இப்ப அதொன்றும் கிடைக்குதில்லை... வேற வழி... கவனிப்பாரற்றுக் கிடந்த மரவள்ளியும் பனாட்டும் ஒடியலும் இப்ப பஞ்சம் தீர்க்கிதுகள்.... உவைக்கு நல்லா வேணும்... கையில சாப்பாட்டை வைத்துக்கொண்டு ஊரான்ர சாப்பாட்டைப் பார்த்திருந்தால் இப்படித்தான்... எங்களுக்கும் இப்பிடி வரும்...' என்றான் எருமைப் பல்லன்.

'இருபது ரூபா உழைச்சாலும் எங்கை ஒரு வேளைக்கும் காணவில்லை...' —பஸ்சில் இருந்த ஒருவர்.

'எப்படிக் காணும்?...' என்றான் எருமைப்பல்லன். உழைக்கிறது... குடிக்கிறது... கவுன்மேந்து தாற ஓசி அரிசியும் ஓசி மருந்துத் தண்ணியும் வீட்டில எத்தனை உசிர் இருந்தாலும் சாகாது பிடிச்சு வைச்சிருக்கும்... பிறகென்ன...

பொழுதுபோக்கு... மனிசிமாரோடை நித்தம் சரசம்... வரி யத்துக்கு ஒன்று பெத்துப் போட்டிருக்கினம்... எட்டு ஒன்பது பத்து...... காச்சு மூச்சென்று வீடெல்லாம் பிள்ளையள்...... கோழிக்குஞ்சுகள் போல காலுக்கை...கையுக்கை... வயுத்துக் கை... உவைக்கு என்ன வேலை தெரியாட்டிலும் உது சரியாத் தெரியும்... அப்ப இருபது காணுமே?... ஒரு கொத்து அரிசி யின்ர விலை இப்ப என்ன?...யோசிக்கிறது கிடையாது...ஒன்று ரெண்டோடை நிப்பாட்டினுல் என்ன?...'

'பாவங்கள்... திட்டாதை... உந்த மனிசர் உது ஒன்றைத் தான் சரியாச் செய்யினம்...' என்ருன் சுடலைமாடன்.

'அந்தக் காலத்தில, சுடலைமாடா, உந்த மனிசர் எதிலும் கட்டுப்பாடா இருந்தினம்...... இந்தக் காலத்தில அதெல்லாம் சரி... பிள்ளை சாமர்த்தியப்பட்டால் அந்தக் காலத்து புருஷன் பெண்டாட்டிமார் பிரிஞ்சிடுவினம்... இப் பெண்டால் தாயும் மோளும் ஒரே நேரத்தில பிள்ளை பெறுகி னம்... குடும்ப வாழ்க்கை தேவைதான்... அதுக்கும் ஒரு கட் டுப்பாடு வேணும்... இப்ப தான் எத்தனை முறையள் இருக் குது...' என்ருன் எருமைப்பல்லன்.

பஸ்சினுள் முன் பேசியவர் பேசினுர்:

'எல்லாம் தலைவிதி...பிள்ளையள் கடவுளின்ரை கொடை'

'கடவுளின்ரை கொடையாமோ? எனக்குப் பச்சைப் படி யாக வருகுது கடவுள் தந்ததை சும்மா வைச்சிருந்தால் என்ன...?'

'வெட்கம் கெட்ட கதை கதையாதை...' என்ருன் சுடலை மாடன்.

## அத்தியாயம் 9

# சாராயம் செய்த வேலை

பஸ் இரவு 10-45 மணிக்கு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கு வந்து சேர்ந்தது. சுடலைமாடனும் எருமைப்பல்லனும் பஸ் கூரையில் சிறிது நேரம் இருந்தார்கள்.

'நான் ஒருக்காலும் இந்தப்பக்கம் வரவில்லை...' என்றான் சுடலைமாடன். 'இந்த நேரத்திலும் இந்தச் சனங்கள் நித்திரைக்குப் போகாமல் பேய் போலத் திரியுதுகள் ..'

'அங்கை பார்...' என்று ஓரிடத்தைச் சுட்டிக் காட்டினான் எருமைப்பல்லன்.

'கூய்...' என்று வீரிட்டான் மாடன். 'அது என்னடா... எங்களிலும் பார்க்கப் பெரிய உருவம்... உசந்து நிக்குது... பார்க்கப் பயமாக இருக்கு...


'உலகம் தெரியாத பேயடா,நீ! உன்னைப் போய் கொத்தி காதலிச்சாளே? உதுதான் படம் ஓடுற சினிமாத் தியேட்டர்! அந்தப் படத்திலை நடிக்கிற கதாநாயகனைத்தான் உப்படி பெரிசாக் கீறி தியேட்டரிலும் உயரமாக நிறுத்தி வைச்சிருக்கினம்... அதைப் பார்த்துப் பயப்படுகிறியே...'

'உந்தாளே கதாநாயகன்? கன வயசு இருக்கும்போலை... பக்கத்துப் படத்திலை ஒரு சிறுபெட்டையைக் கட்டிப் பிடிச்சபடி இருக்கிறார்...'

'தமிழ்ப்படத்திலை உப்பிடித்தான், கண்டியோ? பதினெட்டு வயசுப் பொடிச்சியை ஐம்பது அறுபது வயதுப் 'பொடியன்' தான் காதலிக்க வேணும். உதுகளைப் பாத்துத்தான் இந்தக் காலப் பொடியன்கள் தங்களுக்கு வயசு வரவில்லை என்று ரகசியமாகக் காதலிச்சித் திரிகிறான்கள்! கிழடுகள் 'பப்ளிக்கா'

காதலிக்கப் பாக்குதுகள்!... உனக்கு ஒரு விசயம் தெரியுமே? எங்கடை பக்கந்தான் நடந்தது! நம்மடை விதானையாற்றை கடைசி மோள் ஒரு சினிமாப் பைத்தியம்... அதை ஒரு தமிழ் வாத்தியாருக்கு கலியாணம் கட்டி வைச்சினம்... கலியாணம் செய்து கொண்ட மறு நாளே அவள் புரிசனை விட்டிட்டு வந்திட்டாள்...'

'ஏன்...?'



தமிழ்ப்படக் கதாநாயகன்...

'முதலிரவிலே பாட்டுப் பாடச் சொல்லிப் புரிசனைக் கேட்டாளாம். பாடிக்கொண்டு வளவெல்லாம் ஓடிப் பிடிச்சு விளையாட வேண்டும் என்று கேட்டாளாம். பாவம் அந்த மனிசன்...! படங்களிலே பார்த்துப் பாள்த்து முதலிரவிலே பாட்டுப்பாடி ஓடிப்பிடிச்சு விளையாடுகிறது என்று இந்தப் பொடிச்சி நினைச்சிட்டுது...'



சுடலைமாடனின் கவனம் இப்போது ஆஸ்பத்திரி வீதிப்பக்கம் சென்றது. ஒரு பெண்ணும் ஆடவனும் வந்துகொண்டிருந்தார்கள், பெண் மார்புக்கு குறுக்கே ஒரு துணியைக் கட்டியிருந்தாள்; அவளுடைய கையில் சிகரட் புகைந்துகொண்டிருந்தது. எருமைப்பல்லன் சுடலைமாடனின் கவனம் போன பக்கம் பார்த்தான்.

'உவை எங்கடை ஊர்க்காரரல்ல... வெள்ளைக்காரர்...']

துணிப் பஞ்சமே?...

அதுதானே... எங்கடை பொம்பிளையள் உப்பிடி உடை உடுத்து சிகரட்டுப் குடிட்பினமே?...'

'கடகட'வென்று நவாலி ரூட்டு பஸ் போல எருமைப் பல்லன் சிரித்தான்.

'யாழ்ப்பாணப் பொம்பிளையள் நாகரீகத்தில எப்பவோ முன்னேறிட்டினம். யாழ்ப்பாணத்துப் பொம்பிளையளைப் பார்த்துத்தான் உந்த வெள்ளைக்காரர் இப்ப நாகரீகம் கற்று

சொண்டவை! யாழ்ப்பாணப் பொம்பிளையள் புகைக்கிறதை நீ காணயில்லையே?...'

'புகைச்சலையே... கண்டிருக்கிறன். ஆராவது நல்ல சீலை புது நகை போட்டால் புகைச்சல்படுகிறவைதான்...'

'அதைச் சொல்லவில்லை நான்! சுருட்டுப் புகைக்கிறதை நீ காணவில்லையே? நூற்றுக்கு முப்பது பேர் வீட்டில இருந்து சுருட்டு சுருட்டிப் புகைக்கிறவை, கண்டியோ? அது உனக்குப் பெரிசாப்படவில்லை. உந்த வெள்ளைக்காரச்சி சிகரெட் புகைக்கிறதுதான் பெரிசாப்படுகுது'

'எங்கடை மனிசர் உப்பிடி உடுப்புப் போடுகிறவையே...?'

'ஏனில்லையே? மேல் சட்டையில்லாமல் குறுக்கை சீலை கட்டுற நாகரீகம் யாழ்ப்பாணத்தாற்றை! கிராமப் பக்கங்களிலை இப்படிச் சட்டையில்லாமல் குறுக்குச் சீலைதான் கட்டுகிறவை...'

'ஓம்... ஓம்... நான் கண்டிருக்கிறன்...' என்று ஒப்புக் கொண்டான் சுடலைமாடன்: நீ ஏதோ வாங்கித் தாறன் எண்டாய்?'

'ஓ மறந்து போனன். சாராயம்...! முற்ற வெளிப் பக்கம் வா. ஆராவது வைச்சிருப்பினம்... ரகசியமாகக் குடிக்கலாம்.'

ஒரு மனிதன் கையிலே ஒரு போத்தலுடன், தள்ளாடித் தள்ளாடி நடந்து போவதை இருவரும் கண்டனர். அவர் வாயிலிருந்து உருத் தெரியாத வார்த்தைகள் கொட்டிச் சிந்தின.

'அவற்றை கையிலுள்ள போத்தலை மெதுவாகப் பறி...' என்றான் எருமைப்பல்லன்.

'மாட்டன்... அவன் என்னைப் பிடிச்சுடுவான்...'

'அவனுக்கு இப்ப எதுவும் தெரியாது. முழு வெறியிலை போறார் நானே பறிச்சுத் தாறன்'

எருமைப்பல்லன் மெதுவாகச் சாராயப்போத்திலை பறித்தான்.

'யாரடா... பறிக்கிறது?... இந்தா மச்சான் நீயே? நல்லாக் குடி... நல்லாக் குடி...' என்று அந்த மனிதன் கையை விட்டான்.

சுடலைமாடனுக்கு உடம்பு வெடவெடத்தது: 'உன்னை இந்தாளுக்குத் தெரியும் போலை...'

எருமைப்பல்லன் சாராயத்தைச் சுடலைமாடனிடம் கொடுத்தான்; சுடலைமாடன் அதை வாங்கி ஒரே மூச்சில் வாய்க்குள் ஊற்றிக் கொண்டான்.

'சோக்கா இருக்குது ..'

'வா... இனிப் போவம்...'

நகரத்தில் இருந்து மானிப்பாய்க்குச் செல்கின்ற வீதி கோம்பயன் மணல் அருகாகவே செல்கின்றது. அவ்வழியே நமது நண்பர்கள் இருவரும் வந்து கொண்டிருந்தார்கள்.

'என்ன மச்சான்...... பேசாமல் வாருய்?' என்று கேட்ட சுடலைமாடனை வியப்போடு எருமையன் பார்த்தான். 'மச்சான்... புது உறவு முறை. சாராயத்தின் வேலையோ? அல்வது சோனிப்புட்டுவை எண்ணிக்கொண்டு சொல்கிறுனே?'

'மச்சான்... நீ ரொம்ப நல்லவன், மச்சான்...' என்ற சுடலைமாடன் தள்ளாடி விழப்போனுன். எருமைப்பல்லன் பிடித்துக்கொண்டான்.


'என்ர உசிரைப் போல கொத்தியை நேசிக்கிறன்... மச்சான். உவன் எறிமாடன்... எளிய பயல்... பொறுக்கித் தின்னி...! அவளைத் தட்டிக் கொண்டு போகப் பார்க்கிறது கூடாது. நீ என்ன சொல்கிருய் மச்சான்? அவள் என்ரை உசிர்... கொத்தி... என் கொத்தி...! என்று புலம்பினுன் சுடலைமாடன்.

'சாராயம் நல்லா வேலை செய்யுது' என்று எருமைப்பல்லன் எண்ணிக் கொண்டான்.

'அவள் ஒருத்தி தானே பெண்? கொத்தி இல்லாட்டில் வேறு பெண் இல்லையே...? என்றான் எருமையன்.

'என்ன சொன்னாய்? வேறு பெண்ணோ...? இந்தச் சென்மத்திலை அது நடக்காது. மணந்தால் கொத்தி. இல்லையேல்...'

'சோனிப்புட்டு......' என்று எருமைப்பல்லன் முணுமுணுத்தது சுடலைமாடனுக்குக் கேட்கவில்லை.



'மச்சான்... நீ ரொம்ப நல்லவன்'

வெறியில் நிற்க முடியாமல் தள்ளாடினான் சுடலைமாடன் 'மச்சான்... நான் வரமாட்டன்...... மீண்டும் ஒருக்கா அங்கை போவம்... வா மச்சான்...' என்று எருமைப்பல்லனைப் பற்றி இழுத்துக்கொண்டு சுடலைமாடன் ரவுணுக்கு வந்தான். முற்ற வெளிப்பக்கம் வந்தனர்.

'உதென்ன மச்சான்... ஒரே இருட்டா இருக்குது?...'

'அங்கை ஏதோ கூட்டம் நடக்குது... அதுதான் லைற் போட்டிருக்கிறான்கள்... அதுதான் நமக்கு இருட்டா இருக்குது...'

'வா, மச்சான்... என்ன கூட்டம் என்று பார்ப்பம்...'

எருமைப்பல்லன் எவ்வளவு சொல்லியும் சுடலைமாடன் கேட்கவில்லை. விடாப்பிடியாக அவனை இழுத்துச் சென்றான்.

அது ஒரு அரசியல் கூட்டம். ஏராளமான சனங்கள் பனியில் நின்றிருந்தார்கள். மேடையில் நின்று ஒருவர் பேசிக் கொண்டிருந்தார். லவுட் ஸ்பீக்கர் முழக்கித் தள்ளியது.

'உந்தப் பனியில நின்று உவற்றை பேச்சைக் கேட்கினம்...' என்றபடி நண்பர்கள் இருவரும் ஒரு மரத்தோடு ஒதுங்கிக் கொண்டனர்,

'நாம் சாதித்ததென்ன?...' என்று கேட்டார் பேச்சாளர்.

'உவர் என்ன சாதித்தவர்?...' என்று கேட்டான் சுடலை மாடன்.

'அவரே சொல்லுவார் கேள்...' என்றான் எருமைப்பல்லன்.

'அது உங்களுக்குத் தெரியும்... நான் சொல்லத் தேவையில்லை...' என்றார் பேச்சாளர்.

'எங்கடை கெம்பர் மாதிரியேதான் பேச்சு...' எருமைப்பல்லன்.

'நமது மொழி... நமது கலாச்சாரம் வளர வேண்டும்...' என்று முழக்கித் தள்ளினார் பேச்சாளர். இறுதியாகச் சொன்னார்: 'நாம் தமிழுக்காகப் பாடுபட்ட அறிஞர்களுக்குச் சிலை எடுக்க வேண்டும், நகரத்தின் சந்தி எங்கணும் சிலை எழுப்ப வேண்டும்...'

'அறிஞர்களைச் சந்திக்கு கொண்டு வரப் போறாராம்...'— எருமைப்பல்லன்.

'சந்தியில மேளதாளத்தோடு சிலை வைப்பினம்... பிறகு சந்தி சிரிக்கக் காகம் எச்சமிடும் தலையில... தமிழுக்குப் பாடு

பட்டவைக்கு இது சரியான பெருமை...' என்முன் சுடலைமாடன்.

'வள்ளுவனுக்குச் சிலை... பாரதிக்குச் சிலை... காந்திக்குச் சிலை... ஔவைக்குச் சிலை... நகரம் எங்கும் வைக்கப்போறம்...

'பாவம்... அறிஞர்களும் அரசியலுக்கு வந்திட்டினம்...' —சுடலைமாடன்.

'ஐயா... பிச்சை போடுங்க... நாலு நாளாச் சாப்பாடு இல்லை...'

இருவரும் திடுக்கிட்டுப் போய்ப்பார்த்தனர். அவர்கள் முன் ஒரு பிச்சைக்காரன் கையேந்தி நின்முன். 'நாங்க நிற்கிறது தெரிஞ்சுபோச்சோ?...' என்று கேட்டான் சுடலைமாடன்

'சீ... குருட்டுப் பிச்சைக்காரன் போலிருக்குது...'

வெகு நேரம் நின்று விட்டுப் பிச்சைக்காரன் நகர்ந்தான்.

'சிலை வைக்கப் போகினமாம்... இஞ்சை சாப்பிட வழியில்லாமல் தவிக்கிது...' என்முன் எருமைப்பல்லன்.

அடுத்த பேச்சாளர் மேடைக்கு வந்தார்.

'ஆயிரம் ஏக்கர் காணியை எங்கள் தொகுதி இளைஞர்களுக்காக அடுத்தமாவட்டத்தில் பெற்றிருக்கின்றோம்... இளைஞர்கள் முன் வரவேண்டும்... காடு வெட்டிக் கழனி ஆக்கி...

'இலேசாச் சொல்லிப் போட்டார்...... காடு எடுத்துக் கொடுத்தால் மட்டும் காணும் என்ற எண்ணம்... இந்தக் காலத்தில பணக்காரன்தான் கமமும் செய்யலாம் என்ற நிலை வந்திட்டுது... உவையளுக்குப் புரியிறது வெகு கஷ்டம்...'— எருமைப்பல்லன்.

'மச்சான்... வாடா... பசிக்குது... எங்கினேக்கை மணி சற்றை கடையல்ல போய் ஏதாவது சாப்பிடுவம்...' என்முன் சுடலைமாடன். குளிர்காற்றிற்கு வெறி ஏறிக்கொண்டிருந்தது.

'நான் வர மாட்டன்...' என்று ஒதுங்கினான் எருமைப் பல்லன். 'கோதாரியில விழுவான்கள்... கண்டறிலை எல்லாம் பலகாரம் செய்து வைச்சிருப்பாங்கள்... வாழைக் காயில உளுந்து வடை... தவிட்டில அரிசிமா இடியப்பம்... சோளன் கொட்டையில கோப்பி... வர மாட்டன்...'

'சரி... சரி... பின்னை வா போவம்...'

இருவரும் திரும்பி நடந்தனர். நகரத்தின் மத்தியில் இருந்த மருந்துக் கடை முன் லொறி ஒன்றிலிருந்து பொருட் களை இறக்கிக் கொண்டிருந்தனர்.

'உதென்ன நடு ராவில பறிக்கிறான்கள்...'

'மருந்துச்சாமான்...'

பெரிய மூட்டையள் கிடக்குது...? மஞ்சலா...'

'சந்தனத் தூளாக்கும்...'

'போடா... உது முதிரை மரத்தூள்...'

'ஓ... ஓ... இப்பத்தான் எனக்கு நினைவு வருகுது... இப்ப இவன்கள் முதிரை மரத்தூளிலதான் சந்தனம் செய்யிறவன் கள்...'

'கடவுளுக்கே கலப்படம் செய்யிற சாதி இந்த மனிச சாதி...'

மானிப்பாய் வீதியில் நடந்து கொண்டிருந்தார்கள்.

தூரத்தில் லொறி ஒன்று ஒளி பரப்பியபடி விரைந்து வந் தது. எருமைப்பல்லன் சுடலைமாடனை இழுத்துக் கொண்டு பக்கத்து வேலியைத் தாண்டி உள்ளே குதித்தான். உள்ளே—

இதன்னை மரத்துக்குக் கீழே இரண்டு உருவங்கள் குந்தி யிருந்தன.

'ஆரோ குதிச்சது போலக் கேட்டுது... என்று கேட்டது பெண் உருவம்.

'தேங்காய் விழுந்திருக்கும் பயப்படாதை...' என்றது ஆண் உருவம்.

'எங்கை போனாலும்... இந்த வியாதிதான்...' என்றான் எருமைப்பல்லலன்.

'கணவன் மனைவியைக் குழப்பாதை மச்சான்...' என்றான் சுடலைமாடன்.

'கணவன் மனைவி வீட்டில இடம் கிடைக்காமல் அடி வளவுக்கையே காதலிப்பினம்...'

பெண் சொன்னாள். 'நாங்க இப்படிக் களவாச் சந்திக்க வேண்டி இருக்குது... பயந்து பயந்து... என்ர விதி...'

'என்ன செய்யிறது, பாரும்... உம்மடை புரிசனுக்கு உம்மில சந்தேகமில்லையே?...'- ஆண்.

'அடி கோதாரி... விசயம் அப்பிடியே?...' என்றான் சுடலை மாடன்.

'அவருக்குச் சந்தேகமில்லை... இந்த முறைதான் விசயம் பிழைக்கப்போகுது போலகிடக்குது...நான் ரெண்டு மாசம்... ஆனால் அவர் கடைசியா என்னை விட்டிட்டுக் கடைக்குப் போய் மூன்று மாசமாகுது...'

'உடனே கடிதம் போட்டு ஒருக்கா அவரைக் கூப்பிடுமன்'

'வாருங்கோ... வாருங்கோ... உங்களைப் பிரிஞ்சிருக்கிறது ஏக்கமா இருக்குது... என்றெல்லாம் கடிதம் போட்டன்... வாறன்... வாறன்... என்று எழுதிறார் ஒழிய வாறதா இல்லை.. நாளைக்குத் தந்தி கொடுக்கப் போறன்...'

'கட்டாயம்... செய்யும்...'

'கன நேரம் பேசிக் கொண்டிருந்திட்டம்... அப்ப போகட்டே?...'

'ஏன் அவசரப்படுகிறீர்... இருமன்... வீட்டில் எல்லாரும் நித்திரை...'

அதற்குப் பிறகு அவர்கள் நடந்து கொண்டதைக் கண்டு சுடலைமாடன் முகம் சுழித்தான்.

'வெட்கம் கெட்டதுகள்...'

'பின்னே வா... போவம்...'

அன்று வந்து படுத்தவன் தான். நான்கு நாட்களாக கண் திறக்கவில்லை.

நான்காம் நாள் சுடலைமாடன் கண் விழித்த போது அவன் முன்னே யமன் போல் எறிமாடன் நிற்க அவனருகே ஊத்தைக்குடியனும் நின்றிருந்தான்.

'எங்கேடா... கொத்தி...?' என்று எறிமாடன் உறுமினான்.

## அத்தியாயம் 10

# சுடலைமாடனின் சபதம்

கொத்தி கண் விழித்தபோது இரண்டாம் சாமம் தொடங்கி இருந்தது.

'நல்லா அலுப்புப் போல... அதுதான் நல்லா நித்திரை கொண்டாய், தங்கச்சி!' என்றான் முனிசுழியா.

எல்லாம் கனவு போல அவளுக்குப் பட்டது. கண்களைக் கசக்கிக் கொண்டு விழித்தாள்.

'கொக்குவிலுக்குப் போக வேண்டும் என்றாய்... தங்கச்சி! போவமே...' என்று அவன் எழுந்தான்.

'இவனோடு போவது சரியா? பார்த்தவர்கள் அவளைப் பற்றித் தவருக நினைப்பார்களே? இவனை விட்டால் அவளுக்கு வேறு யார் துணை?' என்று அவள் நினைத்தாள்.

—அவனுடன் புறப்பட்டாள்.

கதவை யாரோ தட்டினார்கள். சோனிப்புட்டு எழுந்து வந்து கதவைத் திறந்தாள்.

'நீ தான் சோனிப்புட்டுவோ?...'

'ஓம்... நீங்க யாரு?...' தன் முன்னே நின்ற ஆடவனையும், பெண்ணையும் வியப்போடு பார்த்தபடி அவள் கேட்டாள்.

'அதைப் பற்றி உனக்கு என்ன? உங்கை சுடலைமாடன் இருக்கிருரே?' என்று கொத்தி கேட்டாள்.

மரியாதையில்லாமல், 'நீ, நான்' என்று அவள் பேசுவது சோனிப்புட்டுவிற்குக் கோபத்தைக் கொடுத்தது. 'உவள் பெரிய மகாராணியாக இருந்தால் தான் என்ன? என்ரை இடத்திற்கு வந்து என்னையே அதிகாரம் செய்வதா?' என்று சோனிப்புட்டு எண்ணினுள். கேலியாக நகைத்தபடி கூறினுள்:

'சுடலைமாடனோ?... மடிக்கை தான் வைச்சிருந்தனுன்... எங்கையோ விழுந்து போனுர்...' என்று மடியை உதறித் தேடுவது போலப் பாவனை செய்தாள்.

'நீ அவரை மயக்கிக் கொய்யத்துக்கைதான் வைச்சிருக்கிருய் என்று எனக்குத் தெரியும்... மானமில்லாத நாய்கள்... தாலியை அறுத்துப் போட்டு ஆடித் திரியினுய்...'

சோனிப்புட்டுவிற்குக் கண்கள் கொவ்வைக் கனிகளாகச் சிவந்தன.

'நீ ஆரடி அதைக் கேட்க... நான் ஆரை வைச்சிருந்தால் உனக்கென்ன...?'

கொத்திக்கு அழுகை அழுகையாக வந்தது. இவளிடம் என்னத்தை அவர் கண்டார்? பேய்க் குலத்திலேயே விகார மானவளாகத் தான் இருக்க, இவளிடம் என்னதான் இருக்கிறது? இந்த ஆண்களே இப்படித்தான். மனிசரைப் போல கழுதைக்கும் மனிசருக்கும் வித்தியாசம் தெரியாத பிறவிகள்!

கொத்தியின் அழுகை கோபமாக மாறியது!

'நான் தான் கொத்தி...' என்று உறுமினாள்.

சோனிப்புட்டு உடனே கேட்டாள்:

'அப்ப இப்ப கூட வந்திருப்பது உன்ரை கள்ளப் புரியனே...?'

'ஓ' என்று அலறினாள், கொத்தி. மூனிசுழியா திகைத்துப் போனான்.

அவளால் பொறுக்க முடியவில்லை. ஓங்கிச் சோனிப்புட்டுவின் கன்னத்தில் அறைந்தாள். அறை சற்று பலமானதாகவே விழுந்துவிட்டது.

அந்தப் பிரதேசமே இடிந்து போகும்படி கூக்குரலிட்டான், சோனிப்புட்டு.

யாரோ பலர் 'தடதட' வென்று ஓடி வரும் ஓசை எழுந்தது. கொத்தி திரும்பிப் பார்த்தாள்.

வந்தவர்கள்—

அவளது தந்தை; சுடலைமாடன்; எறிமாடன்.

சுடலைமாடனின் முகம் கன்றிப் போய், வீங்கி இருந்தது. நெற்றியில் இருந்து இலேசாக இரத்தமும் கசிந்தது.

வெறுப்போடு சுடலைமாடனை நோக்கினாள், கொத்தி. சுடலைமாடனின் கோலம் சோனிப்புட்டுவைக் கலங்க வைத்தது.

'ஆ... இதென்ன கோலம்...? உங்களுக்கு ஆர் அடிச்சது...!' என்று அவள் விரிட்டாள்.

'கொத்தியைக் காதலிச்சதுக்கு எனக்குக் கிடைத்த பரிசு. சோனிப்புட்டு...' என்றான் சுடலைமாடன்.

'எந்தப் படுபாவி இப்படிச் செய்தான்... உங்களைப்போய் அடிச்சானே அவனை றெயில் தான் அடிக்கும்...'

'நான் தான் உதைச்சனான்... கனக்கக் கதையாதை...' என்று உறுமினான், எறிமாடன்.

'பாவி... படுபாவி... பாடையிலே போக...' என்று திட்டினாள், சோனிப்புட்டு; 'உன்னாலை தானே எனக்கு இந்தச் சீரழிவு.'

கொத்தி, சுடலைமாடனைப் பார்த்தாள். அவள் பார்வையில் சந்தேகம் தலை விரித்தாடியது. 'சுடலைமாடன் வந்தது... சோனிப்புட்டு உருகியது... எல்லாம் உண்மை போலத்தான் இருக்குது! உவற்றை முதுகுப் பக்கமும் கருகியிருக்கு... நுனிப் பல்லையும் காணவில்லை. எல்லாம் உண்மைதான்... என்னை ஏமாற்றிப் போட்டார். நான் ஏமாந்து போனேன்.' என்று கொத்தி குமுறினாள்.

சுடலைமாடன் ஏக்கத்தோடு அவளைப் பார்த்து, 'கொத்தி நான் உன்னைக் கடத்திக் கொண்டு போட்டன் என்று எல்லாரும் என்னை...' என்றான்.

'துரோகி...' என்று குமுறினாள், கொத்தி: 'நீ ஒரு துரோகி! நம்பினவளை மோசம் செய்தவன்...'

'நானா...?' என்று விரிட்டான், சுடலைமாடன்.

'உவள் மட்டும் என்ன திறமோ?' என்று சோனிப்புட்டு குறுக்கிட்டாள்: 'யாரோ ஊர் பெயர் தெரியாத ஒருவனோடு ஓடி வந்திருக்கிறாள்...'

எல்லாரும் கொத்தியையும் முனிசுழியாவையும் நோக்கினர்.

'அப்பா!' என்று அலறியபடி தந்தையை நோக்கி ஓடி வந்தாள், கொத்தி.

'தில்...' என்று வார்த்தைக் குடிவன் உறுமினான்: 'யார் இவன்...?'


கொத்தியால் எதுவுமே பேச முடியவில்லை. அவளை அருவருப்போடு சுடலைமாடன் பார்த்தான், மறுகணம், காறி உமிழ்ந்தான்.

'ஐயோ... நீங்களும் நம்புகிறீர்களா?...' என்று கொத்தி கதறினாள்.

'சீ... வெட்கம் கெட்டவள். துரோகி...' என்று கூறிவிட்டுச் சுடலைமாடன் நடக்கத் தொடங்கினான். அவனது இதயத்தில் பெரும் பிரளயமே நிகழ்ந்தது. கோடி கோடி ஆலமரங்கள் வேரோடு சாய்ந்தன. சாம்பல் கலந்த பேய்க் காற்று வீறுடன் வீசியது. கண்கள் நீரைச் சொரிந்தன.

கொத்தியால் ஏற்பட்ட ஏமாற்றம் இப்போது அவனுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. குற்றமற்ற அவனை எறிமாடன் அடித்தானே? அவன் பேடியா?

உள்ளத்தில் என்றுமேயில்லாத உத்வேகம். திடீரெனத் திரும்பினான்:



எறிமாடனும் சுடலைமாடனும் 'பழிக்குப் பழி...'

'டேய்... எறிமாடா...!' என்று சுடலைமாடன் கத்தினன்: 'என்னை அடிச்ச உன்னைப் பழிக்குப் பழி வாங்குவன்... உன் வம்சத்தை நிர்மூலமாக்குவேன்...'

'அதை இப்பவே செய்...' என்று கோபத்தோடு எறிமாடன் அவனை நோக்கி ஓடிவந்தான். அப்போது...

'நில்... அவனைத் தொட்டால் உங்கள் எல்லாரையும் இந்த இடத்திலேயே எலும்பெலும்பாக முறிப்பம்' என்ற குரல் எழுந்தது. எறிமாடன் பார்த்தான்.

அவன் கண் முன்னே, கையில் இரும்புத் தண்டவாளம் ஒன்றை ஏந்தியபடி எருமைப்பல்லன் நிற்க, அவன் பின்னே பலர் கூடி நின்றார்கள்.

'உடனே இந்த இடத்தைவிட்டு எல்லாரும் போயிட வேணும்... இல்லாவிட்டால்...' என்று எருமைப்பல்லன் உறுமினான்.

எறிமாடன் பெரிய முரடன்தான். ஆனால் பலர் எதிர்க்கும்போது என்ன செய்வது?

எறிமாடனின் கோபம் முனிசுழியா மீது திரும்பியது.

அவனை 'அலாக்'காகத் தூக்கி ஆல மரத்தோடு இடிரென வீசிவிட்டான். கொத்தியை ஒரு கையால் பற்றியபடி, 'வாங்க... மாமா... போவம்' என்றபடி அவ்விடத்தை விட்டு விரைந்தான்.

சுடலைமாடன் கவலையோடு ஆலமரக் கொப்பொன்றில் அமர்ந்து கொண்டான். இதயத்தில் ஏமாற்றத்தின் கொந்தளிப்புகள். எவ்வளவு ஏமாற்றம்...?

கொத்தி... கொத்தி... ஏன் என்னை இப்படி ஏமாற்றினாய்? எப்படியடி என்னை ஏமாற்ற உனக்கு மனம் வந்தது? உனக்கு நான் என்ன துரோகம் செய்தேன்? முன்பின் தெரியாத ஒருவனுடன் வீட்டைவிட்டே ஓடி வந்துவிட்டாயே?

'நீ இல்லாமல் எப்படி நான் உயிர் வாழப் போகிறேன். உன்னோடு வாழப் போகின்ற இனிய வாழ்க்கையை எண்ணி யெண்ணி எப்படியெல்லாம் கற்பனை செய்து கனவு கண்டேன் என்பது உனக்குத் தெரியுமா?

கொத்தி, நல்ல அமாவாசை இரவில் நானும் நீயும் இப்படியொரு ஆலமரக் கொப்பில் அமர்ந்து கதைபேசி மகிழ வேண்டும் என்று ஆசைப்பட்டேனே? நான் உனக்குப் பொய்க் கோபம் மூட்டுவேன். நீ சிணுங்குவாய்... நான் சிரிப்பேன் பின் அணைப்பேன்... அந்தக் கனவுகள் எல்லாம் சரி...

கொத்தி, என் அன்பே, நீ என்னை ஏமாற்றிவிட்டாய் என்றதன் பின்பும் உன்னை என்னால் மறந்துவிட முடியவில்லையடி. உன் விகாரத்தை எப்படி மறப்பேன். உன் அமாவாசை நிறத்துக்கு இணை இந்த உலகில் வேறு யார்? உயிரே, ஏன் என்னை இப்படி மோசம் செய்தாய்?

—சுடலைமாடனின் இதயம் ஓலமிட்டது. வாழ்வே அவனுக்கு வெறுத்துவிட்டது. இனி வாழ்ந்து என்ன பயன்? யாருக்காக அவன் வாழ வேண்டும்.

அாரத்தில் ஒளிப் புள்ளி ஒன்று தெரிந்தது. அது வரவரப் பெரிதாகியது. 'கூ....கூ...குச்சுக்...குச்சுக்...' என்றபடி றெயில் வருவது தெரிந்தது.

சுடலைமாடன் முடிவெடுத்துவிட்டான். இதன் முன் பாய்ந்துவிட வேண்டியது தான்.

மெதுவாக மரத்தைவிட்டு இறங்கி றெயில் பாதைக்கு வந்தான்.

சாவதற்குப் பயமாக இருந்தது. விம்மி விம்மி அழுதான் அதோ றெயில்...

யாரோ அவனுடைய கரத்தை வலிமையாகப் பற்றி ஒரு புறம் இழுத்துவிட்டார்கள்.

சுடலைமாடன் தன்னை இழுத்துவிட்டவளைப் பார்த்தான்.

—சோணிப்புட்டு.

'தங்கச்சி... என்னைச் சாகவிடு...'

'நீங்க சாகக் கூடாது... நான் இருக்கிறன்... என்றுன் சோனிப்புட்டு.

## அத்தியாயம் 11

# தரகர் ஆடுகால்

இரண்டாம் சாமம் முடிகிற வேளையில் ஊத்தைக்குடியன் வெளியே போகப் புறப்பட்டபோது, ஒருவர் அவனைத் தேடிவந்தார். அவருடைய தோற்றம் அவர் மீது ஊத்தைக் குடியனுக்கு மரியாதை கொள்ள வைத்தது.

'நீங்க யார்...?'

வந்தவர் அடக்கமாகச் சிரித்தார்:

'நான்தான் தரகர் ஆடுகால்...'

'ஓ... உங்களைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறன்... கரை சேராத குமருகளை யெல்லாம் கரை சேர்க்கிறவர் நீங்கள் தானே...?'

தரகர் ஆடுகாலை இந்த இடத்தில் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்க விரும்புகின்றேன். இந்த ஆள் நம்பத் தகுந்தவர் அல்லர். 'ஒன்றைக் கரை சேர்க்கைக்கை ஒன்று பாதிக்கப்படத் தான் செய்யும். ஆயிரம் பொய்யைச் சொல்லி ஒரு கலியாணத்தைச் செய்யலாம் என்று மனித சாஸ்திரம் கூறுகிறது...' என்று வாதிப்பார் இவர்.

இவருக்கு ஆடுகால் என்று பெயர் வந்ததே தனிக் கதை. மனித சமூகத்திலே கந்தையாண்ணை என்று ஒரு தரகர் இருக்கிருர்; வலு அசகாய சூரர். ஊமை மாப்பிள்ளையைச் சிறந்த பேச்சாளன் என்றும், காமாலையை மன்மதன் என்றும் கூறிக் கலியாணங்களை ஒப்பேற்றிவிடுவார். இந்த மனிசத் தரகரை

இரண்டு மூன்று வருசமாக ஆடுகால் பிடித்திருந்தார். அதி காலையில் தோட்டத்திற்குத் தண்ணீர் இறைக்கக் கந்தை யாண்ணை போவார். கூடவே, நம்முடைய பேய்த் தரகரும் போவார். கந்தையாண்ணை துலாவில் தண்ணீர் இறைக்க, பேய்த் தரகர் ஆடுகாலில் அமர்ந்திருப்பார். ஒரு நாள் ஆடு கால் முறிந்து பேய்த் தரகர் மீது எக்கச்சக்கமாக விழுந்து போனது. பனந்துலா, பேய்த் தரகரின் மேல் விழுந்து, முதுகு எலும்பை முறித்துவிட்டது. உடலும் கூனல் பிறையாக வளைந்து விட்டது. அதோடு கந்தையாண்ணையை விட்டு ஓடி வந்தவர்தான்; ஓடிவந்து என்ன? தரகர் ஆடுகால் என்ற பெயர் நிலைத்துவிட்டது.

'இந்தத் தரகு வேலையிலை என்னை மிஞ்சியவன் இந்தச் சீமையிலை இல்லை. இரண்டு வருசம் கந்தையாண்ணையிடம் 'றெயினிங்' இருந்து இத்தொழிலில் 'டிப்பிளோமா' வாங்கி யவன் நான்...' என்று அடிக்கடி கூறிக்கொள்வார்.

அத்தகைய தரகர் ஆடுகாலைத் தனது வீட்டில கண்ட தும், ஊத்தைக்குடியன் சிறிது பதறித்தான் போனான்.

'என்ரை வீட்டிலை கலியாணம் பேசக் கூடியதாக ஒருத்த ரும் இல்லை. கொத்திக்கும் மூற்றாய்ப் போச்சு எறிமாடன் என்று... சின்னப் பொடியனுக்கு வயதாகவில்லை. அப்ப...' என்று எண்ணமிட்டான் ஊத்தைக்குடியன்.


தரகர் ஆடுகால் பெரிய ஒரு கல்லில் உட்கார்ந்து கொண் டார்.

'உம்முடை மோளுக்குத் தான் ஒரு கலியாணம் பேசி வந்தன்...'

கலியாணப் பேச்சு காதில் விழுந்ததும் பெரிய கொத்தி யும் வெளியில் வந்தாள்.

'அவளுக்கு எல்லாம் முற்றாய்ப் போச்சே...!'

'உதைக் கேளும்... பொடியன் தங்கக் கம்பி கண்டி யளோ? குடி, வெறி, கூத்து என்று எதுவுமே கிடையாது. ஆளும் சரியான ஆம்பிளை தான், விகாரம் என்றால் அப்படி



'தரகர் ஆடுகால்'
'சீதனம் இல்லாமல் அமத்தப் பாக்கிறியள்...'

ஒரு விகாரம்... சொத்துப் பத்து ஏராளமிருக்கு! உம்முடை மோளுக்கு ஏற்ற சோடி தான்...'

'இல்லைப் பாருங்கோ... தம்மடை கொத்திக்கு ஒருத்த ரைப் பேசி முற்றாக்கிட்டம்...'

தரகர் ஆடுகால் பேசினார்.

'நான் பேசி வந்த இடம் பெரிய இடம். இலேசிலை கிடைக்கக் கூடியதல்ல... பொடியனுக்கு எட்டிலை சனியும் பன்னிரண்டிலை செவ்வாயும் நிக்குது. அதிர்ஸ்டக்கார சாதகம்...! பொடிச்சியின்ரை சாதகத்தையும் பார்ப்பம். உன்ரை மோளுக்குப் பத்திலை செவ்வாயும் மூன்றிலை சுடலைப் பைரவரும் இருப்பதாகக் கேள்வி...! அப்ப நல்ல தாலிப் பொருத்தம் இருக்கு!...'

'நீங்க பேசுற மாப்பிள்ளை எந்தப்பகுதி...? ஆற்றை மகன்?' என்று பெரிய கொத்தி கேட்டாள். அவளுக்கு எறிமாடனைப் பிடிக்கவேயில்லை. வேறிடத்தில் பார்த்தால் நல்லதாகப்பட்டது.



'முடக்கர் பகுதி... பெரிய பல்லுப் பெத்தாச்சி...'

'மூடக்கர் பகுதி... பெரிய பல்லுப் பெத்தாச்சியின்ரை மோன்'

'என்ன...!' என்று குரலிட்டான், ஊத்தைக்குடியன்: 'பெரிய பல்லுப் பெத்தாச்சியின்ரை மோன்தானே எறிமாடன்? அவனுக்கும் கொத்திக்குந்தானே கலியாணம் ஏற்கனவே நிச்சயமாகி இருக்கு...'

தரகர் ஆடுகால் அட்டகாசமாகச் சிரித்தார்:

'இதோ பார்... ஊத்தைக்குடியா! எனக்கு ஊது எல்லாம் தெரியும். ஆனா. இந்

தக் காதல் கத்தரிக்காய் என்று ஒன்றுமில்லாமல் அமத்தப் பார்க்கிறது பெரிய பல்லுப் பெத்தாச்சிக்குப் பிடிக்கவில்லை. எறிமாடன் தாய் சீறின கோட்டை தாண்டமாட்டான். முறையாச் சாதகம் பார்த்து முறையாச் சீதனம் பேசித்தான் இந்தக் கலியாணம் நடக்கிற தெண்டால் நடக்க வேண்டும் என்று பெத்தாச்சி கூறியனுப்பி இருக்கிறு. எறிமாடனுக்கு அதுதான் விருப்பம்...'

'வலிய எனக்குப் பின்னுலே கொத்தியைச் செய்து தரும்படி கேட்டுத் திரிந்த எறிமாடன், இப்ப சீதனம் பேசுகிருரோ? உது சரிவராது... உவர் இல்லாட்டில் அவளுக்கு வேறு மாப்பிள்ளை கிடையாதோ?'

தரகர் ஆடுகால் நமட்டுச் சிரிப்புச் சிரித்தார்.

'உம்முடை மோளுக்கு இனிமேல் யார் தாலி கட்டுவான்...?'

'ஏன்? அவளுக்கு என்ன?...' என்று கோபத்தோடு பெரிய கொத்தி கேட்டாள்.

'ஊர் பெயர் தெரியாத எவனோடையோ ஓடிப்போன ஒருத்திக்கு இனி ஒரு மாப்பிள்ளை கிடைப்பது இலேசான காரியமே?' என்று தரகர் சிரித்தார்.

ஊத்தைக்குடியன் இடிந்து போனன். தரகர் தொடர்ந்தார்:

'ஆதலால், எறிமாடனுக்குச் செய்து வைப்பது தான் நல்லது. உங்கடை காணி பூமி முழுவதையும் கொத்திக்குச் சீதனமாகக் கொடுப்பது; பெரிய பல்லுப் பெத்தாச்சிக்கு நன்கொடையும் கொடுக்க வேணும்...'

'நன்கொடையோ...? உதென்ன புது மாதிரி...? மனிசரைப்போல் நன்கொடை கேட்கிறியள்? தாய்க்கு நன்கொடை, தங்கச்சிக்கு நன்கொடை... என்றதெல்லாம் மனி

சருக்கை தான்... எங்களுக்கை வேண்டாம்... ஏன் நன் கொடை கொடுக்க வேணும்...?'

'உலகம் தெரியாமல் பேசாதையும்... மனிசர் இப்ப சாப்பிடாமல் சோக்குப் பண்ணுமல் சீதனம் கொடுக்கத் தான் உழைக்கிறவை! லோங்ஸ் போட்ட மாப்பிள்ளை தான் வேணும் என்று மனிசருக்கை எத்தனை குமருகள் கிழவிகளாகி போட்டுது, தெரியுமே? பெட்டையளும் இப்ப அதுதான்... அவையின்ரை உடுப்புகள்... நடப்புகள்.. பெட்டையளை உப்ப றோட்டாலை பயமில்லாமல் போய்வர விடலாம்! பொடியன்களைத் தான் விட முடியாமல் இருக்கு... எங்கே பெட்டையள் பிடிச்சிடுவாளவையோ என்று பயம். அப்படி உலகம்இருக்கு. நீர் என்னெண்டால் நன்கொடை கொடுக்கத் தயங்குகிறீர். என்ன சொல்கிறீர்?... முடிவாகச் சொல்லும்... நான் சொன்னதற்கெல்லாம் சம்மதம் என்றால் கூறும்... நாளை நல்ல நாள். சாதகப் பொருத்தம் பார்த்து, பெண் பார்க்கப் பெரிய பல்லுப் பெத்தாச்சியைக் கூட்டி வாறன்... இதிலை யோசிக்க ஏதுவுமேயில்லை! உப்படி ஒரு சம்பந்தம் இனி மேல் வாய்க்காது.. உதை விட்டால் இனி உம்முடைய மோளுக்குக் கலியாணம் செய்கிறதும் இலேசான காரியமல்ல...'



,பெட்டையள் பிடிச்சிடுவாளவைஇப்ப...'

— வெற்றி தரகர் ஆடுகாலுக்கே.

— விஷயம் அறிந்த கொத்திப் பெண் குமுறிக் குமுறி அழுதாள். அவளுடைய இதயப் பரப்பில் சுடலைமாடனின் உருவம் தோன்றித் தோன்றி மறைந்தது.

தரகர் நீண்ட நேரம் ஊத்தைக்குடியன் வீட்டில் இருந்தார். தனது குரு நாதர் தரகர் கந்தையாவின் வீரப் பிரதாபங்களைக் கதை கதையாக அளந்தார். ஊத்தைக்குடியனும் பொறுமையோடு கேட்டான். கேட்காவிடில் எங்கே கிழவன் பெரியபல்லுப் பெத்தாச்சியிடம் ஏதாவது வத்தி வைத்துக் கலியாணத்தைக் கெடுத்துவிட்டால்...?

'என்ர குரு தரகர் கந்தையாவைவிட மேலான ஒரு தரகர் எந்தக் குலத்திலும் இல்லை... ஓ... அடிச்சுச் சொல்லுவன் ஒரு முறை பாரும்... ஒவிசியர் ஒருத்தற்றை மோள் ஒருத்தி செய்தால் லண்டன் மாப்பிள்ளையாச் செய்வன் என்று ஒற்றைக் காலில நின்ருள்... லண்டன் மாப்பிள்ளை எடுக்க ஒவிசியரிட்டை அவ்வளவு வழியில்லை... கந்தையரிட்டை சொன்னர்... செய்து வைத்தார் ஒரு லண்டன் மாப்பிள்ளையை... பிறகு தான் தெரிஞ்சுது... லண்டனில பொடியன் கொட்டலில கோப்பை கழுவுகிறவன் என்று... செய்தால இஞ்சினியரைத் தான் செய்வன் என்று ஒருத்தி நின்ருள்... கந்தையர் செய்து வைத்தார்... பிறகு தான் தெரிஞ்சுது... பொடியன் கார் கரேச்சில மெக்கானிக்கு என்று... ஆள் விண்ணன்...'

'கேள்விப்பட்டிருக்கிறன்...' என்ருன் ஊத்தைக்குடியன்.

'அப்ப நான் வரப்போறன்... ஏதாவது சில்லறை இருந்தால் தா... போறவழியில ஏதாவது போட்டுக்கொண்டு போக வேண்டும்...'

'சுடலைபயிரவரானை...ஒரு சதம் இல்லை...'

'அப்ப எப்படி நன்கொடை சீதனம் கொடுக்கப் போருய்...!'

ஊத்தைக்குடியன் உள்ளே போனன். வரும்போது ஆடுகால் கேட்ட பணம் கையில் இருந்தது.

'நீ ஒண்டுக்கும் கவலைப் படாதை...நான் எல்லாத்தையும் வெண்டு தாறன்...'

## அத்தியாயம் 12

# பரிசுகெட்ட கதைகள்

சுடலைமாடன் நடைப் பிணமானுன். அவனுக்கு வாழ்க்கையே வெறுத்துப் போய்விட்டது. கவலைகள் அவனை அரிக்கத் தொடங்கின. மூன்று நான்கு நாட்களாக அவனுக்கு ஊன், உறக்கம் எதுவுமேயில்லை.

'கொத்தி... என்னை ஏமாற்றி விட்டியே!'

வானத்தையும் நட்சத்திரங்களையும் பார்த்தபடி சுடலைமாடன் கண்ணீர் விட்டான்.

அடிக்கடி அவனைக்காண எருமைப்பல்லன் வந்தான். அன்றும் வந்தான்.

'நண்பா! எனது கவலையை மறக்க ஒரு வழி சொல்லு...'

'ஒரு வழி இருக்குது... கொத்தியைத் தூக்கிக் கொண்டு ஓடி விடுவமா?'...

'அவளையா...? வேண்டாம். ரவுனுக்குப் போவம்... வருகிறுயா?...'

'ஏன்?...'

'அன்று குடித்தோமே?... அதைக் குடிச்சால் கவலை தீரும் போலிருக்கிறது...' என்று எழுந்தான் சுடலைமாடன்.

இருவரும் புறப்பட்டார்கள்.

ஒட்டு மடம் கடந்தபோது, ஒரு வீட்டில் அழு குரல் கேட்டது. பலர் ஒன்று சேர்ந்து ஓலமிட்டுக் கதறினுர்கள்,

'இதென்ன...?' என்று சுடலைமாடன் கேட்டான்.

'ஆரோ செத்துப் போச்சினம் போல... வா பார்ப்பம்....

இருவரும் அந்த வீட்டிற்குப் போனுர்கள்.

'உதென்ன, பிணத்தைக் காணவில்லை...?'

'உவையளை எனக்குத் தெரியும். இந்த வீட்டைக் கட்டி இவையளை ஆளாக்கிவிட்ட மனுசன்தான் செத்துப் போச்சுது... பிணம் இன்னமும் வயோதிப மடத்திலை இருந்து வரவில்லை...'

'வயோதிப மடமோ...?'

'ஓமோம்... உந்த எளிய சாதியள், வயோதிபமடம் என்று ஒன்றைக் கட்டி, வயதானவர்கள் தங்களுக்குப் பாரம் என்று கொண்டு போய் அதிலை விட்டு விடுகிறார்கள். அதுகள் அங்கையே செத்துப் போங்கள்...'

'பிறகேன் அழுவான்...'

'ஊருக்குக் காட்டத்தான்... இருந்துபாரன், இன்றைக்கு வலு சோக்காகச் செலவழிப்பினம்... தண்டிகைப் பாடையென்ன? சாராயப் போத்தில் என்ன?... பாசக்குரல் என்ன?'

'இங்கை நிற்க வேண்டாம், நீ வா... இதைப் பார்த்து எங்கடை பேய்ச்சாதியிலும் வயோதிப மடம் கட்டிப் போடுவினம்.'

இருவரும் அரசடி வீதியில் விரைந்தார்கள். அந்த வீதியில் ஒரே சனக்கூட்டம்.

'நல்லூருக்குத் திருவிழா பார்க்கப்போறவையைப் பார்.. எல்லாம் குமரிகளும் பொடியன்யளும்! கோயிலுக்குப் போறவை போலவே இருக்கு? இடிபட்டுக் கொண்டு போகினம்... பரிசு கெட்டதுகள்...... அவையள் கதைக்கிற கதையைக் கேள்...' என்றான் எருமைப்பல்லன். சற்று நேரம் சுடலைமாடனைப் பழைய நினைவுகளிலிருந்து மறக்கச் செய்ய அவன் விரும்பினான்.

'இது நல்ல சாறி...... மணிப்புரியே எங்கை வாங்கினனீர்...?'

'இதைப் போல மூன்று வாங்கி இருக்கிறன்...'

'நான் என்ரை நெளிக்காப்பை வளையலாக்கிப் போட்டன்...'

'இன்றைக்கு ஒரு சுழகும் பாயும் வாங்கவேணும்...'

'கனகற்றை கடைசி மோள் இன்றைக்குப் பொலிடோல் குடிச்சுச் செத்துப் போனாளாம்.'

சுடலைமாடன் குமிறினன்: என்ன மனிசர்... கோயிலுக்குப் போகேக்கையாவது கடவுளைப் பற்றி நினைக்கக் கூடாதோ...?'

வழியிலுள்ள தண்ணீர்ப்பந்தல் ஒன்றில் ஒலி பெருக்கி அலறியது.

'லவ் பண்ணுங்கோ சார்... லவ் பண்ணுங்கோ சார்...'

'வேறை எங்காவது போவம் வா' என்று சுடலைமாடன் இழுத்தான்.

ரவுனை நோக்கிப் போகும் போது எருமைப் பல்லன் கூறினன்:

'உனக்கு ஒரு புதினந் தெரியுமே? பங்க வடலிக்கை கண்டமே ஒரு சோடி... அதிலை அந்தப் பொம்பிளைக்குக் கலியாணம் முடிஞ்சிது...'

'என்ன?... அப்ப அவன்...'


'என்னவானனே, ஆருக்குத் தெரியும்...'

'எங்கும் துரோகம்தான்...'

சாராயத் தவறணைக்கு முன்னல் எருமைப்பல்லனும் சுடலைமாடனும் அவனைக் கண்டார்கள். கையில் சாராயப் போத்திலோடு முழு வெறியில் அவன் நின்றான்.

'இந்தப் பொடியன்ரை நிலையைப் பார்... இப்படியாகி விட்டான்' என்று சுடலைமாடன் இரங்கினன். அவன் அருகே சென்று 'தம்பி...' என்றான்.

'அவனிட்டை ஏன் போனய்?' என்று எருமைப்பல்லன் கேட்டான்.



'பெட்டையளை நீ நம்பாதே...'

'பாவம்... அவனும் என்னைப் போலத்தான்...... சிறிது புத்திமதி கூறப்போறன்... தம்பி உன்ரை பேரென்ன?...,

வாரோ தன் முன் நின்று பேசுவது போல அவனுக்கு ஓர் உணர்வு.

'உதார்...தெரிந்த குரலாயிருக்கு. ஓ... சுப்பிரமணியமே! நான்தான் செல்வநாயகம்... வா மச்சான், முற்றவெளிக்குப் போவம்......' என்று சுடலைமாடனின் கையைப்பற்றினான்; நல்ல வெறி.

'மச்சான் நீ ஆரையும் காதலிக்கக் கூடாது... எல்லாம் மாயம்... ஏமாந்து போவாய்...'

'ஏமாந்து போனன்...' என்றான், சுடலைமாடன்; அவனுடைய கையிலிருந்த போத்தலை வாங்கி ஒரு வாய் விட்டுக் கொண்டான்.

மூவரும் முற்றவெளிக் காற்றில் அமர்ந்தனர். அவன் பிதற்றினான்:

'அவளைக் கலியாணம் செய்யப் போறன் எண்டு அப்புவையும் ஆச்சியையும் கேட்டன்! அடிச்சுத் துரத்திப்போட்டினம். ஆச்சியின்ரை கொட்டடப் பெட்டிக்கை கிடந்த காசையும் எடுத்துக்கொண்டு வந்திட்டன், இனி எனக்கு என்ன வாழ்வு...'

'தம்பி... என்ன வேலை?' என்று எருமைப்பல்லன் கேட்டான்.

'சும்மாதான்... மூன்று முறை எஸ். எஸ். சி. எடுத்தன், பெயில்...'

'தம்பிக்கு எத்தனை வயசு?'

'பதினெட்டு... காதலுக்கும் வயசே...?'

'தம்பிக்கு சகோதரங்கள் இருக்கே...?'

'ஏன் இல்லை...? இரண்டு அக்காமார்... மூன்று தங்கச்சி இருக்கினம்,'

'ஒருத்தரும் கலியாணம் செய்யவில்லையே?...'

'சீச்சீ... இல்லை....'


'அப்ப தம்பிக்குத்தான் கலியாணம் தேவைப்படுகுது... வேலை இல்லை... நீர் சீவிப்பதே கஷ்டம்... அதுக்குள்ளே ஒரு பொம்பிளையும் தேவை...' என்று ஏளனமாகச் சிரித்தான் எருமைப்பல்லன்.

'நீ மச்சான் பகிடி பண்ணுகிறாய்... என்ன? நான் சாக முடிவு செய்திட்டன்...' என்று காற்சட்டைப் பையிலிருந்து ஒரு சிறு போத்தலை எடுத்தான், அவன்.

'தம்பி, இது என்னடா?...' என்று சுடலைமாடன் பதறினான்.

'இதுதான் பொலிடோல்... காதலர்களைச் சாவில் சேர்க்கும் சஞ்சீவி... சுந்தரி, சுந்தரி... நீ இல்லாமல் ஒரு வாழ்வா?.. எங்கிருந்தாலும் நீ வாழ்க...' கடைசி வாக்கியத்தை ராகத்தோடு இசைத்தான்; போத்தலை வாய்க்குள் ஊற்ற முயன்றான்.

சுடலைமாடன் பதறிப்போய் தடுக்கப்போனான். எருமைப் பல்லன் தடுத்தான்.



'பக்குவமாக வாயிலை ஊத்து...'

'உவரை அப்படியே விடு... பதினேழு வயசுக் குள்ளை வீட்டில குமருகள் இருக்கத் தக்கதாக, வேலை வெட்டியில்லாத இவருக்குக் கலியாணம் தேவைப்படுகுது... இவர் உதவார்! தம்பி... தம்பீ... பக்குவமாய் வாய்க்குள்ளை ஊத்து... வெளியில ஊத்திவிடப்போகிறாய்...' என்றான் எருமைப்பல்லன்.

'இந்திய சினிமா நம்மடை நாட்டு மனிசருக்குத் தந்த பரிசு இதுதான்...'

'பரிசு கேடு' என்றான் சுடலைமாடன்.

# அத்தியாயம் 13

## பெரிய பல்லுப் பெத்தாச்சி

பெரிய பல்லுப் பெத்தாச்சி தனது மகனுக்குப் பெண் பார்க்க வந்தாள். தலை நரைத்து குழிவிழுந்த கண்கள். பற்களும் கழன்று போய்விட்டன; பொய்ப்பல் கட்டியிருந்தாள். கண்களுக்குப் பெரிய சோடாப் புட்டிக் கண்ணாடி வேறு.

பெரிய பல்லுப் பெத்தாச்சி குமரியாக இருக்கும் போது. ஆடாத ஆட்டம் எதுவுமில்லை. ஆல மரத்தில் உட்கார்ந்திருந்து எரிகிற பிணத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். மண்டை ஓடு எகிறிப் பாய்ந்ததால், ஊனக் குழம்பு பெத்தாச்சியின் கண் ஒன்றைப் பதம் பார்த்து விட்டது. மூன்று மாதம் பேய் ஆஸ்பத்திரியில் கிடந்தாள்.

எறிமாடன் தவம் இருந்து அவளுக்குப் பிறந்தவன். அதனால், எறிமாடனுக்கு இல்லாத செல்லம் எல்லாம் கொடுத்துக் கெடுத்துவைத்துவிட்டாள். எறிமாடனின் தகப்பன் இவன்பிறந்த மறு ஆண்டே பரலோகம் அடைந்துவிட்டான்.

பெரிய பல்லுப் பெத்தாச்சிதான், புருஷனின் கொடுமை தாளாமல் விஷம் வைத்துக்கொன்றவள் என்று ஒரு வதந்தியும் இருக்கிறது.

பெரிய பல்லுப் பெத்தாச்சி எதற்கும் துணிந்த ஒரு ஆண் மாரிதான்.

கொத்தியைப் பெண் பார்க்க, அவளோடு தரகர் ஆடுகாலும் வந்திருந்தார். கொத்தியை அழகுபடுத்தி (அதாவது விகாரப்படுத்தி) பெத்தாச்சி முன் கூட்டி வந்தார்கள்.

'மாமியைக் கும்பீடு, பிள்ளை' என்று மகளிடம் கூறினாள், பெரிய கொத்தி. கொத்தி வெகு நாக்ரீகமாகக் கைகளைக் கூப்பி வணங்கினாள். காலில் வீழுந்து வணங்கவில்லை என்று பெத்தாச்சிக்குச் சற்று வருத்தம்தான்.

'பிள்ளை எவ்வளவு படிச்சிருக்குது...?'

'ஏதோ கொஞ்சம் படிச்சிருக்குது... குமரானதும் நிறுத்திப் போட்டம்...' என்றாள், பெரிய கொத்தி.

'குமரானதும் நிறுத்தினியளோ? அல்லது இந்தக் கால மனிசக் குமரியளைப் போல ஆருக்கும் காயிதம் கொடுத்த தாலை நிற்பாட்டினியளோ?' என்று பெத்தாச்சி கேட்டது, பெரிய கொத்தியைத் திடுக்கிட வைத்தது.

'சீச்சி... கட்டுக் காவலாகத்தான் என்ரை குமரை வளர்த்திருக்கிறன்...' என்றாள்.

'ஏனென்றால், என்ரை மோன் ஒரு பாவி... நான் கீறின கோட்டைத் தாண்டாதவன்...! பிள்ளைக்குப் பாடத் தெரியுமே?'

'ஓ... நல்லாப் பாடுவா!...'


'என்ன பாட்டுகள் பாடுவா? உந்த மனிசரைப் போல கேடு கெட்ட சினிமாப் பாட்டுகள் பாடுவவே? இலந்தைப் பலம்... இலந்தைப் பலம்... என்று ஒரு பாட்டு... எளனீ... எளனீ... என்று ஒரு பாட்டு... அந்த நாள் ஞாபகம் வந்ததே... என்று ஒரு கழுத்தறுப்புப் பாட்டு... உவைதான் இரண்டு வயசுப் பாலன் தொடக்கம் பல்லு விழுந்த கிழவன் வரை இன்று பாடுகிற பாட்டுகள்...! கொத்தி எத்தகைய பாட்டுகள் பாடுவா? நம் கபால பைரவ நாயனார் பாடியருளிய பாடல்கள் தெரியுமே?...'

'தெரியும்,' என்றாள் பெரிய கொத்தி.

'நல்லாச் சமைப்பாவே?...'

'ஓ...'

'கொஞ்சம் அப்படி நட பிள்ளை...' என்று கட்டளையிட்டாள், பெத்தாச்சி.



பெரிய கொத்தி—சின்னக் கொத்தி —பெரியபல்லுப் பெத்தாச்சி
'பாடத் தெரியுமே'

'அவ நல்லா நடனமும் ஆடுவா.' என்ருள், பெரிய கொத்தி.

'அப்பிடியே?... இப்ப இந்த மனிசரிலை நடனம் கற்கிறது ஒரு 'பாஷன்'! பணக்கார வீட்டுப் பிள்ளையள் எல்லாம் நடனம் கற்குதுகள்! அரங்கேற்றத்தோடை சரி!... ஐந்தாறு வகுப்புகளை அரை குறையாகக் கற்றுவிட்டு, மேடையேறிக் கையைக் காலை ஆட்டிவிட்டால் சரி... நாட்டியம் கற்பிக்கிறவையும் அப்பிடித்தான்... முறையான சாஸ்திர ரீதியான பயிற்சியில்லை! ஓராண்டோ ஈராண்டோ ஒரு குருவிடம் படித்துவிட்டு. தாமே பிறகு குருவாக மாறிவிடுகினம்... இப்ப இது ஒரு பிழைப்பு! சிலருக்கு வேறு வகை வருமானமும் நாட்டிய சாஸ்திரம் தெய்வீகமானது! அது சரி சுடலையாண்டியின் கூத்தை கொத்தி ஆடுவாவே?...'

பெரிய பல்லுப் பெத்தாச்சியின்ரை தேவையில்லாத அலட்டல்கள் எல்லோருக்கும் அதிருப்தியைக் கொடுத்தன. இதனை உணர்ந்த தரகர் ஆடுகால் குறுக்கிட்டார்:

'அப்ப உங்களுக்குப் பொம்பிளையைப் பிடிச்சுக் கொண்டுதே?...'



கண்ணாடியின் மேற் புறத்தால் ஆடுகால் தரகரை ஏறிட்டுப் பார்த்தாள், பெரிய பல்லுப் பெத்தாச்சி.

தரகரை ஏறிட்டுப் பார்த்தாள், பெத்தாச்சி. தரகர் ஒன்றும் பேசாது அடங்கிவிட்டார்.

'இந்தக் காலத்துப் பெட்டையள் போலத்தான் இருக்குது...' என்றாள் பெரிய பல்லுப் பெத்தாச்சி.

'பின்னை எப்படி இருக்க வேண்டும் என்று நினைக்கிறியள்...?' என்று கேட்டார் ஆடுகால்.

'அந்தக்காலத்தில நாங்கள் பக்கத்து வீடு தெரியாமல் வளர்ந்தம்... இப்ப எல்லாக் குமரியளும் றோட்டில திரியிறாளவை...ஆறு முழம் சீலையை உடம்பு தெரியாமல் நாங்கள் உடுத்தம்... இப்ப பொக்குளுக்குக் கீழே இடுப்பில சீலை... நெஞ்சுக்குமேல றவுக்...கையில்லை... என்ன கோதாரி உடுப்புகள்... பெரியாக்கள் வந்தால் அந்தக் காலத்தில நாங்கள் கொடுக்கிற மரியாதை... பெரியவர்கள் பேசேக்கை முன்னுக்கு நிற்க மாட்டம்... இப்ப சரிக்குச் சரி வாயாடுதுகள்... குமரியள் இப்ப அடக்கமில்லாமல் திரியிறதால பொடியன்களைக் குற்றம் சொல்ல முடியாமல் இருக்குது... உவளவை மறைக்கிறதை மறைத்து உடுத்தால் ஏன் பிரிச்சினை... என்ர அப்பு எனக்கு மாப்பிள்ளை பார்த்தார்... தாலி கட்ட மணவறைக்கு வரும் வரை எனக்கு அவரின்ர முகம் தெரியாது...' பெரிய பல்லுப் பெத்தாச்சி அந்தக் காலப் பெருமைகளை அளந்து கொண்டிருந்தாள்.

தரகர் ஆடுகாலுக்கு அலுப்பாக இருந்தது. அவர் எண்ணினார்:

'இவ இப்ப ஏதோ பெரிதாக் கதைக்கிறாய்... இவ அந்தக் காலத்தில ஆடாத ஆட்டமே...? குமரில ஆடி பிள்ளை வாங்கிட்டு, பனை வடலிக்கை கூட்டி போட்டவதானே?... இவவுக்கு மாப்பிள்ளை தேடி அந்த மனிசன் அலைஞ்ச அலைச்சல் எனக்குத் தெரியும்... கட்டி அமத்தினது தானே?...'

'என்ன தரகர்... கடுமையா யோசிக்கிறீர்?...' என்று கேட்டாள் பெத்தாச்சி.

'ஒன்றுமில்லை... நீங்கள் அந்தக் காலத்தில எவ்வளவு கட்டுப் பெட்டியா இருந்தியள் என்று எண்ணிப் பார்த்தன்...' என்றார் தரகர். தரகரின் நக்கல் பெத்தாச்சிக்கு விளங்கவில்லை.

வெட்கத்தோடு சிரித்துக் கொண்டாள்.

கொத்தி இருப்புக் கொள்ளாது தவித்தாள். அவள் கண்கள் நீரைச் சொரிந்துவிடுவனபோலக் கலங்கின.

'அப்ப, கலியாணத்தை எப்ப வைப்பம்?...

'கலியாணத்தை உடனை வைக்கத்தான் வேணும்... முதலில் எழுத்து... சீதனப் பதிவு... பிறகு தான் கலியாணம்...'

'இரண்டையும் ஒன்று வைத்தால் செலவு குறைவு...' என்று இழுத்தான், ஊத்தைக்குடியன்.

'என்ன பெரிய செலவு...? நம்மடை சோதிடர் மலங்கை மாட முனியைக் கண்டு கேட்டனான்... வருகிற அமாவாசை நள்ளிரவு மாங்கலிய தாரணத்திற்கு ஏற்ற நாள்... அதற்கு ஒரு கிழமைக்கு முதல். பொன்னுருக்கையும் வைத்து. கன்னிக் காலையும் நடலாம்...' நாளைக்குக் கலியாண எழுத்தை வைப்பம்...!' என்றாள், பெரிய பல்லுப் பெத்தாச்சி.

எல்லாரும் ஒத்துக் கொண்டனர். கொத்தியின் இதயத்தில் இடி விழுந்தது. கண்கள் நீரை உமிழ்ந்தன.

'அப்ப நீங்கள் ஆயத்தங்களைச் செய்யுங்கோ...' என்று விடை பெற்றாள், பெத்தாச்சி.


## அத்தியாயம் 14

# கலியாண அழைப்பிதழ்

சுடலைமாடன், கலியாண அழைப்பிதழை மீண்டும் மீண்டும் பார்த்தான். ஆக்ரோசமும் கவலையும் அவனைச் சூழ்ந்து கவ்விக் கொண்டன.

'கொத்தி... எப்படியடி என்னை ஏமாற்ற உனக்கு மனம் வந்தது...? யாரோ ஊர் பெயர் தெரியாதவனுடன் ஓடினாய்... பிறகு எறிமாடனை மணம் புரிய எப்படியடி ஒப்புக்கொண்டாய்?' என அவனது இதயம் ஓலமிட்டலறியது.

'இக்கலியாணம் நடைபெற நான் ஒரு போதும் விட மாட்டேன்! எறிமாடனுக்குக் கொத்தி கிடைப்பதா?' என்று சுடலைமாடன் விரிட்டான்.



'கொத்தி! எப்படியடி உனக்கு ஏமாற்ற மனம் வந்தது!'

'என்ன செய்கிறது? இன்னும் இரண்டு நாட்கள் தான் இருக்குது, கலியாணத்துக்கு' என்றான் எருமைப்பல்லன்.

சுடலைமாடனைப் பார்க்கப் பார்க்கச் சோனிப்புட்டிக்கும் கவலையாகவே இருந்தது. 'இந்த ஆள் இப்படி அவளுக்காக உருகுதே? பாவம்...' என்ற அவள் தன் ஆசையை அடக்கிக் கொண்டாள்.

"நீ தான் ஒரு வழி சொல்லவேண்டும்..." என்று எருமைப்பல்லனிடம் கேட்டான் அவன்.

"எறிமாடனைக் கொலை செய்துவிட்டால்...?"

"கொலை செய்யலாம்... ஆனா பிறகு சுடலை பைரவர் தூக்கிலையெல்லே மாட்டுவார்... அது பயனில்லை...'

'பெரிய பல்லுப் பெத்தாச்சிக்குக் கொத்தியைப் பற்றி மொட்டைக் கடுதாசி எழுதினால் என்ன?'

'அது கூடாத வேலை... பெத்தாச்சிக்கு இதொன்றும் தெரியாது என்றே நினைக்கிறாய்... எல்லாம் தெரியும்... சீதனத்துக்காகவும், தன்ரை காவாலி மகனுக்கு ஆர் பெண் கொடுப்பினம் என்றதுக்காகவும் தான் இப்ப கலியாணம்...'

'அப்ப அவளை மறந்துவிடு'... என்றான் எருமைப்பல்லன்.

'அவளை மறப்பதா? அதுதான் முடியாது... நாளை மறு நாள் அவளது கழுத்தில் தாலி ஏறும் அதே வேளையில், எனது கழுத்தில் மரணக்கயிறு இறுகும், எருமைப்பல்லா...; என்றான் சுடலைமாடன்.

வெளியே ஏதோ அரவம் கேட்டது. எல்லோரும் வெளியே எழுந்து வந்து பார்த்தார்கள், நின்றவன்—

முனிசழியா!

அவனை அருவருப்போடு சுடலைமாடன் பார்த்தான்' 'என்றை கொத்தியை ஏமாற்றி அழைத்து வந்தவன்!'

'ஏன் இங்கு வந்தான்?...' என்று எருமைப்பல்லன் கேட்டான்.



'நீ ஒரு வழி சொல்ல வேண்டும்...'

'கொத்திக்கு உதவுவதற்காக...'

'அதுக்கு அங்கையெல்லோ போகவேணும்... இங்கை ஏன்?

'நீங்க கொஞ்சம் அமைதியாகக் கேட்பதாக இருந்தால் எல்லாம் சொல்லுறன். நீங்க எல்லாரும் நினைப்பது போல் கொத்தியை நான் கடத்தி வரவில்லை... அது என்றை தங்கச்சி போல...'

முனிசுழியா கொத்தியைச் சந்திக்க நேர்ந்த கதையைக் கூறினான்.

'என் மீது சந்தேகப்பட்டு இங்கு வந்தானா?

'ஓம்... செம்மணிச் சுடலையிலே யாரோ ஒரு பெட்டையோடு நீர் சேட்டை விட்டீராம்! அதனால் அவங்கள் உம்முடைய முதுகு மயிரை எரித்துவிட்டதோடு நுனிப்பல்லையும் முறித்து அனுப்பினாங்களாம்...'

'பொய்...!' என்று சுடலைமாடன் வீரிட்டான்.

எருமைப்பல்லன் உண்மையை விளக்கினான்.

'இங்கை சோனிப்புட்டு என்ற பெண்ணோடு உமக்குத் தொடர்பாம்...'

'அதுவும் பொய்! கொத்தி, உனக்கு ஆரோ என்னைப் பற்றி தவறுதலாகக் கூறி உன் மனதை மாற்றிவிட்டார்கள்! நானும் உன்னைப் பிழையாகப் புரிந்துகொண்டேன். இப்போதே உன்னிடம் வந்து உண்மையை விளங்க வைக்கிறன் என்று சுடலைமாடன் துடித்தான்.

'காலம் கழிஞ்சு போச்சுது... கொத்திக்கும் கலியாண எழுத்து முடிஞ்சு போச்சுது...' என்று தடுத்தான் எருமைப் பல்லன்.

'எழுத்து முடிஞ்சால் என்ன? அவள் எனக்கு உரியவள் ...' என்று சுடலைமாடன் குமுறினான்.

'இப்ப அவசரப்பட்டால் காரியம் எல்லாம் கெட்டுப் போகும்... என்னைத் தூக்கி ஆலமரத்தோடு மோதிய எறிமாடனுக்கு நல்ல பாடம் படிப்பிக்கத்தான் நான் திரும்பி வந்திருக்கிறன். சில மனிசரைப் போல ஆத்திரத்தில் அறிவு மயங்கி அடாபிடி வேலை செய்துவிடக்கூடாது! தக்க சான்றுகளோடு எறிமாடனைச் சிக்க வைக்க இன்று என்னால் முடியும்! அதுக்கு நீங்க எல்லாரும் ஒத்துழைக்க வேணும்...' என்று கேட்டான், முனிசுழியா.

சுடலைமாடனும் எருமைப்பல்லனும் ஒத்துக்கொண்டார்கள். நீண்ட நேரம் நண்பர்கள் மூவரும் விவாதித்து, ஒரு முடிவிற்கு வந்தார்கள்.

பெட்டிசம் எழுதுவதில் பெயர்பெற்ற பெட்டிசமா— மணி நச்சுக்குறளனிடம் சென்று மூன்று மொட்டைக் கடு தாசி எழுதுவதென்றும், வீதிகளில் எல்லாரும் பார்க்கத்தக் கதாக எறிமாடன் பற்றி வாசகங்கள் எழுதுவதென்றும் முடிவுசெய்தார்கள்.

இங்கு வாசகர்களுக்கு நமது பெட்டிசமாமணி நச்சுக் குறளன் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லியே ஆகவேண் டும். பாம்பிற்குப் பல்லில் மட்டும் விசம்: பெட்டிசம் எழுது கிறவைக்கு உடம்பெல்லாம் விசம் என்று சொல்ொர்கள். நம் நச்சுக்குறளனுக்கு மூச்செல்லாம் விசம். ஐம்பது சதத் துக்காக எந்தப்பொல்லாத மொட்டைக் கடுதாசியையும் வெவ்வேறு கையெழுத்தில் எழுதிக்கொடுத்துவிடுவார்.

ஒவ்வொரு நாளும் ஏதாவது பெட்டிசம் எழுதியே ஆக வேண்டும். எவராவது பெட்டிசம் எழுத வராவிடில் தனக் குத்தானே பெட்டிசம் எழுதிப் போட்டு விடுவார். அவர் படிக்கிற காலத்தில் காண்கிற பெட்டையளுக்கு எல்லாம் காதல் கடுதாசி எழுதிக் கொடுத்து பெட்டிசம் எழுதுவதில் அற்புதமான ஆற்றல் பெற்றிருந்தார். இவரது இந்த ஆற் றலைக் கேள்விப்பட்ட இளம்பொடியன் இவரை ரகசியமாக அணுகித் தாம் விரும்புகிற பொடிச்சிகளுக்குக் காதல் கடு தாசி எழுதி வாங்கிச் செல்வதுண்டு. சென்றமாதம் தான் பொடியன்களுக்குக் காதல் கடிதம் எழுதிக்கொடுப்பதில்லை என்று சுடலைபைரவருக்கு முன் சபதம் செய்துகொண்டார்.

ஏன் தெரியுமா?

சின்னக்குறளியன் என்று ஒருவன், ஆடுகால் தரகரின் இரண்டாவது பெட்டை மீது ஆசை வைத்தான். தன்னு டைய விருப்பத்தை அவளுக்குத் தெரிவிக்க விரும்பினுன். அவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஐந்து ரூபாக்கா சையும் எடுத்துக்கொண்டு வந்து நச்சுக்குறளனிடம் கடிதம் ஒன்று எழுதித்தரும்படி விண்ணப்பித்துக் கொண்டான்.

பெட்டிச மாமணியும் சுவராஸ்யத்தோடு ஒப்புக்கொண்டார்.

கடிதம் தயாரானது.

"ஆருயிர்க் காதலி, தரகர் ஆடுகாலின் அருந்தவப் புதல்வியே..." என்ற விளிப்புடன் கடிதம் ஆரம்பமானது. பெட்டிச மாமணி உள்ளம் கரையக் கரையக் கடிதம் வரைந்தார். "அமாவாசை நிலவு என்னைக் கொல்கின்றது. உன்னைக் கண்டதும் காதல் கொண்டேன். கடைசிவரை உன்னைக் கைவிடன். என்னை ஏற்பாயா? உன் பள்ள வாய் திறந்து அத்தான் என்று அழைப்பாயா?" என்றெல்லாம் எழுதினர். கடைசியில் கையொப்பம் வைக்கும் போது, "சின்னக்குறளன்" என்று வைப்பதற்குப் பதிலாக "நச்சுக் குறளன்" என்று வைத்துவிட்டார். கடிதம் உரிய பெட்டைக் கைக்குக் கிடைத்ததோடு, பொடிச்சி கையில் இருந்து தரகர் ஆடுகால் கைக்கும் கிடைத்துவிட்டது.

ஆடுகால் திட்டம் போட்டார். "சாகிற வயதில உவர் காதல் கடிதம் எழுதுகிருர்... உவரைக் கவனிக்கத் தான் வேணும்..."

அன்றிரவு பெட்டிச மாமணி வீடு திரும்புகிற வழியின் முன்பின் தெரியாத பேய்கள் வழி மறைத்து, "காதலா செய்கிருய், கிழவா" என்று கேட்டுக் கேட்டு எக்கச்சக்க மாக வாங்கிவிட்டார்கள்.

வாங்கிக் கட்டிக்கொண்டு வீட்டிற்கு வந்தவருக்குஅங்கும் பேரிடி ஒன்று எதிர்கொண்டது. இவரைக் கண்டதும் இவரது மூத்த மகள் முகத்தைச் சுழித்துக் கொண்டு உள்ளே போனுள்.

"மனிசன் எக்கச்சக்கமாக வேண்டிக் கொண்டு நடக்க முடியாமல் வாருன்... உவள் முகத்தைத் திருப்புகிருள்... உதுகளை வளர்க்கத் தானே நான் இவ்வளவு கஷ்டப் படுகிறன்..."

வந்ததும் திண்ணையில் சாய்ந்துவிட்டார். அவருடைய மனைவி கோபத்தோடு வெளியே வந்தாள்.

"நீர் ஒரு தேப்பனு?... இந்த வேலை செய்யலாமா?... என்று கேட்டாள்.

"நான் என்னடி செய்ய...?

"பெத்த மகளுக்கே காதல் கடிதம் எழுதுகிற அளவுக்கு உமக்கு விசர் கிசர் பிடிச்சிட்டுதா?...

"நீ என்னடி சொல்லுறாய்...?"

"என்னவோ... இதைப் பாரும்..." என்று அவரின் மனைவி ஒரு கடிதத்தைக் கொடுத்தாள்.

இரண்டு நாட்களுக்கு முன் ஒரு பொடியனுக்கு அவர் எழுதிக் கொடுத்த காதல் கடிதம்.

"உது எப்படியடி இங்கை வந்தது...?"

"உன்ர மோளுக்கு வந்தது...அவள் கத்தினுள்...பெத்த அப்பனே எனக்குக் காதல் கடிதம் எழுதிட்டார்...சாகிறன் ...என்று..."

"பாவி... என்னைக் கொண்டே கடிதம் எழுதி, என்ர மோளுக்கே அனுப்பிட்டானே, பாவி..."

— இந்த நிகழ்ச்சியோடு பொடியன்களுக்குக் காதல் கடிதம் எழுதிக்கொடுக்கிற வேலையை விட்டுத்தொலைத்தார்.

இத்தகைய பெட்டிச மாமணியைத் தான் நமது நண்பர்கள் சென்று கண்டார்கள்.

"காதல் கடிதம் எழுதுற வேலை என்றால் முடியாது...' என்று இவர்களைக் கண்டதும் கூறிவிட்டார்.

''எதிமாடனின் நடத்தை துண்டாச் சரியில்லை என்று ஊத்தைக்குடியனுக்கு ஒரு மொட்டைக் கடிதம்..."

''சரி''......

"கொத்தியின் நடத்தை சரியில்லையென்று பெரியபல் ஓப் பெத்தாச்சிக்கு ஒரு மொட்டைக் கடிதம்...

''சரி...''

"சரி..."

"எறிமாடன் இந்த நாட்டில பிறக்காதவன்... கள்ளத் தோணி என்று பொலிசுக்கு ஒரு மொட்டைக் கடிதம்..."

"இதுக்கு அவனிட்டை பிறப்புச் சேட்டிப்பிக்கேற்று இருந்திட்டால்..."

"பிறப்புச் சேட்டிப்பிக்கேற்று இல்லை... உவன் எறிமாடன் பனைவடலிக்கை பிறந்தவன் என்று பெரிய பல்லுப் பெத்தாச்சி பிறப்புப் பதியவில்லை வெட்கப்பட்டு" என்று சொல்லுகினம்..."

"சரி..." என்று ஒப்புக்கொண்டார் பெட்டிசமாமணி. 'மூன்று பெட்டிசத்துக்கும் முப்பது ரூபா தரவேண்டும்... இப்ப பேப்பர் விற்கிற விலையில குறைஞ்ச காசுக்குப் பெட்டிசம் எழுத முடியாது...'

"பதினைந்து ரூபா தாறம்..." என்றான் எருமைப்பல்லன் கடைசியில் இருபது ரூபாவுக்கு எழுதிக்கொடுக்க பெட்டிசமாமணி ஒப்புக்கொண்டார்.

பெட்டிசங்கள் உரிய விலாசங்களுக்குப் பறந்தன.

விடைபெறும்போது எருமைப்பல்லன் கேட்டான்: "ஏன் அம்மான்... தரகர் ஆடுகால் ஆக்களை வைச்சு உங்களுக்கு அடிப்பிச்சவர்...?"

பெட்டிசமாமணியின் முகம் கறுத்துவிட்டது.

நண்பர்கள் வீதியெங்கும் எழுதினார்கள்.

எறிமாடன் வீதியைப் பார்த்துத் திகைப்பும் ஆத்திரமும் கொண்டான். வீதியெங்கும்—

"எளிய மாடா... கொத்தி என்ன கேடா?"

"செம்மணியில் ஆடிய வடுவா... கோம்பயன்மணலில் கெடுவாய்..."

"மன்மதக்குஞ்சே... உன் காதல் ரகசியங்கள் விரைவில் அம்பலம்..." இப்படிப் பலப்பல.

## அத்தியாயம் 15

# பெட்டிசம் செய்த வேலை

பெரியபல்லுப்பெத்தாச்சி, பொலீசைக் கண்டதும் "ஓ" வென்று அலறினாள்.

"ஏனணை கத்துருய்?..." என்று ஒரு பொலீஸ்காரன் கேட்டான்.

"என்ர பிள்ளை என்ன குற்றம் செய்தவன்?... வெத்திலைக் காம்பைக் கூடக் கடிக்காத பிள்ளை அது... மிதிச்ச இடத்துப் புல்லுக்கூட சாகாது..."

"எறிமாடன் ஒரு குற்றமும் செய்யவில்லை..."

"அப்ப ஏன் ராசா, அவனைத் தேடிறியள்...?"

"எறிமாடனுக்கு கூப்பன் இருக்கோ? பிறப்புச் சேட்டிப்பிக்கேற் இருக்கோ?..."

"கூப்பன் இருந்தது... மூன்று வரியத்துக்கு முந்தித் தொலைஞ்சு போச்சுது... பிறப்புச் சேட்டிப்பிக்கேற் கச்சேரியில இருக்குது..."

"சரி... அப்படியென்றால் நாளைக்கு மறுநாள் பிறப்புச் சேட்டிபிக்கேற்றையும், கூப்பன் தொலைஞ்சது என்றதுக்குரிய அத்தாட்சியை விதானையிட்டை வாங்கிக் கொண்டும் ஸ்ரேசனுக்கு எறிமாடனை வரச்சொல்லு... என்ன... வராட்டில் விருந்து தான்..."

பெரியபல்லுப் பெத்தாச்சி கலக்கத்தோடு தலையை ஆட்டினாள்.

பொலீஸ் போனதும் தரகர் ஆடுகாலிடம் தலைதெறிக்க ஓடிவந்தாள்.

"ஆடுகால்... பொலீசு வந்திட்டுது... வீட்டிற்கு..." என்று அழுதாள்.

"ஏனணே, அழுகிறாய்?... பொலிசு வந்தால் என்ன...? என்று பெத்தாச்சிக்கு ஆறுதல் கூறிவிட்டு விடயத்தை விசாரித்து அறிந்து கொண்டார்.

"ஆரோ ஏதோ பெட்டிசம் போட்டிருக்கிறான்கள்... நீ விசர் மனிசி வந்த பொலிசுக்கு ஐஞ்சு பத்தைக் கையுக்கை வைச்சிருந்தியெண்டால் விசயம் சரியாப் போயிருக்கும்... முந்தி நான் காரோடேக்கை அடிக்கடி இந்தப் பொலிசுக் காரர் மறிப்பான்கள்... லைசென்ஸ் எங்கை என்று கேட் பான்கள்... எடுத்துக் கொடுத்தால்... இது ஐம்பது ரூபா லைசென்சோ என்று கேட்பான்கள்... எங்கை லைசென்சில ஒன்றையும் காணவில்லை என்பான்கள்... ஏன் என்ர படம் எல்லாம் இருக்குது தானே என்பேன்... அது இல்லை... பிறகு தான் தெரிஞ்சுது... லைசென்சுக்குள்ளை ஒருருவா ரெண்டுருவா இல்லையென்று... அதுக்குப் பிறகு நான் எப் பவும் லைசென்சுக்குள்ளை ரெண்டு ரூபாத்தாள் வைச்சிருப் பன்..."

"உந்தக் கதையளை விட்டிட்டு விசயத்துக்கு வா...... நாளைக்குக் கச்சேரிக்குப் போய் எறிமாடன்ரை பிறப்புச் சேட்டிபிக்கேற்றை வாங்க வேண்டும்... விதானையிட்டை யும் துண்டு வாங்க வேண்டும்..." என்றாள் பெரியபல்லுப் பெத்தாச்சி.

"அக்கை கோவியாதை... உண்மையா நீ எறிமாடனுக் குப் பிறப்புப் பதிந்தனியே...?"

"என்ன விசர் கதை கதைக்கிறாய்... சிவ சத்தியமாப் பதிஞ்சனான்..."

"அப்ப நாளைக்கு அலுவல் பார்ப்பம்... கொஞ்சம் சில்லறைக் காசு கொண்டு வா... அக்கை... எல்லாத்துக்கும் கிள்ளித் தெளித்தால் தான் அலுவல் நடக்கும்... இப்ப ஒரு அலுவல் பார்க்கிறது எண்டால் செல்வாக்குத் தேவை ... அல்லது பணம் தேவை..."

தரகர் ஆடுகால் காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்தார். பெரியபல்லுப்பெத்தாச்சி அறு நூறு ரூபா வரை இவ்வளவிற்கும் செய்ய நேர்ந்தது.

பெட்டிசங்கள் பிசுபிசுத்துப் போயின.

கலியாண ஏற்பாடுகள் எல்லாம் தடபுடலாக நடந்தன. கொத்தியின் இருப்பிடத்தில் பந்தல்கள் இடப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தன. பிணமெரிக்கும் சாம்பல் மேட்டில் மணவறை அமைக்கப்பட்டது.

பல்வகைக் கலியாணப் பலகாரங்கள் சுடப்பட்டன. இரண்டு மூன்று நாட்களாக அந்தப் பிரதேசமே கலகலப்பாக விளங்கியது.

— ஒரே கோலாகலந்தான்,

திருமணத்தைக் கபால பைரவக் குருக்களே நடாத்த இருந்தார்; பைரவ பூசையோடு தாலி கட்டுவதைப் பெரிய பல்லுப்பெத்தாச்சி விரும்பாத படியினால், ஓமம் வளர்த்தே தாலி கட்டுப்பட இருந்தது. கழுதைப் பல்லுக் கோஷ்டியினரும் எருமைமாடன் கோஷ்டியினரும் மேளக்கச்சேரிக்காக ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தனர். பிரபல போட்டோகிராபர், கந்தர்மடம் இலங்கேசைப் படங்கள் எடுக்க பிடித்து வந்திருந்தார்கள்.

இவற்றோடு, வாலாய முனிக்குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சியும் நடைபெற இருந்தது. இளவட்டங்களுக்கு இத

ஞல் பெரும் குஷி. ஆனுல், பெத்தாச்சிக்கு இந்த மெல் லிசை நிகழ்ச்சி பிடிக்கவில்லை.

'யாரோ பாடிய பாடல்களை— சினிமாப் பாடல்களை— ஏதோ தாமே இசையமைத்துப் படிப்பது போலப் பாடிப் பிழைக்கிற கூட்டமிது! இதனுலே இசையுலகிற்கே அவமா —ஸம்... சொந்தமாக, நல்ல பாடல்களை இசையமைத்துப் பாடினுல் பயனுண்டு' என்று முணுமுணுத்துக் கொண்டாள்.

எறிமாடனுக்குப் பாலறுகு வைத்துத் தோயவார்த்தார் கள். கொத்தி பாலறுகு வைக்கும்போது கண்ணீர் விட்டுக் கதறிஞள்.

'ஐயோ... எனக்குக் கல்யாணம் வேண்டாம். என்னை விட்டிடுங்கோ... எனக்கு எறிமாடனைப் பிடிக்கவில்லை...' என்று கதறிஞள். எவரும் அவளை மதிக்கவில்லை. அவளைப் பற்றி இழுத்துச் சென்று குட்டைக் குளத்தில் குளிப்பாட் டிஞர்கள்.

அவள் கதறிக் கதறி அழுதாள்: அரற்றிஞள்.

'பேய்ப் பெட்டை!... இவ்வளவு நடந்து போன பிறகு அழுகுது!... கலியாண ஏற்பாடெல்லாம் நடந்து முடிந்து போய்விட்டுது... இனி நிற்பாட்ட முடியுமே...!

அவளை அலங்கரித்து, மணவறைக்கு இழுத்து வந்தார் கள். மாப்பிள்ளை முறுக்கோடு அமர்ந்திருந்த எறிமாடன் கொத்தியை நிமிர்ந்து பார்த்தான்.

— அவன் இதயம் பயத்தால் ஒருகணம் நின்றுவிடும் போலத் துடித்தது. கொத்தியின் அலங்காரத்தைக் கண்டு அல்ல.

மணப்பந்தலின் ஒரு மூலையில் கையில் ஒரு குழந்தையு டன் நிற்கும் ஒருத்தியைக் கண்டுதான். அத்தோடு, கலி யாணத்திற்கு அழைக்காத பல முகங்களும் அவனுக்குத் தென்பட்டன,

## அத்தியாயம் 16

# பேய்க்கலியாணம்

கபாலபைரவக் குருக்கள் நியம ஒழுங்குகள் தவறாமல் கலியாணத்தை நடாத்தி வைப்பவர். காப்புக் கட்டி ஓமம் வளர்ப்பதிலிருந்து அம்மி மிதித்து அருந்ததி காட்டுவது வரை ஆறுதலாகவும் ஒழுங்காகவும் செய்து முடிப்பவர்.

ஆனால், இவரைக்கொண்டு கலியாணத்தை நடாத்துவ தென்றால் செலவு மிக அதிகமாகும். எவ்வளவு தூரம் அரிசி தேங்காய், பழம் என்பவற்றைத் தானமாக 'வறுக முடி யுமோ' அவ்வள தூரம் வாங்கிவிடுவார். நவக்கிரக தானம், பைரவதானம் என்று நூற்றெட்டுத் தானங்களின் பெயரால் எக்கச்சக்கமாக வாங்கிவிடுவார்.

எதிமாடனுக்குக் காப்புக் கட்டும்போது, அவன் மெது வாகக் கூறினான்.

'குருக்கள்... கொஞ்சம் கெதியாய்ச் சடங்குகளை முடி யுங்கோ'

'அதுக்கென்ன... ஆனா, இன்னும் தாலி கட்டுவதற்குரிய வேளை நெருங்கவில்லை...' எல்லாம் செய்யச் சரியாகவரும். ரச்சுப் பொருத்தமும் இல்லாத படியால் நவக்கிரகதானம் செய்துதான் தாலி கட்டவேண்டும்'...

ஓமம் வளர்க்கப்பட்டது.

'பொம்பிளையை அழைத்து வாருங்கள்...' என்றார் குருக்கள்.

கொத்தியை அலங்கரித்து இழுத்து வந்தார்கள். அவள் திமிறியபடி வந்தாள்.

ஆகா எத்தகைய அலங்காரம்?



கொத்திப்பெண் விகாரிதான்!

'கிரந்தம் பண்ணுகிறவை வாருங்கோ... பொம்பிளையின் பெற்றோர் அங்கை மாப்பிள்ளையின் பெற்றோர் இங்காலை' என்றார் குருக்கள்.


'தகப்பனில்லை' என்று கண் கலங்கினாள் பெத்தாச்சி.

சடங்குகள் நடந்தன.

'கூறையைப் பொம்பிளையின்ர கையிலை கொடுத்து உடனை தாலியைக் கட்டவேணும்......' என்று எறிமாடன் குருக்களிடம் சத்தூக்காரமாகக் கூறினான். எறிமாடனை நிமிர்ந்து பார்த்த குருக்கள் ஒப்புக்கொண்டார்.

தரகர் ஆடுகால் அரிசி, காய்கறி, தேங்காய், கூறைச் சேலை, தாலிக்கொடி நிறைந்த தட்டத்தை எடுத்துக் கொண்டார்.

மண்டை ஓட்டினுள் நுழைக்கப்பட்ட முற்றி விளைந்த சாரைப் பாம்பு, தாலிக்கொடியாக நெளிந்தது. எல்லாப் பேய் மக்களும் அதனைத் தொட்டு ஆசீர்வதித்தார்கள்.



எறிமாடன் தாலியைக் கையில் எடுத்தான். அப்போது—


"நிறுத்துங்கள்... நிறுத்துங்கள் ... என்ற கூக்குரல் எழுந்தது. கையில் ஒருகுழந்தையுடன் ஒரு பெண் மணவறையை நோக்கி ஓடிவந்தாள். அவளைத் தடுக்கப் பலர்முயன்று தோற்றனர்.

"இவர் என் கணவர்...... சட்டப்படி என்னை மணந்து கொண்டவர்! இது இவரின் குழந்தை... என்னை ஏமாற்றி விட்டு" என்று அவள் கதறினாள்.

எறிமாடன் வேகமாகக் கொத்திக்குத் தாலி கட்ட விரைந்தான். கொத்தி விரைந்து ஒதுங்கினாள். எறிமாடன் முற்றுமே எதிர்பாராத நிகழ்ச்சி அப்போது நிகழ்ந்தது.

எங்கிருந்து சுடலை மாடன் தோன்றினான்? அவன் பக்கத்தில் துணையாக எருமைப்பல்லன்... முனிசுழியா.

தன் முஷ்டியால் சுடலைமாடன் எறிமாடனை ஓங்கி இடித்தான். அது மட்டுமல்ல. அவனை அலாக்காகத் தூக்கி பந்தலுக்கு வெளியே வீசியும் விட்டான்.



மணப்பந்தல் குழம்பியது. எல்லோரும் அங்குமிங்கும் ஓடினார்கள். ஒருவரோடொருவர் மோதிக் கொண்டார்கள்.

பெத்தாச்சி 'ஏ' வெளியே ஓலமிட்டாள். ஊத்தைக்குடியன் கோபத்தோடு சுடலைமாடன் மீது பாய்ந்தான். எருமைப்பல்லனும் முனிசுழியாவும் ஊத்தைக் குடியனை தடுத்துப் பிடித்தனர்.

தூக்கி வீசப்பட்ட எறிமாடன் கோபத்தோடு எழுந்தான். எழுந்த வேகத்தோடு சுடலைமாடனை நோக்கிப்பாய்ந்தான். இருவரும் கட்டிப் புரண்டார்கள். மலைகளைப்போல மோதிக்கொண்டார்கள்.

ஊத்தைக்குடியனோடு இழுபட்டதால் சுடலைமாடனைக் கவனிக்க நண்பர்களால் முடியவில்லை.

'ஐயோ என்றை மோனைக் கொல்கிறான்...... பாவி... பாடையிலை போவான்' என்று பெரியபல்லுப் பெத்தாச்சி ஓலமிட்டாள்.

கொத்தி 'திக்'பிரமை பிடித்துப்போய் நின்றாள்.

சுடலைமாடனின் மண்டை பிளந்து ரத்தம் ஒழுகியது. எறிமாடனின் ஒரு விழியிலிருந்து உதிரம் வழிந்தது. சுடலை மாடனால் நீண்ட நேரம் ஈடுகொடுக்க முடியவில்லை.

எறிமாடனின் முரட்டுக் கரங்கள் சுடலைமாடனின் கழுத்தை முறிக்கி நெரித்தன.

'கொத்தி'... என்று சுடலைமாடன் அலறினான்: அவ்வளவு தான்.

அந்த உத்தம காதலனின் கதை முடிந்தது; ஓ என்று அலறினாள் கொத்தி.

சுடலைமாடனின் அலறல் கேட்டு எருமைப்பல்லன் திரும்பினான். நண்பன் வெட்டி எறிந்த ஆலமரமாகக் கிடப்பதையும், எறிமாடன் வெறிபிடித்துத் தள்ளாடி நிற்பதையும் கண்டான். வெறி அவனை ஆட்கொள்ள, எறிமாடன் மீது பாய்ந்தான். தனது பற்களால்எறிமாடனின் கழுத்தை...

வெறி தணிந்து எழுந்தபோது எறிமாடனின் உயிரற்ற உடல் தான் கிடந்தது.

'நான் எதையோ நினைக்க வேறெதுவோ நடந்து போச்சுது...' என்று கண்ணீர் விட்டான், முனிசுழியா.

'அன்பே, சுடலைமாடா......... உன் அன்பை உணராத பாவி நான். என்னை இங்கை தவிக்க விட்டிட்டு நீ மட்டும் போட்டியே? நான் மட்டும் ஏன் இருப்பான்... என்று சுடலை மாடனின் உடல்மீது விழுந்து புலம்பினாள் கொத்தி.

பொழுது புலர்ந்தது.


அடுத்த நாள் நள்ளிரவு. குட்டைக் குளத்தின் அருகில் ஓங்கி வளர்ந்திருந்த ஆலமரத்தில் ஒரு பேய்மகளின் உயிரற்ற உடல் தொங்குவதைப் பலர் கண்டனர்.

முற்றிற்று.

# எமது அடுத்த வெளியீடு!

''சமூகத்தின் மெல்லுணர்வுகளை நம் வாழ்க்கையின் அங்கங்களாக தனித்தனியே பரவவிட்டு, நம்மையே அதன் பாத்திரங்களாக, குணச்சித்திரங்கள் கொண்ட சிற்பிகளாக மாற்றி இலக்கிய உலகில் சாதனை புரிந்தோர் எத்தனை பேர்?

விரல் விட்டு எண்ணிவிடலாம். அவர்களுள் ஒருவர்,



யுகசந்தியின் சிற்பியான

## மணிவாணன்

அவர்கள்.


அவரது நவீனமான

# காற்றில் மிதக்கும் சருகுகள்

எமது நான்காவது மாணிக்கப் பிரசுரமாக வெளிவருகிறது.

மாணிக்கம் இலக்கிய உலகின் மங்கா ஒளிவிளக்கு.

# "கொத்தியின் காதலின்" சிருஷ்டிகர்த்தா இவர்



யுகமாறுதல்களின் சிற்பிகளாய் — எழுச்சி பெற்றுத் தோன்றிய இளம் எழுத்தாளர்கள் ஒரு சிலர்—மண்ணையும் உதிரத்தையும் உயிர்த்துடிப்புக்களாக்கி இவர்கள் மகிழ்ந்தபோது ஈழத்து இலக்கிய உலகு விழித்துக்கொண்டது.

அன்றே இலக்கியப் புரட்சியும் ஆரம்பமாகியது. இல்லையென்ருல் மேடையிலும்-அரங்குகளிலும்-மட்டுமே விமர்சிக்கப்பட்டு வந்த இலக்கியம் - ஒரு ஊரவர்களால் விமர்சிக்கப்பட்டு பாராட்டப்பெற்று ஒரு எழுத்தாளரை ஊர்வலமாக அழைத்துச் சென்று கௌரவித்திருக்குமா?

யார் இந்த எழுத்தாளர்?

வாடைக் காற்றைப் படைத்த செங்கை ஆழியான் தான் அவர். அவரை—

"பற்பல படைப்புக்கள் பெருகட்டும்: அதனுல் தமிழ் இலக்கியம் வரலாற்றில் பொன்னெழுத்துக்களினுல் இடம் பெறட்டும் என்னும்-ஆவலினுல் அவரை கௌரவிக்கிருேம்.

புரட்சிக்கு என்றுமே சளைக்காதவர். சிரித்திரனில் தொடர் கதையாக வந்த இதனை பல மாறுதல்களுடன் மாணிக்கப் பிரசுரமாக வெளியிடத் தந்திருக்கிருர். மாணிக்க வாசகர்களுக்கு நல் விருந்து இது. சுவைப்பார்கள்-மகிழ்வார்கள் என்பது உறுதி.

---

**மாணிக்கப் பிரசுரம்**

29. கல்யாணி வீதி கொழும்பு 6

தொலைபேசி: 85618